www.tamilarangam.net

# மனிதம்



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SE, ...ANCE

Manitham Mai 1993 21

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மற்றுமோர் சித்திரை. . . . . . . . . . .

நிச்சயமில்லாத
ஆயுளைச் சுமந்து
கொண்டு
இன்றுமொரு சித்திரை . . . . .

சோகத்து வடுக்களின்
சுவடுகளைத்
தூசிதட்ட
மற்றுமொரு புதுவருடம்.

எம்
சொந்த நினைவுகளில்கூட
நாம்
சனாச்சாரவாதிகளின்
சுதந்திரமற்றவர்கள்.

கந்தகப் புகைகளுக்கும்
இடையில்,
வருடபகவான்
குதிரை மீதேறி
குதூகலம் தெரிவிக்கின்றானாம்.

வருடப் பிறப்பு
கொண்டாடுவோம் பின்னர்
இன்றுமொரு
ஆண்டு நிச்சயமாய்
வரும்.

இப்போது . . . . .
பாக்கியுள்ள
ஆட்டுத் திவசங்களை
கொண்டாட முடிப்போம்.

பூ ரண திதியில்
அட்டமி நவமி
பாராமல்
பிரேத ஊர்வலம்
போகிறது . . . . .

மாடுகள் இல்லை
மடிந்து விட்டன . . .
அறுகம் புல் இல்லை . . . . .
இனி நம் பூ மியில் வளராது.
பிள்ளையார் பிடிக்க
எங்கு போவோம் . . . . .

மண்ணைப் பிசையுங்கள்
நாற்புறமுள்ள
மண்ணைப் பிசையுங்கள்.
மனித மண்ணில்
இறை அவதாரம் . . . . .

மனிதனும் இறைவனும்
இதிலாவது
கலந்து போகட்டும்.
ஆம் . . . . .

தோழர்களே!
உயிரைக் கையில்
பிடித்துக்கொண்டு
உலகிற்குச் சொல்வோம்
"சித்திரைச் சோகங்கள்"
இனி ஒரு
சித்திரை வர வேண்டாம்
என . . . .

இரவும் வேண்டாம்
பகலும் வேண்டாம்
வருடம் வேண்டாம் . . . .
மரணம் வேண்டும்
மரணம் வேண்டும்
என்று உரத்து . . . .

**இளைய அப்துல்லா**
இலங்கை

www.tamilarangam.net

# மனிதம்



März
பங்குனி
+
April
சித்திரை

1993
Zwei monatlich
einmal
(இரு மாதத்திற்கு ஒருமுறை)

Impressum
§
Herausgeber:
Manitham
Postfach 12
3000 Bern 11
Schweiz

Redaktion:
V. Logadas, M.Narendran,
S.Ragawan
&
Manitham Redaktion Komitee

Abonnement:
22 Sfr (Pro Jahr)

Konto:- Manitham
3000 Bern 11
Pc: 30-37152-1
Bank Konto
Schweizerische
Kreditanstalt
3001 Bern
Manitham
220348-70

Druck
Böhlen Druck Ag
4912 Aarwangen

**கடலம்மா..... நீயே சொல்**
**" குமுதினி " ஏன் பிந்தி வந்தாள்**
**எம்மவரின் அவலங்களைச்**
**சடலங்களாய் சுமந்து கொண்டு**
**குமுதினி குருதி படிய வந்தாள்,**
**கடலம்மா கண்டாயோ**
**கார்த்திகேசு என்னவானான் ?**
**எந்தக் கரையில்**
**உடலூதிக் கிடந்தானோ ?**

-நிலாந்தன்.

போதிய உணவில்லை...... பசிக்கொடுமை தாங்க முடியாமல் நித்திரையின்றிப் பரிதவிக்கும் குழந்தைகள், சிறுவர்களின் கதறல் சத்தம்; உயிரைப் பிடித்துக் கொள்வதற்கான குறைந்தளவு உணவுக்குக்கூட பெரும் தட்டுப்பாடு; "3-6 மாதங்களுக்கு ஒரு முறை கப்பலில் அனுப்பப்படும் உணவுப் பொருட்களும் ஆறிலொரு பகுதியினருக்குக்கூட போதுமானதாக இல்லை." என்று அரச அதிபர்களின் முறைப்பாடு; சனங்களால் தொட்டுப்பார்க்கக்கூட முடியாதளவிற்கு பொருட்களின் விலை; இவை மட்டுமா?......... வைத்திய வசதி இல்லை. மருந்துத்தட்டுப்பாடு. பால்மா தட்டுப்பாடு. பெருகி வரும் கிருமிகளினால் தொற்று நோய்களின் அதிகரிப்பு என்று தொடரும் தாய் மண்ணில்.........இன்னும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என்று தென் னிலங்கை வரை; தொழில் துரவு, வேலை வாய்ப்பு, உத்தியோகம் என்று தொடரும் உறவுகள்........ வெளிநாடுகளில் வாழும் உறவினர்களுடனான தொலைபேசித் தொடர்புகள், பணவருவாய்கள்....... என்று அவலங்களின் அமுக்கமும், வாழ்வியல் நிர்ப்பந்தங்களும் சனங்களை குடாநாட்டிற்கு வெளியே பிடித்துத் தள்ளுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் எல்லைகளைக் கடப்பதற்காக (அகதிகளாக வருபவர்கள்) புதிய புதிய பாதைகளைத் தேடிப்பிடிப்பதுபோல்........ இருட்டறையில் வைக்கப்பட்ட செடிகள் சிறிய துவாரங்களினூடே வரும் ஒழிக்கீற்றுக்களை நோக்கித் தளிர்ப்பது போல் யாழ்குடாநாட்டிற்கு வெளியே வருவதற்காக உயிரைப் பணயம் வைக்கிறார்கள் மக்கள். சொந்த மண்ணில் பயணிப்பதற்கான பகீரதப்பிரயத்தனங்கள்.....

அதிலொன்றுதான் கிளாலிச்சம்பவம். இவ்வருடம் ஜனவரி 2 இல் கிளாலி கடலேரியில் பயணித்த மக்கள் "கும்" இருட்டில் "ஐயோ" "அரோகரா" என்று கதறக்கதற கடற்படை வெறியரின் மனித வேட்டைக்கு ஆளாயினர். மனித உயிர்களை ஏந்திச்சென்ற படகுகள் சடலங்களைச் சுமந்து நிற்க, குருதி வெள்ளத்தால் தோய்ந்த படகுகள் டீசல் ஊற்றிக் கொழுத்தப்பட்டன. 85 இல் நெடுந்தீவுக்கடலில், 86 இல் மண்டைதீவுக்கடலில், இன்று கிளாலிக்கடலேரியில்..... நாளை...?

" ஆனையிறவுப் பாதையை திறந்து போக்குவரத்திற்கு வழி விடுவதாக கூறுகிறது" அரசு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"இல்லை ! தரை மார்க்கமாக யாழ்குடாநாட்டிற்குள் பிரவேசிப்பதற்கான கபட நாடகம் இது. பூநகரிப்பகுதியில் இருந்து துருப்புக்களை வாபசு பெற்று கேரதீவு - சங்குப்பிட்டி கடற்பாதையை திறந்து விடுவதுதான் நியாயம்" எனக் கோருகிறது விடுதலைப்புலிகள் தரப்பு !

ஏற்கனவே அண்மையில் நிகழ்ந்த இராணுவப்படையெடுப்பினால் அளவெட்டிக் கிராமமக்கள் உடைமைகளைப் பறிகொடுத்து, வீடு-வாசல்களை விட்டு விரண்டோடிய துயரம் இன்னும் தொடர்கின்றது. இராணுவ தந்திரோபயரீதியில் புலிகள் கூற்றில் இருக்கை கொண்டுள்ள நியாயம் நிராகரிப்பதற்கில்லை. ஆயினும் மறுபுறத்தில் யாழ்பாணப்பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் அமைப்பு கூறுவது போல "மக்களை தொடர்ந்தும் நெருக்கடி நிலைமைகளுக்குள் வைத்துக் கொள்ளும் தந்திரோபாயத்தை (தமது உயிர் வாழ்வுக்காக) புலிகள் மேற்கொள்பவர்கள்" என்பதை மறுக்கவும் முடியாது. போராட்டங்களின் போது ஏற்படும் தவிர்க்க முடியாத (சகித்துக்கொள்ளவேண்டிய) நெருக்கடிகளை காரணம் காட்டிக்கொண்டு அதன் பின்னே ஒழித்து நின்று நியாயம் கற்பிப்பது புலிகளின் வரலாறு முழுவதும் தொடரத்தான் செய்கிறது.

இராணுவப் படையெடுப்புக்களானாலும் சரி, குடாநாட்டுக்குள் அமுங்கிக் கிடப்பதானாலும் சரி, குடாநாட்டிற்கு வெளியே சென்று வருவதானாலும் சரி அவலப்படுவதும், அவதியுறுவதும் மக்களே !

தமிழ் மக்கள் பற்றி சிந்திக்கும் நோக்கு அரசுக்கு கிடையாது. பதிலாக யாழ்ப்பாணம்+மக்கள்=புலிகள் என்ற சமன்பாட்டினடியாக தமிழ்மக்களை சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் அழித்தொழிப்பதுதான் அரசின்-அரச படைகளின் இராணுவக் கோட்பாடு. இக்கோட்பாட்டிற்கு இரையாகிப்போன இன்னொரு சம்பவம்தான் கிளாலி கடலேரிப் படுகொலை !

மக்களும் போராட்ட சக்திகளாக மாறாத வரை, மக்களை போராட்ட சக்திகளாக மாற்றுவதற்குரிய அரசியல் உருவாகாத வரை, அதற்கான ஜனநாயக வழியைத் தோற்றுவிக்காத வரை இத்தகைய கோர நிகழ்வுகளும்-அவலங்களும் தொடரவே செய்யும்.

**சந்தாவிபரம்:-**

**இலங்கை - இந்தியா வாசர்களிற்கு இலவசம்**

**தனிப்பிரதி 3Sfr**

**ஒருவருட சந்தா 22 Sfr**

**ஐரோப்பிய நாடுகளிற்கான சந்தா 25 Sfr**

Postchek Konto:-
30-37152-1
Manitham

Bank Konto:-
Schweizerische Kredit Anstalt
3001 Bern
Nr:- 220348-70

## நூல் அறிமுகம்

### *தாகம்*

***(இரு மாத இதழ்)***

*- தரமான கலை இலக்கிய தேடல் நிறைந்த ஒரு வாசகர் குழாமை உருவாக்குதலும் அவர்களுடனான தொடர்புகளை வளர்த்தலும்*

*- பிறமொழி படைப்புகளையும் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தலும் தொடர்புபடுத்தலும்*

*- ஐரோப்பிய நாடுகளில் வெளிவரும் கலை இலக்கிய வெளியீடுகளுடனான தொடர்புகளை ஏற்படுத்தி தேடலை அகலித்தல்.*

*-ஈழத்து இலக்கிய பரப்பு நோக்கி திருக்கோணமலையின் கலை இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லல்.*

*- தாகத்தின் தொடர்ச்சியான வருகைக்கும் இருப்புக்கும் உதவும் முகமாக தாகம் வாசகர் வட்டத்திற்கு குறைந்தது 500 அங்கத்தவர்களையாவது சந்தாதாதராகச் சேர்த்தல்*

*தொடர்புகளிற்கு:-*
*W. Michael Collin*
*Faculty of Commerce& Management*
*50, New Road,*
*Batticaloa*
*Srilanka*



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### தமிழ் அகதிகள் சம்பந்தமாக

# ஒரு நேர்காணல் !

சுவிசிலிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற செய்தி சுவிசு அரசின் சமஷ்டி செயலகத்தின் அகதிகளுக்கான உயர் அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. 92 புரட்டாதி 1ம் திகதிக்கும் 93 ஜனவரிக்கும் இடைப்பட்ட காலத்தில் சுவிசிற்குள் பிரவேசித்த கிட்டத்தட்ட 1000 தமிழ் அகதிகளின் விசாரணைகள் முடிவுற்ற நிலையில் இவர்கள் முதற்கட்டமாக திருப்பி அனுப்பப்படவுள்ளார்கள். சுவிசு அரசின் இந்த முடிவானது வெற்றியளிக்கும் பட்சத்தில் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் அங்கிருக்கும் இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்பக்கூடிய வாய்ப்புக்களை அதிகப்படுத்தியதாகவே இருக்கும். சர்வதேச மன்னிப்புச்சபை சுவிசு அரசின் இந்த முடிவை கண்டித்திருக்கிறது. வடக்கில் நிகழும் போரும் கிழக்கின் ஸ்திரமற்ற சூழலையும் கொழும்பில் நிகழும் கண்மூடித்தனமான கைதுகளையும் காரணம் காட்டிய ஐ.நா வின் அகதிகள் பிரிவின் அதிகாரிகள் கொழும்பில் உறவினர்கள் இருக்கும் பட்சத்தில் அத்தகைய தமிழர்களை திருப்பி அனுப்பலாம் என ஆலோசனை கூறியிருக்கிறது. சுவிசு அரசு உத்தியோகபூர்வமாக இந்த முடிவு எடுப்பதற்கு முன்னரும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற காரணத்தின் அடிப்படையில் இதுவரை 2000 பேர் அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று அரசே அறிவித்திருக்கிறது. 87 இல் சுவிசு அரசு எடுத்த முடிவைப் போலன்றி இம்முறை மிகவும் கடுமையானதாகவே இருக்கும் என சமஷ்டி செயலகத்தின் அகதிகளுக்கான அதிகாரிகளின் கூற்றிலிருந்து தெரிகின்றது. 87 இல் 40 தமிழர்களை திருப்பி அனுப்ப சுவிசு அரசு எடுத்த முடிவை எதிர்த்து அகதிகளுக்கு ஆதரவாக நிகழ்ந்த போராட்டங்களை கருத்தில் கொண்டால் இத்தகைய சூழல் இன்று மிகவும் குறைவானதாகவே இருக்கிறது. முக்கியமாக இங்கு வாழும் தமிழர்களே அரசின் இம்முடிவை பலமாக எதிர்க்கும் வகையில் ஒரு பொது நடவடிக்கையில் இன்னும் ஈடுபடவேயில்லை. இந்த நிலைமைகளில் அண்மையில் இலங்கை சென்று திரும்பிய முன்னாள் Cfd யின் தமிழர் ஒருங்கிணைப்பு எனும் வேலைத்திட்டத்தில் வேலை செய்த சமூக சேவையாளரும் தமிழ் அகதிகளோடு அதிக ஈடுபாடு கொண்டவருமான Hugo lager என்பவருடன் நிகழ்ந்த எமது நேர்காணல் கீழே தரப்படுகின்றது.

>> ஆசிரியர் குழு <<

? நீங்கள் சிறீலங்கா சென்றதன் நோக்கத்தினை நாம் அறிந்து கொள்ளலாமா ?

! ஆம் நான் 1983ம் ஆண்டிலிருந்து தமிழர்களிற்கு உதவி வருகின்றேன் ஆரம்பத்தில் நான் Cfd யின் தமிழர் ஒருங்கிணைப்பு எனும் வேலைத்திட்டத்துடன் இணைந்து வேலை செய்தேன். இன்று அகதிகள் ஆலோசகராக துான் எனும் இடத்தில் வேலை செய்து வருகின்றேன். பொதுவாக அனைத்து அகதிகளுக்கான ஆலோசனை வழங்கி வந்தாலும் ஏராளமான தமிழர்கள் என்னிடம் ஆலோசனை பெற்று வருகின்றனர். இதனால் யாழ்ப்பாணம் சென்று நிலைமைகளை கண்டறிய வேண்டுமென்பது எனது நீண்ட நாள் அவாவாக இருந்தாலும் யாழ்ப்பாணம் செல்ல முடியாததால் எனது பிரயாணத்தினை பலதடவை பின்போட்டேன். ஆனால் இன்று திரு.Arbenz 92 September இற்கு பின்பு வந்த தமிழர்களை கொழும்பிற்கு அனுப்பப்போவதாக அறிவித்த பின்னர் கொழும்பு நிலைமையையும் இலங்கையில் உள்ள அகதிகள் பற்றியும் அறிய ஆவல் கொண்டே இப்பிரயாணத்தை மேற்கொண்டேன்.

? சுவிற்சலாந்தில் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதாக திரு.Arbenz அறிவித்தது பற்றி விளக்கமாக கூற முடியுமா ?

! September 92 இற்கு பின்னர் வந்தவர்கள் ஜேர்மனி போன்ற ஏனைய நாடுகளில் இருந்து வந்தவர்கள். இவர்கள் அனைவரையும் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்போவதாக அறிவித்துள்ளார். அத்துடன் September 92 இற்கு பின்னர் வந்த அகதிகளின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் 30 நாட்களிற்குள் மீண்டும் அப்பீல் செய்ய உரிமை உண்டு என குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

? கொழும்பினை இருப்பிடமாக கொண்டவர்கள் மட்டுமா திருப்பி அனுப்பப்படுவார்கள்?

! இல்லை. இலங்கையில் எப்பாகத்தில் உள்ளவராயினும் சரி 92 September இற்கு பின்னர் வந்தவர்களாயின் திருப்பி அனுப்பப்போவதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

? 92 September இற்கு பின்னர் வந்த ஓர் தமிழ் பெண் ஏற்கனவே வந்த ஒரு தமிழரை திருமணம் செய்தால் நிலைமை எப்படி இருக்கும் ?

! ஏற்கனவே இங்கு தஞ்சம் கேட்டவர் B பத்திரம் வைத்திருந்தால் அப்பெண் திருப்பி அனுப்பப்படமாட்டார். ஆனால் அகதி தஞ்சம் கோரியவராக இருப்பின் அவரின் வழக்கும் திருப்பி ஆராயப்பட்டு இருவரையும் திருப்பி அனுப்ப முயலக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பினும் இம்முடிவினை நிராகரிக்க சந்தர்ப்பம் உண்டு.

? இவ்வாறு கொழும்பிற்கு திருப்பி அனுப்புவதைப் பற்றி U.N.H.C.R உம் ஏனைய உதவி நிறுவனங்களும் என்ன கூறுகின்றன ?

! U.N.H.C.R உம் ஏனைய உதவி நிறுவனங்களும் கொழும்பில் உறவினர்களை கொண்டுள்ளவர்களை மட்டுமே திருப்பி அனுப்பலாம் என அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

? இலங்கையில் எந்த இடங்களிற்கு விஜயம் செய்தீர்கள் ?

! கொழும்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களிற்கு சென்றிருந்தேன்.

? கொழும்பு தமிழர்களிற்கு பாதுகாப்பு உள்ள ஓர் இடமாக கருதுகின்றீர்களா ?

! இல்லை.

? கொழும்பு நிலைமைகளையும், கொழும்பு வாழ் தமிழர்களின் நிலைமைகளையும் பற்றி கூறமுடியுமா ?

! பல தமிழர்கள் உறவினர்களுடன் அண்டி வாழ்கின்றனர். இன்னும் பல இளைஞர்கள் லொட்ஜ்களில் ஐரோப்பா, கனடாவிலுள்ள உறவினரின் உதவியால் தங்கி நிற்கின்றார்கள். இன்னும் பலர் குடும்பம் குடும்பமாக அகதிகளாக அகதி முகாம்களில் முடங்கிக்கிடக்கின்றனர். இவ்அகதிகள் மன்னார், திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருந்து வந்துள்ளனர்.

கொழும்பை மேலோட்டமாக பார்த்தால் அமைதியாக இருப்பதாகவே தோன்றுகின்றது. ஏனெனில் இராணுவத்தாக்குதல் எதுவும் இல்லாததால் அப்படித் தெரிகின்றது. ஆனால் சற்று உற்று நோக்கினால் அதன் உண்மை நிலை புலப்படுகின்றது. அனைத்து அரச திணைக்களங்களும் இராணுவ பாதுகாப்பின் கீழ் உள்ளது. கொழும்பிலும் பல Check Point கள் உள்ளது. ஆனால் வடகிழக்குப்பகுதிகள் போலல்லாது வாகனங்களை மேலோட்டமாக கண்காணிப்பதற்கும், வாகனங்களின் வேகத்தினை கட்டுப்படுத்துவதற்குமே அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

தமிழ் மக்கள் ஓர் பயபீதியுடனேயே வாழ்க்கை நடாத்துகின்றனர். எப்பவும் ஏதும் நடக்கலாம் என்ற பயமே அதற்கான காரணம் என்பதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

புறக்கோட்டை கொட்டாஞ்சேனை போன்ற விலாசங்களில் இருப்போர் விசேடமாக அவதானிக்கப்படுகின்றனர். லொட்ஜ்,கொட்டல்களில் தங்குபவர்கள் எந்நேரமும் விசாரிக்கவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருட்களை பரிசோதிக்கவும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் அனைத்து அதிகாரமும் பொலிசாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

சுவிற்சலாந்தில் யாரும் கைது செய்யப்பட்டால் கைது செய்யப்பட்டவரின் உறவினர்களாயினும் சரி, நண்பர்களாயினும் சரி கைது செய்யப்பட்டவரின் விபரங்களை அறிந்து கொள்ள உரிமையுண்டு. ஆனால் இலங்கையில் எவராவது கைது செய்யப்பட்டால் அவர் எக்காரணத்திற்காக கைது செய்யப்பட்டார் என்றோ எங்குள்ளார் என்றோ விடுதலை செய்யப்பட்டாரா இல்லையா என்பதைக் கூட அறியமுடியாது. இலங்கைப்பொலீசு நிலையங்களில் நியாயமான மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றதாக கொழும்பிலுள்ள மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் வாழும் தமிழர்கள் யாழ்ப்பாணமும் இல்லாமல் கொழும்பும் நிரந்தரம் இல்லாமல் வாழ்க்கை நடாத்துவதை நான் சந்தித்த குடும்பங்களின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

கொழும்பில் இரு முகாம்களை சென்று பார்வையிட்டேன். சரசுவதி மண்டபத்தில் மட்டும் 400 பேர் அகதிகளாக உள்ளனர். பம்பலப்பிட்டி கோயிலிலும் 400 அகதிகள் உள்ளனர். இங்கு குடும்பங்கள் சிறுசிறு குடிசைகள் அமைத்து வாழ்கின்றனர்.இவர்கள் காட்போட்டிலும், நிலத்திலும் படுத்துறங்குகின்றனர். ஆனால் சுவிற்சலாந்தில் உள்ள முகாம்கள் போன்று அல்லாது அங்கு அக்கம்பக்கத்தில் உள்ளோரும்,உறவினர்களும் எப்பவும் வந்து பார்த்த வண்ணம் உள்ளனர். இவ் அகதிகள் முகாம்களை அரசும் கத்தோலிக்க நிறுவனங்களும் தனியாரும் உதவிகளை வழங்கி ஆதரித்து வருகின்றனர்.

? ஏனைய அகதி முகாம் பற்றி கூறமுடியுமா ?

! மடுவிலும் பேசாலையிலும் பாரிய முகாம்கள் இருப்பதாக அறிந்தேன். ஆனால் அவ் முகாம்களை சென்று பார்க்கவில்லை. திருகோணமலையில் உள்ள ஓர் அகதி முகாமினை சென்று பார்த்தேன். இம் முகாம் உப்புவெளியில் Technical college இல் அமைந்துள்ளது. இம்முகாமில் உள்ள அகதிகள் இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள். இவர்கள் சொந்த இடங்களில் பாதுகாப்பின்மையால் திரும்பிச் செல்ல இயலாது முகாம்களில் முடங்கிக்கிடக்கின்றனர்.

திருகோணமலையில் நிலாவெளியில் உள்ள இன்னுமோர் அகதி முகாமினை சென்று பார்த்தேன். இம்முகாம்களில் உள்ளவர்கள் அக்கம் பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர்கள். பாதுகாப்பின்மை காரணத்தால் முகாமில் தஞ்சமடைந்துள்ளனர். இம்முகாம் சிறு சிறு குடிசைகளினால் அமைக்கப்பட்டு உள்ளது. கடந்த டிசம்பர் மாதம் வெள்ளப் பெருக்கினால் இவ் அகதி முகாம் குடிசைகள் பாதிப்புக்கு உள்ளாயின. இங்குள்ள அகதிகளுக்கு ஒரு கிழமைக்கு 380 ரூபா பெறுமதியான அரிசி, பருப்பு, மா, சீனி வழங்கப்படுகின்றது. இது பற்றாக்குறையாக இருந்த போதும் ஏனைய பொருட்கள் வாங்குவதற்கு இதனை விற்றே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்திற்கு அருகாமையில் உள்ள பண்டகசாலையில் 1000 இற்கு மேற்பட்ட அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். இம்முகாம் அகதிகள் நான் பார்த்த முகாம்களிலே மிகவும் வசதி குறைந்த முகாம். இங்கு பகல் அற்று எப்பவும் இருளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இம்முகாம் ஓர் ஒதுக்குப்புறமாகவும் அமைந்துள்ளது. இப்பண்டகசாலை பல தொன்கள் கொண்ட பண்டங்களை சேகரித்து வைக்கும் நிலையமாக முன்பு இருந்தது. தற்பொழுது தேவையற்றதினால் அகதி முகாம் ஆக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மட்டும் 6 இலட்சம் அகதிகள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

? எவ் உதவி நிறுவனம் சரிவர தனது கடமையை செய்து வருகின்றது ?

! சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் IFRK கூடியளவில் தனது முகாம்களை இலங்கையில் வைத்திருந்தாலும் அரச தரப்பு சிறைச்சாலை மனித உரிமை மீறல்களை, கண்டிக்காது ஓரவஞ்சகமாக நடந்து கொள்கின்றனர். இவர்களிற்கு மட்டுமே அனைத்து சிறைச்சாலைக்கு செல்வதற்கு அனுமதியும் உண்டு. அப்படி வசதி இருந்தும் காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களை இவர்கள் சரிவரக் கொடுப்பதில்லை.

இவர்களை விட கத்தோலிக்க உதவி நிறுவனங்களே பாரபட்சமின்றி தமது உதவிகளை வழங்கி வருகின்றது. இந்நிறுவனங்களுடன் கரிதாசு தனது உதவிகளை சரிவர செய்து வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அதிகாரம் யாருக்கு ?

சி. அமுதன்

அண்மைக்காலங்களில் ரசிய பாராளுமன்றத்திற்கும் அதிபர் ஜெல்சினிற்குமிடையே நிகழ்ந்த அதிகாரப் போட்டிக்கான தீர்ப்பை மக்களிடம் இருந்து பெறும் பொருட்டு ஏப்ரல் 25 ம் திகதி ஒரு கருத்து கணிப்பு தேர்தல் நடைபெற இருக்கின்றது. ஏப்ரல் 25 ம் திகதி! ரசிய கூட்டமைப்பிலுள்ள மக்கள் தங்களுக்கு எத்தகைய அரசு தேவை என்பதை தீர்மானிக்க போகிறார்கள். ரசிய மக்கள் யார் பக்கம் ? என்று தீர்ப்பு வழங்கும் நாளும் இதுவே. அதிபர் ஜெல்சினும் அவரது ஆதரவாளர்களும் ரசிய நாட்டில் உயர் அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை கொண்டு வரவே விரும்புகிறார்கள். ஜனாதிபதிக்கு சுதந்திரமான கைகள் இருந்தால்த்தான் நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களை செவ்வனே நடைமுறைப்படுத்த முடியும். மறுசீரமைப்புக்கும் ஜனநாயகத்திற்கும் தடை மதிலாக இருக்கும் கம்யூனிசிட்டுக்களையும் தேசியவாதிகளையும் எதிர்த்து வீழ்த்துவதாயின் ஜனாதிபதி ஆட்சியை கொண்டு வருவதே சிறப்பானது. சோவியத் யூனியன் சிதைப்போடு ஜனனித்த ஜனநாயகச் சிசுவையும் அதன் காவலர் ஜெல்சினையும் பாதுகாப்பதே நமது கடமை. இதுதான் ஜெல்சின் ஆதரவாளர்களின் கோசம்.

தேசியவாதிகளும் கம்யூனிசிட்டுக்களும் மீண்டும் ரசியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற நடாத்தும் போட்டியில் துணிச்சலான மிகப்பெரிய ஜனநாயகவாதியான ஜெல்சினை நாம் காப்பாற்றாமல் போய் விடுவோமாயின் ரசிய நாட்டில் தவழும் ஜனநாயக குழந்தையையும் பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களையும் கம்யூனிசிட்டுக்கள் கொலை செய்து விடுவார்கள். இந்த நிலைமைக்கு நாம் இடமளிக்கக் கூடாது என்று அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு பூனையுடன் வந்த புதிய ஜனாதிபதி கிலிங்டன், பிரான்சு அதிபர் மித்தராண்ட் முதல் சுவிசு அரசு ஈறாக ஜெல்சினிற்கான "அவசர உதவிகளை" அளிப்பதாக உறுதியளித்திருக்கின்றனர்.

ரசியநாட்டில் பொருளாதார மறுசீரமைப்பு+ஜனநாயகம்=ஜெல்சின் என்ற சமன்பாட்டை ஜெல்சின் ஆதரவாளர்களும் மேற்குலகமும் உச்சாதானம் செய்து கொண்டிருக்கும் போது; ஜெல்சினின் எதிராளிகளோ, ஜெல்சின் மேற்கு அரசுகளின் கைப்பொம்மை, சர்வாதிகாரி, மோசமான கீழான தந்திரவாதி என்று வெறுப்பை கக்குகிறார்கள். நாம் எமது மண்ணில் ஜனநாயகத்தைத்தான் வேண்டினோமே தவிர சவக் கிடங்குகளை தோண்டும்படி கேட்கவில்லையே என்று வெடிக்கிறார்கள். ஏனெனில் அதிபரின் சர்வாதிகாரப் போக்கு சோவியத் யூனியனின் பின்பு மிகவும் மோசமாக வளர்ந்துவருவது வெளிப்படை. அதிகாரங்களை தன்கையில் தொடர்ந்து குவித்து வருவது, எதிராளிகளைத் தாக்கும் தந்திரமான அணுகுமுறை, நாட்டின் உயர் அங்கமான பாராளுமன்றத்தையோ அதன் தீர்ப்புக்களையோ உதாசீனம் செய்யும்

போக்கு, நயமில்லாத எச்சரிக்கை செய்யும் பாணியிலான அவரது பேச்சுக்கள் போன்றவை ஜெல்சினின் எதிராளிகளால் மட்டுமன்றி பத்திரிகையாளர்களாலும் விமர்சிக்கப்படுகின்றன. ஜெல்சின் எமது நாட்டின் இறைமையை அந்நிய சக்திகளுக்கு தாரை வார்க்கப் போகின்றார். இவரது பொருளாதார திட்டங்கள் எமக்கு உள்ள வேலை வாய்ப்புக்களையும் பறித்தெறிந்துவிடும் என்று தேசியவாதிகளும்,கம்யூனிசிட்டுக்களும் கைகோர்த்துக் கொண்டு போராட்டங்களில் இறங்கியிருக்கின்றர். பல்வேறு சுதந்திர தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபடுகின்றன. புதிய கம்யூனிச இயக்கங்களும் தோன்றியிருக்கின்றன. ஜெல்சினால் தடைசெய்யப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிசிட்டுக்கட்சியும் உயர் நீதி மன்றத்தினால் தடைநீக்கம் செய்யப்பட்டதோடு மீண்டும் சோவியத் யூனியனை நிர்மாணிக்கும் நோக்கில் ரசியா முழுவதும் கிளைகளை அமைத்து வருகின்றன.

91 யூன் 12 இல் ரசிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் குடியரசு தலைவர்தான் ஜெல்சின். சோவியத்யூனியனுள் முட்டி மோதிக் கொண்டிருந்த அரசியல் பொருளாதார நெருக்கடிகளை கம்யூனிசிட்டு கட்சியாலோ கோர்ப்பார்ச்சோவாலோ தீர்க்க முடியாது என்று முழங்கிய ஜனநாயக இயக்கங்களையும்,தந்தை நாட்டு தேசபக்த குழுக்களையும் தன்வசப்படுத்திய ஜெல்சின் இந்த குடியரசு தேர்தலில் கம்யூனிசகட்சி வேட்பாளரை பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி கொள்ள முடிந்தது. 91 ஆவணி ஆட்சிக் கவிழ்ப்பும் அதை எதிர்த்த போராட்ட சக்திகளுக்கு இவர் கொடுத்த தலைமையும் சர்வதேச ரீதியில் ஜெல்சினை மிகப் பெரிய ஜனநாயகவாதியாக சித்தரித்தது. சோவியத் யூனியன் சிதைப்போடு அது வகித்த அனைத்து மேலாதிக்க தளங்களையும் ரசியாவின் உடைமையாக்கிக் கொண்ட ரசிய குடியரசின் தலைவர் ரசிய நாட்டின் உயர் தலைவராகவும் ஆனார்.

எந்தப் பொருளாதார நெருக்கடிகளை, ஜனநாயக மறுப்பை காரணம் காட்டி ஜெல்சின் அதிகாரத்திற்கு வந்தாரோ அந்த நெருக்கடிகளே இன்று ஜெல்சினுக்கு எதிரான மிகப் பெரியதோர் அலையை எழுப்பிவிடு இருக்கிறது. முழுமையாக மேற்கின் தயவை எதிர்பார்த்து அதற்கேற்ப பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்ற போது ரசியப் பாராளுமன்றம் எதிர்த்து வந்ததன் வெளிப்பாடே இன்றைய நெருக்கடி நிலைமைகளுக்கான முக்கிய காரணமாகும்.

ரசியாவில் தனியார் மயப்படுத்தல் உறுதி செய்யப்படும் பட்சத்தில்தான் ரசியாவிற்கு முழுமையாக உதவிகளை வழங்க முடியும் என்று அமெரிக்கா, ஜப்பான் உடன் மேற்க் ஐரோப்பிய நாடுகள் வற்புறுத்தி வருகின்றன. அக்டோபர் புரட்சியின் சாதனைகளில் ஒன்றான கூட்டு பண்ணைகள் எல்லாவற்றையும் கலைத்து நிலத்தை தனியாருக்கு சொந்தமாக்குவதினூடாகத்தான் தனியார் மயப்படுத்தல் சாத்தியமாகும். இதற்கான சட்ட திருத்த வரைபு ஜெல்சின் அரசுக்கு தேவையாக இருக்கின்றது. கோர்ப்பார்சோவால் தொடங்கப் பட்டு முடங்கிப்போன இந்த சட்டதிருத்த வரைபுத் திட்டத்தை ஜெல்சின் ரசிய பாராளுமன்றத்தில் முன்மொழிந்த போது பாராளுமன்றம் நிராகரித்து விட்டது. சந்தைப் பொருளாதாரத்திற்கு அவசியமான கட்டுப்பாடற்ற விலை பொருட்களின் விலையை பல பத்து மடங்கு உயர்த்தியதோடு மக்களின் எதிர்ப்புக்கு ஜெல்சின் அரசு முகம் கொடுக்க முடியாது தத்தளிக்கத் தொடங்கியது. இருந்தும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முதலாளித்துவப் பாதையில் தீர்வு காண வேண்டுமாயின் இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும்.

இதற்கான புதிய சட்ட வரைபுகளை ரசியப் பாராளுமன்றம் அங்கீகரிக்காத நிலைமையில் மக்களிடம் கருத்து கணிப்பீடு நடாத்தப் போவதாக 92 டிசம்பரில் நிகழ்ந்த 7வது காங்கரசின் கூட்டத் தொடரில் ஜெல்சின் முன்மொழிந்தார். ஜெல்சினின் இந்த கருத்துக் கணிப்பு குறித்த தேர்தல் திட்டமே 93 மார்ச் 10-29 காலம் முழுவதும் தொடர்ந்த மிகப்பெரிய நெருக்கடி நிலைமைகளுக்கான மையம் ஆகும். ஜெல்சினின் பொருளாதார திட்டங்களுக்கு எதிராக தேசியவாதிகளும் கம்யூனிசிட்டுக்களும் ஒன்றாக குரல் எழுப்பினர். பொருளாதார திட்டங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டதும் தனக்கு ஆதரவான பிரதமமந்திரியை விலக்கி காங்கிரசின் பெரும்பான்மையினரின் உடன்பாட்டுக்கு அமைய புதிய பிரதமமந்திரியையும் நியமித்தார். ஜெல்சின் காங்கிரசில் பெரும்பான்மை எதிர்த்தரப்புடன் செய்து கொண்ட சமரசம் ஜனாதிபதியா பாராளுமன்றமா நாட்டின் உயர் அதிகாரம் கொண்ட அங்கமாக இருக்க வேண்டும் என்ற கருத்து கணிப்பீட்டை ஏப்ரல் 11 இல் மக்களிடம் நடாத்த உடன்பாடு காணச் செய்தது. ஆயினும் இந்த காங்கிரசு கூட்டம் முழுவதும் இந்திய இலங்கைப் பாராளுமன்றத்திற்கு எந்த விதத்திலும்

www.tamilarangam.net

குறையாத சந்தைக் கடையாய் காட்சியளித்தது. ஒரு லட்சம் சுவிசு பிராங்குகளுக்கும் மேலாக ஒவ்வொரு காங்கிரசுக்கு செலவாக்கி சேறாடுவதுதான் அவர்களது வேலை. ஏனெனில் இந்த காங்கிரசில் பழையவர்கள்தான் இருக்கிறார்கள். இவர்கள் புதிய ரசியாவிற்கான நிலைமைகளை கணிப்பிடுவதாக இல்லை. என்று குறை கூறினார் ஜெல்சின் ஆதரவாளர் ஒருவர்.

ஜெல்சினின் எதிர் அணிக்கு தலைமை கொடுப்பவர் உப.ஜனாதிபதி அலெக்சாண்டர் றூாசோக்கியோ. இவர் வயதில் இளையவர்(46) ஆப்கான் யுத்தத்தில் விமானப்படையில் நீண்ட காலம் உயர் பதவி வகித்தவர். இவரது தந்தையார் சோவியத் யூனியனின் நிரந்தர இராணுவத்தில் பணி புரிந்தவர். மொசுகோவின் தென்பகுதியில் 43 ம் ஆண்டு நாசிப் படைகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டிருந்த போது பிறந்தவர்தான் இந்த றூாசோக்கியோ. 89 ம் ஆண்டு ஆப்கானில் இருந்து திரும்பிய பின்பு "தந்தை நாடு" முழக்கத்தில் தேசிய போல்சுவிக்களையும் ஜனநாயக சக்திகளையும் இணைத்துக் கொண்டவர். மரபான பொருளாதார சீர் திருத்தங்களை கோருபவர் மக்கள் நண்பர் தேசபக்தன் இராணுவத்திலும் செல்வாக்குள்ளவர் சரியான கம்யூனிஸ்ட் நாகரீக ஆடைப்பிரியன் என்றெல்லாம் பெயர் பெற்றவர். கம்யூனிச ரசியாவே இவரது கொள்கை. 91மார்ச்சில் சோவியத் யூனியன் பாராளுமன்ற மேடையை விட்டு வெளியேறிய ஜனநாயக மறுசீரமைப்புக் குழுவுக்கு தலைமை வகித்தவர். 92இல் கம்யூனிச ரசியாவுக்கான ஜனநாயகக்கட்சிஎன்னும் புதியகட்சியை தோற்றுவித்ததோடு "தேசிய புனர்நிர்மான" முன்னணியின் பல்வேறு சிறிய கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்துள்ளார். இந்த உபஜனாதிபதி றூாசோக்கியோ ரசியாவின் அடுத்த ஜனாதிபதிக்கான வாசல் கதவில் ஜெல்சினை நெருங்கி நிற்கிறார். இவருக்கும் ஜனாதிபதி ஜெல்சினுக்குமிடையே மிகப்பெரிய இடைவெளி. நாட்டில் இரண்டு ஜனாதிபதிகள் இருக்கிறார்களா? என்று கேட்குமளவிற்கு ஜெல்சினுக்கு சமமாக பிரபல்யம் பெற்றிருக்கிறார். 91யூனில் ரசிய குடியரசுத் தேர்தலில் ஜெல்சின் வெற்றி பெறுவதற்கு இவரது ஒத்துழைப்பே பெரும் பங்காற்றி இருக்கிறது.

ஜெல்சின் பாராளுமன்றத்தையும் காங்கிரசையும் பழமைவாதிகளின் கூடாரம் என்று உதறிச் செல்லும்போது றூாசோக்கியோ இவர்கள் மத்தியில் செல்வாக்குள்ளவராக இந்த அரசு அமைப்புமுறையை அங்கிகரித்து நிக்கிறார். இராணுவத்தில் ரசிய மேலாதிக்கத்தை விரும்புவோர் முதல் ஜெல்சினின் பொருளாதாரத்திட்டங்களை நிராகரிக்கும் சக்திகள்வரை உபஜனாதிபதியின் பின்னால் திரள்கின்றனர்.

காங்கிரசில் தேசிய சக்திகளும் கம்யூனிச சக்திகளும் பலம் கொண்டவர்களாய் ஜெல்சினை அச்சுறுத்துகின்றனர்.

இன்றைய புதிய ரசியாவுக்குத் தேவையானது உயர் அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி, புதிய பாராளுமன்றம், புதிய அரசு. இந்தக் கோரிக்கையை ஏற்காதபட்சத்தில் மக்கள் பிரதிநிதிகள் மக்களிடம் மக்களிடம் 92டிசம்பரில் உடன்பாடு காணப்பட்ட அடிப்படையில் கருத்துக்கணிப்பீடு நடாத்தப்போகிறேன் என்று ஜெல்சின் இவ்வருடத்தில் மீண்டும் விடுத்த அறிவிப்பே ரசியாவின் இன்றைய குழப்பமான நிலமைகளுக்கான தொடக்கப்புள்ளியாகும் ஜெல்சினின் இந்த கருத்துக்கணிப்பு தேர்தல் குறித்து மார்ச் 9ம்திகதி 9ஆவதுகாங்கிரல் கூடுவதற்குமுன்னராக ரசிய கூட்டமைப்பில் உள்ள சிறு அரசியல் சக்திகளுடன் தேர்தலுக்கு ஆதரவான உடன்பாட்டைக் கண்டார். ஆயினும் காங்கிரல் தொடங்கும் சிலமணிநேரத்துக்கு முன்னதாகவே பாராளுமன்றத்தலைவர் முதல் ஜெல்சினுடன் உடன்பாடுகண்டிருந்த பலர் எதிரணியினருடன் இணைந்து கொண்டதோடு ஜெல்சினுக்கு எதிரான தாக்குதலையும் நடாத்தத்தொடங்கினார்கள்.

ஜனாதிபதியா? பாராளுமன்றமா? உயர்அதிகாரம் கொண்ட அமைப்பாக இருக்கவேண்டும் என்ற ஜெல்சினின் கருத்துக் கணிப்புத் தேர்தல்திட்டத்தை 12 மார்ச் காங்கிரல் நிராகரித்ததோடு ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் சட்டத்தையும் நிறைவேற்றியது. ஜெல்சின் பாராளுமன்றத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தார். இந்தக் காங்கிரசின் அங்கீகாரம் இன்றியே மக்களிடம் கருத்துக்கணிப்பீட்டை நடாத்தப்போவதாகவும் அறிவித்தார்.

காங்கிரசின் திட்டங்கள் தீர்ப்புக்கள் எல்லாவற்றையும் ஏறிமிதித்தவாறு அதிபர் ஜெல்சின் ஏப்பிரல் 25இல் தேர்தல் நடாத்தப்போவதாகவும் மக்கள் தீர்ப்புக்கே மதிப்பளிப்பேன் என்றும் அறைகூவல்விடுத்தார். தேர்தல் நிகழும் காலம்வரை ஜனாதிபதியின் விசேடசேயற்குழு ஒற்றை அறிவித்ததோடு அதில் தன் எதிர் அணியினரான உபஜனாதிபதி றூாசோக்கியோ, பாராளுமன்றத்தலைவர் ஆகியோரையும்

www.tamilarangam.net

நியமித்தார். செய்தித்துறைகள் அனைத்தையும் தன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். உயர் சோவியத்துக்களின் தீர்ப்புக்கும் தான் பணியமாட்டேன் தன்னைக் கட்டுப்படுத்தவும் முடியாது என்றும் ஜெல்சின் எச்சரித்தார்.

இந்நிலமையில் கூடிய அரசியல் அமைப்பு நீதிக்குழுவானது ஜனாதிபதி மக்கள்மத்தியில் கருத்துக்ணிப்பு நடாத்த அதிகாரம் உண்டு என்றும் அதேவேளை அவர் அரசியல் அமைப்புச்சட்டத்தை மீறிஇருப்பதாகவும் தீர்ப்பு அளித்தது. இத்தீர்ப்புக்கமைய ஜெல்சினுக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட குற்றப்பிரேரணை 3இல்2 பெரும்பான்மை பெறமுடியாமல் போனதால் ஜெல்சினின் பதவி உயிர்தப்பியது. இல்லையேல் உபஜனாதிபதி றூசோக்கியோ ரசியாவின் புதியஜனாதிபதியாக காங்கிரசால் புதியஜனாதிபதிக்கான தேர்தல்வரை நியமிக்கப்பட்டிருப்பார்.

மேலும் பாராளுமன்றத்துக்கும் ஜெல்சினுக்கும் எதிரான அதிகாரப்போட்டியில் பாராளுமன்றத்தலைவர் முறைகேடுகள் கொண்ட நேர்மையற்ற அணுகுமுறையை கடைப்பிடித்தார் என்று கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டும் 3இல்2 பெரும்பான்மையை பெறாததால் அவரது பதவியும் தப்பித்துக்கொண்டது. இரவோடு இரவாய் ஜெல்சினோடு சேர்ந்துகொண்டு புதிய ஜனாதிபதிக்கும் பாராளுமற்றத்துக்குமான தேர்தலை நவம்பர் மாதத்தில் நடாத்துவதாக உடன்பாடுகண்ட பாராளுமன்றத் தலைவர் ஜெல்சினோடு தொலைக்காட்சியிலும் சேர்ந்து தோன்றினார். பாராளுமன்றத்தலைவரின் இந்த சந்தர்ப்பவாதத்தைக்கண்டித்த காங்கிரசின் பெரும்பான்மை உறுப்பினர்கள் இந்த உடன்பாட்டை நிராகரித்ததோடு உயர் நீதிச்சபையின் தீர்ப்பிற்கு அமைய ஜனாதிபதி கருத்துக்கணிப்புத் தேர்தலை ஏப்பிரல் 25ம்திகதி நடாத்த அங்கீகாரம் கொடுத்தனர். அதேவேளை பாராளுமன்றத்தோதல் 95லேயே நடைபெறும் எனவும் அறிவித்தனர்.

இன்று ரசியாவில் பாராளுமன்றத்துக்கும் ஜனாதிபதி ஜெல்சினுக்குமிடையே நிகழ்ந்த அதிகாரப்போட்டியில் ஜெல்சினின் பதவி உயிர்தப்பி இருந்தாலும் காங்கிரசில் ஜெல்சினுக்கு எதிரான சக்திகளின் பலமே ஓங்கிஇருக்கிறது. இன்றைய நிலையில் பாராளுமன்றத்துக்கான தேர்தலை நடாத்தினால் சிலவேளை எதிர் சக்திகளின் பலம் (முக்கியமாக கம்யூனிசிட்டுக்களின் பலம் ) குறைய நேரிடலாம் என்ற அச்சமே பாராளுமன்றத் தேர்தலை நடாத்த சம்மதிக்காததற்கான காரணம் என்று மேற்கத்தைய அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். மாறாக நாட்டின் முக்கிய உயர் அரசுத்துறைகள் ஜெல்சினுக்கு எதிராகவே திரும்பிஇருக்கின்றன. இராணுவம் ஒருவித நடுநிலைப்போக்கையே கடைப்பிடிக்கிறது. உள்நாட்டுப் பாதுகாப்பு, இராணுவம் போன்ற முக்கிய அமைச்சர்களின் கைகளிலேயே அரசைத்தீர்மானிக்கும் சக்தி இருக்கிறது. மொல்க்கோவில் ஜெல்சினுக்கு ஆதரவான சக்திகள் அதிகமாக இருப்பதாகவே சோசல் நிறுவனம் ஒன்றின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. தொழிலாளர்களும் தொழில் துறை நிர்வாகிகளும் ஜெல்சினின் பொருளாதாரத்திட்டத்துக்கு எதிரானதால் ஜெல்சினுக்கு எதிராகவே வாக்களிப்பர் என்பது வெளிப்படை. பாராளுமன்றம் ஜனாதிபதி கருத்துக்கணிப்புத்தேர்தலை நடாத்த அனுமதி வழங்கியிருப்பினும் அதற்கான 4 கேள்விகளையும் காங்கிரசே தயாரித்து இருக்கிறது. இன்று செய்தித்துறைகள் அனைத்தும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டது. இதில் வேடிக்கையான அம்சம் என்னவெனில் ஜனாதிபதியின் தேர்தல்திட்டத்துக்கு அனுமதி கொடுத்த உயர்நீதிச்சபை அவர் தயாரித்த கேள்விகளை மறுத்து காங்கிரசுக்கே கேள்விகளைத்தயாரிக்கும் உரிமையைக் கொடுத்ததனூடாக உயர் நீதிச்சபையும் ஜெல்சினுக்கெதிராகவே இருக்கிறது. குறிப்பாக உயர்நீதிச்சபையின் தலைவர் உபஜனாதிபதி றூசோக்கியின் பக்கமாகவே நிற்கிறார். இன்று தேர்தலுக்கென காங்கிரசு தயாரித்திருக்கும் கேள்விகள் மக்களிடம் இருந்து ஜெல்சினுக் எதிரான பதிலை எதிர்பாத்தே தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது ஜெல்சினின் வெற்றிக்கான வாய்ப்புக்களை குறைவாக்கி இருக்கிறது என்றே சொல்லலாம்.

**ஜெல்சின் தயாரித்த கேள்விகள் :**

>> ரசியாவில் ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டு வருவதை ஒப்புக் கொள்கிறீர்களா? ஆம்/ இல்லை

>> சட்டவாக்க அதிகாரமுடைய இரு பாராளுமன்றங்கள் இருப்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? ஆம் / இல்லை

>> புதிய ரசியாவுகான புதிய அரசியல் சட்ட வரைவுகளை ஒப்புக் கொள்கிறீர்களா? ஆம் / இல்லை.

>> ஒவ்வொரு பிரஜையும் நிலத்துக்கு சொந்தக்காறராகும் புதிய சட்ட வரைபுகளை ஏற்றுக் கொள்கின்றீர்களா? ஆம் / இல்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**காங்கிரசு தயாரித்த கேள்விகள் :**

>> ஜனாதிபதி ஜெல்சினில் நம்பிக்கையுண்டா?

>> ஜனாதிபதியின் சமூக பொருளாதார அரசியல்திட்டங்களை, ரசிய கூட்டமைப்பில் உள்ள ரசிய மற்றும் சுயாட்சி அரசுகளை ஏற்றுக்கொள்கிறீர்களா ?

>> ரசிய கூட்டமைப்புகென ஜனாதிபதிக்கான ஒருவருக்கான தோதல் நிகழ்வதை அவசியம் எனக்கருதுகிறீர்களா ?

>> ரசிய பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகளுக்கான தேர்தல் முன்கூட்டியே நடாத்துவதை விரும்புகின்றீர்களா ?

ஜென்சின் தனக்கு ஆதரவான கருத்தை தேர்தலில் பெற்றுக்கொள்வதற்காக இன்று தன்னால் முடிந்த சண்டப்பிரசண்டங்களில் ஈடுபடுகிறார். ஒருபுறம் தொழிலாளர்களின் சம்பளத்தை இரண்டு மடங்காக உயர்த்தியும் எதிரணியினர் மீது பலாத்காரத்தைப் பிரயோகித்தும் ( ஆதரவாளர்களைக்கொண்டு ) தன்பலத்தை வெளிக்காட்டுகிறார். மறுபுறம் மேற்குலகிடம் கையேந்தி அவர்களை மலையாக நம்பி இருக்கிறார். "நீங்கள் இன்று எனக்கு உதவாது போயின் நாளை கம்யூனிச பூதம் நாட்டை மீண்டும் கைப்பற்றிவிடும் " என்று தன் முதலாளித்துவ விசுவாசத்தை மொல்க்கோவுக்கு அவசர விஜயம் செய்த பிரான்ல் அதிபரிடம் அப்பட்டமாக வெளிப்படுத்தினார். ஆயினும் இந்தப் பணக்கார நாடுகள் ரசியாவுக்கு சும்மா கொட்டிக்கொடுக்க தயாராக இல்லை. தங்களுடைய நலன்களை உறுதிப்படுத்தும் திட்டங்களில்தான் குறியாய் நிற்கின்றன. மொல்க்கோவை மையப்படுத்தியும் சைபீரிய எண்ணைவயல்களை கைவசப்படுத்தும் திட்டங்களையுமே தீட்டுகின்றன.

ஏப்பிரல் ஆரம்பத்தில் கனடாவில் நிகழ்ந்த ரசிய அமெரிக்க அதிபர்களுக்கிடையிலான உச்சிமாநாட்டில் கிலிங்டன் அமெரிக்காவின் ஜனநாயகத்தையும் பொருளாதார திட்டங்களையும் ரசிய நாட்டில் வளர்த்தெடுக்கும் பொருட்டு உதவிகள் செய்வதை உறுதிப்படுத்தியிருக்கிறார். யப்பானுக்கு சொந்தமான குறுல்லன் தீவுப்பிரச்சனையில் விரிசல் அடைந்த ரசிய - யப்பான் உறவில் நெகிழ்வைக்காட்டி இப்போ யப்பானும் ஜெல்சினுக்கு உதவ முன்வந்திருக்கிறது. எப்படியோ மீண்டும் ரசியாவில் சோசலிசமோ கம்யூனிசமோ தலைதூக்காது தறித்தெறிய வேண்டுமென்பதற்காய் எல்லா முதலாளித்துவ சக்திகளும் ஜெல்சினைப் பாதுகாக்கும்பணியில் ஒன்று சேர்ந்திருக்கின்றனர்.

ஆயினும் ரசியாவின் முன்னைய சோசலிச அதிகார வர்க்கமும் தேசபத்தர்களும் புதிய கம்யூனிஸ்ட்டுக்களுமாகிய எதிரணியினர் ஜெல்சினின் தீவிர முதலாளித்துவ பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக போர்க்கொடி தூக்கி நிற்கின்றனர். யப்பான் உட்பட மேற்குலக நாடுகளோ ரசியா முழுவதும் தீவிரமாக முதலாளித்துவப் பொருளாதாரத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்படி நிர்பந்திக்கின்றனர். ஜெல்சினும் மேற்குலக நண்பர்களின் நிபந்தனைகளுக்கும் அழுத்தங்களுக்கும் அடிபணிந்து அவர்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்தவே பகீரதப்பிரயத்தனப்படுகிறார். இது ஜனாதிபதி ஆட்சியினூடாகத்தான் சாத்தியப்படும் என்பது அவரது நிலைப்பாடு. இதற்காக ரசியாவின் பல நூற்றாண்டுகால தனிமனித ஆட்சியை ( சர்வாதிகார ஜார் பரம்பரையை ) ஆதாரப்படுத்தவும் ஜெல்சின் தயங்கவில்லை.

ஜெல்சின் இந்தத் தேர்தலில் (கருத்துக்கணிப்பீடு) வெற்றி கொள்வதாயின் மிகப்பெரிய தடைகளை தாண்டியே ஆகவேண்டும் என்பது மொல்க்கோ பத்திரிகைகளின் கருத்து. செய்தித் தொடர்புகள் எதிரணியினரின் (பாராளுமன்றத்தின்) கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதால் ஜெல்சினுக்கு எதிரான கருத்துக்கள் பரப்பப்படுவதற்கே மேலும் அதிக வாய்ப்புக்கள் உண்டு. ரசிய தேசிய உணர்வை உசுப்பிவிடும் பிரச்சாரம் பத்திரிகைகளாலும் தொலைக்காட்சிகளிலும் மும்மரமாக நடாத்தப்படுகின்றன.

மேற்குலகத்தைப் பொறுத்தவரை பொருளாதார உதவிகளை மட்டுமன்றி ஏனைய வழிவகைளை பிரயோகித்தும் ஜெல்சினுக்கு ஆதரவான கருத்தை இந்தத்தேர்தலில் பெற்றுக் கொடுக்கவே துடியாய் துடிக்கின்றன. அமெரிக்கா ஜெலிசினுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் ஜெல்சின் தேர்தலில் தோல்வியைத் தழுவுவாராயின் அடுத்துவரும் சக்திகளை எப்படி பயன்படுத்தலாம் என்ற அடுத்தகட்ட புலன் ஆய்வுகளிலும் (சி.ஐ.எ) இறங்கியிருப்பதாக செய்திகள்வேறு. இது அமெரிக்காவின் அரசியல் விளையாட்டில் புதியதுமல்ல. முன்பு கோர்பி பின்பு ஜெல்சின் இனி...? இதுவே அமெரிக்காவின் கணிப்பீடு.

*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய நிலையில் பெண்கள்

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எம்மிடையே ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் முன்னரேயே பத்திரிகைகள் சஞ்சிகைகள் முக்கியத்துவப்படுத்தி வெளியிடும் செய்திகள் அல்லது ஆக்கங்களில் பெண் ஒடுக்குமுறையும் குறிப்படத்தக்கதாக அமைந்திருந்தது.. ஆனாலும் அது இன்னும் குறைந்தபாடில்லை. தொடர்ந்து கொண்டே செல்கிறது.

சில வருடங்களுக்கு முன்னர் ராஜஸ்தான் மாநிலத்தில் கணவன் இறந்ததால் அவன் சிதைக்கு மூட்டிய தீயிலேயே அவனது மனைவியை இழுத்துவந்து உடன்கட்டை ஏற்றிய சம்பவம் இந்தியாவை மட்டுமல்ல உலகையே ஒரு உலுக்கு உலுக்கியது. மரபுகளை கேள்விக்குள்ளாக்காது வாழ்வதைத் தகர்த்தெறியும்வரை இது தொடரத்தான் போகிறது.

தமிழகத்தில் 1981 இல் கணக்கெடுப்பின்படி 1000 ஆண்களுக்கு 977 பெண்கள் என்ற விகிதத்தில் இருந்தது. 1991 இல் இது 974 என்ற விகிதத்துக்கு குறைந்துள்ளது. பெண் சிசுக் கொலையே இதற்குக் காரணம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இன்று இந்தியாவின் பல இடங்களில் பணம் தேவைப்படும்போது தமது மனைவியை, மகளை 'அடைவு' வைக்கும் பழக்கம் வளர்ந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அடைவு பிடிப்போரும் வீட்டு வேலைகளைக் கவனிக்க என்றுதான் கூறினாலும் அங்கு அப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என கூறப்படுகிறது.

பெண்கள் பொருளாதாரத்தில் சொந்த பலத்தில் நிற்காத வரை இது முடிவுறும் விடயமல்ல. அண்மையில் இலங்கையில் மகாஜன சம்பத் என்ற அதிஸ்ட லாபச் சீட்டிழுப்பில் 2 கோடி 20 லட்சம் ருபாவைப் பெற்றுக்கொண்ட கண்டியைச் சேர்ந்த ஜனிபா பாத்திமா ரீனாடீன் என்ற பெண் கூறுகையில், தன்னிடம் உதவிகேட்டு வந்த கடிதங்களில் பெரும்பாலானவை தங்கள் திருமணத்திற்காகப் பெண்களிடமிருந்து வந்தவைதான் என்கிறார்.

கற்பனையிலும் இளமையின் உணர்வுகள் தன்னுள் அடங்கிப்போக வாழும் பெண்கள்தான் ஆய்வுகளுக்கும் அப்பால் இருக்கிறார்களே!
யாழ்ப்பாணத்திலிருந்து வந்த நண்பர் ஒருவருடன் நிலைமைகளை வினவியபோது அவர்கள் கூறியது ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அங்கு சகல வரவு செலவுக்கும் புலிகள் வரிவிதிப்பது யாவரும் அறிந்ததே. ஆனால் அதனை சீதனப்பணத்திற்கும் அறவிடுகிறார்களாம். இதன்மூலம், 'பெண்விடுதலை பற்றியும் பேசும்' புலிகள் சீதனத்தை அங்கீகரிப்பது இந்த அமைப்பில் இருக்கும் பெண்களில் எத்தனை பேருக்குத்தான் புரிந்திருக்குமோ?

சுவிற்சர்லாந்தில் தற்போது இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 5 மணிவரையான இடைநேரத்தில் 'ரக்சியில்' (Taxi) பயணம் செய்ய வேண்டியேற்படும் பெண்களுக்கு ரக்சிக் கட்டணத்தில் 20 வீத கழிவு வழங்கப்படுகிறது. இரவில் பெண்கள் தனித்து நடமாடுவதிலுள்ள ஆபத்துக் கருதியே இது வழங்கப்படுகிறது.

**சுமிலன்**

எங்கு வன்முறை இடம்பெறுகிறதோ அங்கெல்லாம் முதலிலும் பெருமளவிலும் பாதிக்கப்படுவது பெண்கள்தான் என்பது ஒரு வழமையான நிகழ்வாகிப் போய்விட்டது.. இதற்கு எங்கள் தேசத்தில் இலங்கை, இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட பெண்கள் மீதான வன்முறைகள் நல்ல உதாரணமாகும். அயோத்திப் பிரச்சினையில் இந்து வெறியர்கள் பல முஸ்லீம் பெண்களை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தியது மட்டுமின்றி, எரியும் தீயில் வீசி துடிதுடித்து மடிவதைப் பார்த்திதுக் கொண்டிருந்த கொடுமையும் நெஞ்சை விட்டு அகலாத செய்திகள்!

வளர்ந்து வரும் பெண்ணடிமைத்தனத்தின் விளைவால், ஒரு குடும்பத்தில் பெண்பிள்ளை பிறந்தால் பாவம் என்ற நிலையில் சிசுவிலேயே பெண்களைக் கொல்லும் நிலைமைகூட தோன்றியுள்ளது. சீனாவில் வருடம் 10 லட்சம் பெண்சிசுக்கள் கொல்லப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதேபோலவே தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் பிறப்பதில் 51 வீதமான பெண்சிசுக்கள் கொல்லப்படுவதாகவும், இது உசிலம்பட்டியைவிட அதிகம் என்றும் புதிய ஆய்வு ஒன்று கூறுகிறத. இன்னும் ஆராய்ந்தால் இதனையும் முறியடிக்கும் விதத்தில் இன்னும் எத்தனை மாவட்டங்கள் மறைந்துள்ளதோ யாருக்குத் தெரியும்.

லண்டனில் கொடுமைக்காரனான தனது கணவனைக் கொலை செய்ததற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட




16 ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை :

# கேள்விக் குறிகளான விடைகள்



தமயந்தி

வானமேநொறுங்கி அவள்மீது குவிந்து வீழ்ந்து அவளை உயிரோடு, துடிக்கத் துடிக்க சமாதியாக்கியதுபோல் இதயம் நொந்தாள். வசந்தாவின் முகத்தை விபரிக்கமுடியாத ஓர் கோபாவேசம் பற்றிப்படர்ந்திருந்தது. அவர் கரவெதுவுமில்லாமல் ஆண்களுடன்சகஜமாய்ப் பழகுவதை பலர் கொச்சைப்படுத்திப் பேசுவதை பல தடைவைகள் தன் செவிகளாலேயே கேட்டிருக்கிறாள். ஆனாலும் அவற்றைப்பொருட் படுத்தி யதேயில்லை "இவர்கள் இப்படித்தான்" என்று பொருட்படுத்தாமலேயே சென்றுவிடுவாள். ஆனால் இன்று .....வசந்தா தனக்கு நல்ல நண்பனாய் வந்துவிட்டான் என்று பெருமைப்பட்டு கொண்டிருந்த நிவேதனே பலர் மத்தியில் இவளைப்பற்றித் தப்பாகப் பேசிவிட்டான் என்பதை வசந்தாவால் ஜீரணிக்கவோ,சகித்துக்கொள்ளவோ முடியாமல் இருந்தது. வசந்தா பல ஆண்களோடு பேசிப்பழகியிருந்தாலும், நிவேதனை தனது நெருங்கியநண்பனாய் நினைத்துத்தான் இத்தனை காலமாய்ப் பழகிவந்தாள். ஆனால் இன்று அவன்.....அந்தப் பிறந்தநாள் வைபவ வீட்டில் அத்தனை பேர் மத்தியில் இப்படிப் பேசியிருக்கிறானே? எத்தனைபேர் கூட்டம் போட்டுப் பேசியிருந்தாலும், கூட்டத்தின் மத்தியில் வேறு யார் பேசியிருந்தாலும், எப்படித்தான் அவதூறாகப் பேசியிருந்தாலும் அவதுறை வச ந்தா கணக்கிலேயே எடுத்திருக்க மாட்டாள். ஆனால் தன்னுடைய நெருங்கிய நண்பனாய்ப் பழகிய நிவேதன் இப்படித் தன்னைப் பற்றிப் பேசினான் என்பதைக் கேள்விப்பட்டதும் குமுறித்தான் போனாள். வெறும் கட்டுக்கதையை அவிழ்த்து மேயவிட்ட சனங்களுக்கு இப்போ நிவேதனின் வாயால் கொட்டுண்ட வார்த்தைகள் உண்மைச் சாட்சியாகி, இவளை உண்மையாகவே கெட்ட நடத்தை உடையவளாக்கி விட்டனவே என்பதை எண்ணும்போது வசந்தாவின் உள்ளம் கோபத்தில் கொதித்தது. பிறந்தநாள் விழாவில் நின்றுவந்த சபாநாதன் அங்கு நடந்த சம்பவத்தைக் கூறியதிலிருந்து வசந்தாவின் உடலும் ஒருவித நடுக்கத்துள் சிறைப்பட்டுப் போனது. சபாநாதன் பொய் பேசமாட்டான். நம்பிக்கைக்குரியவன் தீர விசாரிக்க வேண்டும் என்ற அவசியம் தேவையற்றதுதான். ஆனாலும் நேரடியாக விசாரிக்க வேண்டும்: உண்மையாயிருப்பின் நட்பையே.............

கோடை கால வெயில் ஊரை ஞாபகப்படுத்தும் வகையில் கொழுத்துகிறது. அதுவும் மலைகளில் பட்டுத் தெறிப்பதால் இன்னும் வெக்கை அதிகமாய் முகத்தில் வீசுகிறது. வெய்யில் வெக்கையையும் விழுங்கி விடுவதுபோல் அவளது இதயம் தீயெனக் கொதிக்கிறது. தெருவிலிறங்கி நடக்கிறாள். அவள் நிவேதனிடம்தான் போகிறாள்

வசந்தாவுக்கு நிவேதனுடனான அந்த முதற் சந்திப்பு. அது ஒரு கலை இலக்கிய விமர்சகர் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒன்றுகூடல், ஒன்றுகூடலுக்கு வந்திருந்த நிவேதனை "இவர்தான் நிவேதன். பிரபல பெண்ணிலைவாதக் கவிஞர். கவிஞர் மட்டுமல்ல நல்லாகக் கதைகளும் எழுதுவார். கிட்டடியிலை நெருப்பைச் சுமப்போர் என்றோருசிறுகதைத் தொகுதியொண்டும் வெளியிட்டிருக்கிறார்" என்று வசந்தாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் காருண்யதாஸ். வசந்தாவுக்கு ஒரே ஆச்சரியம். நிவேதன் என்ற உருவத்தை அவள் வேறுவிதமாக அல்லவா கற்பனை செய்து வைத்திருந்தாள். ஓர் அனுபவத்தில் பழுத்துப் போன, வயதானதோர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உருவத்தை தன்னுள் கற்பனை செய்து வைத்திருந்தாள். ஆனால் அவளின் கற்பனை நிவேதனுக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத ஓர் இளஞன் அல்லவா நிவேதனாய் அவள்முன் நிற்கிறான். நிவேதன் என்ற பெயரில் வெளியாகும் இலக்கியப் படைப்புகள், அவற்றின் கனமான கருத்துகள், சீரழிந்த சமுகத்தைச் சாடும் தனித்துவமான தன்மை, பெண்நிலைவாதம் பற்றிய தெளிவான கருத்தின் வெளிப்பாடு இவற்றையெல்லாம் கருத்தில் நிறுத்தித்தான் நிவேதன் என்றநபரைப் பற்றிய உருவத்தைத் தன்னுள் ஓர் வயது கூடியவனாய் கற்பனை செய்துவைத்திருந்தாள். இவ்வளவு சிறுவயதில் இத்தனை கருத்துத் தெளிவா? என்று அவள் வியந்து, மலைத்து நின்றாள் .

"என்ன பே யறைந்தமாதிரி நிக்கிறீங்கள்? காருண்யர்சொன்னார். நீங்கநல்ல ஆக்கியுமெண்ற் பண்றீங்களாம். ஆக்கியுமெண்ற் பண்ண வெளிக்கிட்டால் ஒரு கரைகாணாமல் விடமாட்டிங்களாம் 'எண்டு கேள்விப்பட்டேன். நீங்க என்னடாண்டால் அறிமுகமப்படுத்தின பிறகும் ஒண்டுமே பேசாமல் நிக்கிறீங்கள்...." வசந்தாவின் நீண்ட மௌனத்தைத் துரத்தினான் நிவேதன்.

"அப்பிடியெல்லாம் ஒண்டுமில்லை..... உங்கள நான் இவ்வளவு கெதியாச் சந்திப்பன்னெண்டு நினைக்கவேயில்லை. அதவிட நிவேதனெண்டு வெறயொரு உருவத்தைக் கற்பனை பண்ணிவைச்சிருந்தனான். ஆனால் இப்ப வே றொரு உருவம் முன்னால் வந்து நிற்கிறதப் பாத்த உடன கொஞ்சம் அப்சற்றாகிப் போனேன்." "வேறொரு உருவமெண்டால்... அழகான, உயர்ந்த, பருத்த,...." "சீச்சீ... அப்படியில்ல கொஞ்சம் வயசான...." "போச்சடா... என்ர எழுத்துக்கள் அவ்வளவு கிழடுதட்டிப் போயா தெரியுது?" "அப்பிடியுஞ் சொல்லலாம், அத இப்படியுஞ் சொல்லலாம் " புன்னகைத்தவாறு வசந்தா. "எப்பிடி, நயினிரி எண்டா?" "ஐயையோ, அப்பிடியில்ல... ஒரு முதிர்ச்சியடைந்ததன்மை....அப்பிடி" எண்டால்...கழிதலுக்குரிய ...ழையன., அப்பிடித்தானே?" "என்ன உங்களோட ஒண்டுமே கதச்சுப் பேசேலாது போல கிடக்கு?" "உங்கட பேச்சுச் சுதந்திரத்தைப் பறிக்கிறனெண்டு சொல்லுறீங்களா?" "உதென்ன கொடுமை.... நான் அப்படிச் சொல்லயில்ல. நீங்களெல்லாம் பெரிய மேதாவியள். உங்களோடை விவாதிக்க எனக்குத் தகுதியில்லையப்பனே" கிண்டற் தொனியில் வசந்தா. "பாத்திங்களா பாத்திங்களா உடன மட்டந் தட்டிக் கதைக்க வெளிக்கிட்டிருவியள்..." "உண்மையத்தான் சொல்லுறன்" அந்த ஒன்றுகூடலில் இப்படி சீண்டல் பேச்சுகளுடன் ஆரம்பித்த அவர்களது சந்திப்பு கால ஓட்டத்தில் நெருங்கிய நட்பாய்ப் பரிணமித்தது.

கலை, இலக்கியம், பெண்ணிலைவாதக்கருத்துக்கள், தேசவிடுதலை தேசியஇனப்பிரச்சனை, சர்வதேசஅரசியல் என்று நீண்ட பட்டியலில்லாதப் பிரதிவாதங்களும், குடும்பப் பிரச்சனைகள், மனத்துயர்கள் என்று அவர்களுக்குள் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. நட்பின் நெருக்கம் வலுத்து வந்தது.

நிவேதன் மீது கொண்ட ஆழமான நட்பின் நம்பிக்கையில் தான், தனது குடும்பம் தொடர்பான அனைத்து விடயங்களையும் வசந்தா கொட்டித்தீர்த்தாள்.

நிவேதனும் தனது குடும்ப வறுமை தொடர்பாக வெளிப்படையாகவே பேசுவான்.நிவேதன் பணியாற்றிய இரவு விடுதியும் இழுத்து மூடப்பட்டதால் அவன் செய்து வந்த ஆறு மணித்தியால கழுவும் வேலையும் பறிபோய்விட்டது.வேலை பறிபோனதால் மாதா மாதம் வீட்டிற்கு அனுப்பும் சிறுதொகைப் பணமும் அனுப்பமுடியாமற் போய்விட்டது. அந்தச் சமயங்களில் எல்லாம் நிவேதனின் வீட்டுக்கு அனுப்புவதற்கான பணத்தை வசந்தாதான் கொடுத்து உதவினாள். ஆனால் இப்போ....? அந்த நிவேதனா இப்படி? என்னை முற்றுமுழுதாக அறிந்திருந்தவன் என்று நினைத்திருந்த நிவே.....

நிவேதன் வசிக்கும் வீட்டிற்கும், வசந்தாவின் வீட்டிற்கும் இடையிலான தொலைவு சுமார் ஐந்து கிலோ மீற்றர். அதுவும் வரும் வழியில் இரண்டு சுரங்கப் பாதைகளும் உண்டு. இத்தனையும் கடந்து நிவேதனின் வீட்டை வந்தடைந்து விட்டாளென்பது அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது.

அழைப்பு மணியை அழுத்திவிட்டு வாசலிற் காத்து நின்றாள். சில நிமிடங்கள் கழித்து கதவு திறக்கப்பட்டது கதவைத்திறந்தவன் நிவேதன். வசந்தாவைக் கண்டநிவேதன் அதிர்ச்சித்து நின்றான். அவன் எதிர்பாக்கவில்லைத்தான். அவளும் இவனில் இப்படியொருமாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், அவனது அதிர்ச்சி நிலையைக் கண்டு உண்மையைப்புரிந்துகொண்டாள். விடயத்தைத் தீர விசாரித்து உண்மை அறியலாமென்று நினைத்தவளுக்கு இப்போ விசாரணை, தீர்ப்பு, கேள்வி, நியாயம் எதுவுமே அர்த்தமற்றதாய்ப்பட்டது. பொருமிக் கிடந்த கோப அமுக்கம் வெடித்துச் சிதறியது. வார்த்தைகள் தரிப்பற்றுச் சிந்திச் சிதறியது."ஏனிப்படிக் கீழ்த்தரமாக் கதச்சுக்கொண்டு திரியிறாய்? உன்னயுமொரு மனிசனெண்டு நினச்சு உன்னோட பழகிறது என்ர பிழைதான். நீ என்னைப் பற்றிக் கண்டமாதிரியெல்லாம் கதச்சுக்கொண்டு திரியிறதப் பற்றி நான் நிச்சயம் கவலப்பட மாட்டன்.... அதுக்காகக் கவலைப் படுகிறதில அர்த்தமும் இல்ல. ஆனால், நான் கவலப்படுகிறதெல்லாம் ஒரு சந்தர்ப்பவாதியோட, ஒரு

www.tamilarangam.net

பச்சோந்தியோட இவ்வளவு காலமும் நட்பு வைச்சிருக்கிறனே எண்டதை நினைச்சுத்தான். இனியாவது பெண்ணுரிமை, சமத்துவம், சமூக விடுதலை, மசிர்மட்டையென்று சொல்லிக் கொண்டு திரியாத. உன்னப்போல ஆக்களாலதான் இன்னும் எங்கட சமூகத்துக்கு விடிவில்லாமக்கிடக்கு. பெரிய முற்போக்குவாதி இலக்கியவாதியெண்டு எழுதிக்கொண்டு திரியிறியே ஒரு பொம்பிளையைப் பற்றி கொச்சைத்தனமா கதைகட்டிவிட எப்படி உனக்கு மனம் வந்தது ? அதுசரி, உன்னைப்போல ஆக்களெல்லாம் இப்ப சும்மா ஸ்ரைலுக்காகத்தானே முற்போக்கு எண்டு கதச்சுக்கொண்டு திரியிறனீங்கள்? சமூகம், மனிதம், விடுதலை முற்போக்கு எண்டு இனியும் கதச்சு குதுகளின்ர அர்த்தத்த நாறடிக்காத. உன்னைப்போல சந்தர்ப்பவாதிகளுக்கு கெல்லாம் சிவப்புப் புத்தகங்கள் நல்லாத்தான் உதவி செய்திருக்கு. வித்தியாசமான சொல்லுகள் சிவப்புப் புத்தகத்திலை தேடிப்புடிச்சுப் பாடமாக்கிவச்சுக்கொண்டுபெரிய மேதாவியளப் போல வெளியில எப்பிடித்தான் காட்டித்திரிஞ்சாலும் சொந்தக்குணங்கள் தலநீட்டத்தான்செய்யும். இப்ப உன்ர முகத்திர கிழிஞ்சுபோச்சு. சாயங் கழண்டுபோச்சு இனியும் முற்போக்கு,கலையிலக்கியமெண்டு எழுதி, பெரிய மேதாவியாகக் காட்டி கொள்ளாத ஒரு பொம்பிளயின்ர அருமையான நட்பையே உணரத்தெரியாத உனக்கு சமூகத்தப் பற்றிச் சிந்திக்க அருகதயில்ல எண்டுதான் நான் சொல்லுவன். கடசியா ஒண்டமட்டும் உனக்குச் சொல்லுறன்., என்ர நல்ல நட்ப இழந்ததுக்காக நீ ஒருகாலம் சரியா வருத்தப்படுவாய். மெத்தப் பெரிய உபகாரம். போய்ற்று வாறன்''

பெரும்புயலடித்து, மறைந்து ஓய்ந்ததுபோல நிவேதனின் அறை நிசப்தத்துள் சிறையானது. வசந்தா போட்ட சத்தத்தினால் மட்டும் நிவேதனின் அறை புயலாடும் களமாகியிருக்கவில்லை., அவளின் வார்த்தைகளும் தீப்புயலாய் நிவேதனைச் சுட்டெரித்தன.

தெருவிலிறங்கி நடக்கிறாள், ஓர் போலி மனிதனின் சகவாசம் திறந்த திருப்தியில். கோடைகாலச் சூரியன் தன் நெருப்புக் கரங்களை முகிலொன்றினுள் மறைத்தால் பூமியின் சூடு தணிந்து கொண்டது மரங்களிற் பட்டுவந்த மெல்லியகாற்று அவளின் முகத்தை வருடிச் சாந்தப்படுத்தியது ஆனாலும் கடலில் பெய்த மழைபோல் அவனது நட்பு பாழாகி விட்டதேயென்ற துயர் அவளைநெருடியது. ✸

* * * * * *

**13**ம் பக்கத்தின் தொடர்ச்சி

ஒரு இந்தியப் பெண்மணிக்காக பெண்கள் போராடி விடுதலை பெற்றுக்கொடுத்த சம்பவம் அண்மையில் நடந்தும் இருக்கிறது.

பெண்கள் தங்கள்மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட தனித்துவமான அமைப்பையே தெரிவுசெய்ய வேண்டும் என்பது கடந்த காலங்களினூடாக கற்றுக் கொண்டவை. விடுதலை அமைப்புக்களில் பெண்கள் பங்குகொண்டபோதும் இதுவரை அவர்களுக்கு எந்த விதத்திலும் பொறுப்பான பதவி வழங்காது, இரண்டாம் தரப் பிரஜையாகவே பாவிக்கப்பட்டதோடு, பெண்களின் பங்களிப்பை வைத்தே அவர்களின் விடுதலை உறுதி செய்யப்பட்டதாகக் கூறியது மட்டுமே ஒழிய நடைமுறையில் உருப்படியாக எதுவுமே நடக்கவில்லை என்பதும் தெரிந்ததே.

தனித்துவமான பெண் அமைப்பு ஒன்று உருவாகும் பட்சத்தில் கவனத்தில் எடுக்கவேண்டிய சில அம்சங்களை ஏனைய அனுபவங்களுடாக குறிப்பிடுவது அவசியமாகும். பெண் விடுதலை பற்றிப் பேசும் பெண்களில் கணிசமானோர் ஏனைய பெண்கள் விடயத்தில் கவனமெடுப்பது குறைவு. பிற்போக்கான பெண்கள் என ஒதுக்கிவிடுவதை, அல்லது அசட்டை செய்வதைக் காணமுடியும். அதற்கு மாறாக அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு அறிந்து அதற்கான மாற்று வழிவகைகளைக் கூறி, அவர்களை வென்றெடுக்க வேண்டும். சுதந்திரம் என்பதன் பொருளை மாறி விளங்கி அதனை தங்களுடன் மட்டுமே நிறுவி வைத்திருப்பது அவர்களினுடைய சுதந்திரத்தையும் அர்த்தமற்றதாக்கி விடும். அனேகமான பெண்கள் அமைப்புக்கள் அல்லது பெண்கள் சம்பந்தமான ஆக்கங்கள் பெண்விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் என்றே (தெரிந்தோ தெரியாமலோ) அர்த்தப்படுத்திவிடுகின்றன.

பெண் அடிமைத்தனம் தனிநபர் பிரச்சினையல்ல– இது சமூகத்திலுள்ள தவறு என்பதை உணர வேண்டும். அத்தோடு பெண்களுக்கான தனித்துவமான அமைப்பு – போராட்டத்தை தமக்குள் மட்டும் முடக்காமல்– பெண்களுக்கு ஆதரவான சக்திகளையும் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி இணைத்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விடுதலைப்புலிகள்

# தேசிய சக்தியும் பாசிச சக்தியும் — சில கருத்துக்கள்

**ம**னிதம்–19 இல் சிவசேகரம் அவர்கள் தம் கட்டுரை (விடுதலைப் புலிகள்– தேசிய சக்தியும், பாசிச சக்தியும்) தரும் சில கருத்துக்கள் சம்பந்தமாக நாம் மனிதம் வாசகர்களின் கவனத்திற்கு சில கருத்துக்களை வெளிக்கொணர்கிறோம்

மனிதம்–19, சிவசேகரம் அவர்களின் கட்டுரையை உள்வாங்கியபின், மிகவும் அவதானமாக 'பாசிசம்' எனும் கருத்தாக்கத்தை தவிர்த்து சகல விமர்சனங்களையும் செய்துள்ளது. கடந்த மனிதம் ஏடுகள் புலி பற்றிய விமர்சனத்தில் பாசிசம் எனும் கருத்தாக்கத்தை மலிவாகப் பயன்படுத்தி வந்தது. தற்போது "ஆசான் மொழி அமிர்தம்" எனும் பொருள்பட செயல்படுவதாலும், பாசிசத்தின் இயக்கப்பாடு பற்றிய மரபுசார்ந்த புரிதலை ஏற்பதாலும், நாம் சில கருத்துக்களை கவனப்படுத்தல் தவிர்கமுடியாது.

**— ப.வி.சிறிரங்கன் —**

முதலில், தேசிய வாதம் சம்பந்தமாக திரு.சிவசேகரம் அவர்களின் கருத்திலொரு குழப்பமுள்ளது. அதை எடுத்துக் கொள்வோம்.

"ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கிடையிலும் முரண்பாடுகள் உள்ளன. இவற்றை சினேகபூர்வமாக தீர்க்கமுடியும். அவ்வாறான தீர்வை மதிக்கும் தேசிய வாதம் இயல்பாகவே பிற்போக்கான ஒன்றாகிவிடுகிறது. " என்கிறார்.

இக் கருத்தாக்கம் எம்மைக் குழப்புகிறது.

தேசிய வாதம் ஒவ்வொரு கட்டங்களில் ஒவ்வொரு முகமூடியைப் போடுகிறது. சில கட்டங்களில் முற்போக்காகவும், பல கட்டங்களில் பிற்போக்காகவும் இயங்குகிறது. ஆனால், தேசிய வாதம் முற்போக்காய் நகருவதாயின், அது தன்னகத்தே முற்போக்குகளை கொண்டிருக்க வேண்டும். இயல்பாக பிற்போக்காகிவிடும் தேசிய வாதம், சினேகபூர்வமாக இனங்களுக்கிடையில் நிலவும் முரண்பாட்டை எங்ஙனம் தீர்க்கும்?

♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣

**மன்னிக்க வேண்டும்! நான் இலங்கையனாக இருந்துகொண்டு பாசிசம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் தவிர்க்க முடியாமல் புலிகளையே — புலிகளுக்கூடாகவே சில கருத்துக்களை வைக்கவேண்டியுள்ளது. இதைவிட்டு நான் ஐரோப்பாவையோ, அல்லது ஆபிரிக்காவையோ அல்லது அமெரிக்காவையோ உதாரணப்படுத்தி கிட்லர், முசோலினி என்று கூறிக்கொள்ளமுடியாது.**

♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣

"தேசிய வாதம் எப்பவும் தேசிய முதலாளியக் கோட்டைக்குள் இருந்தே கசியும்." என்கிறார் லெனின். அதில் சந்தேகமில்லை. எனினும், அது சில கட்டங்களில் — சிவசேகரம் அவர்கள் குறிப்பிட்டபடி — முற்போக்கு பாத்திரம் வகிக்கிறது. அப்படி முற்போக்கு பாத்திரம் வகிக்கும் தேசியவாதம் முதலாளிய அமைப்புமுறையில் தொடருமாயின் பிற்போக்கு நிலைக்கு நகருதல் தவிர்க்கமுடியாது. முதலாளிய முறையை மாற்றிக்கொண்டு சமவுடமைக்கான திசைவழியைக் காணுமாயின், அது மக்கள் தேசியமாக மலர்ந்து விடுகிறது.

இது தேசிய நிகழ்வு பற்றிய அண்ணளவான புரிதல்தாம். ஆனால், சிவசேகரம் அவர்கள் எந்த அர்த்தத்தில் மேற்காட்டிய கருத்தை வலியுறுத்துகிறார் என்பதில்தாம் எமக்குக் குழப்பம்.

இனி பாசிசம் பற்றிய நிலைப்பாட்டுக்கு வருவோம்

புலிகள் பற்றிய கருத்துக்களில்– "புலிகள் தேசயசக்திகளின்றி இருந்தால் அவர்கள் பாசிசத் தன்மையை எட்டமுடியாது." என்கிறார்

மன்னிக்க வேண்டும். நான் இலங்கையனாக இருந்து கொண்டு பாசிசம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் புலிகளையே–புலிகளுக்கு ஊடாகவே சில கருத்துக்களை வைக்கவேண்டியுள்ளது. இதைவிட்டு நான் ஐரோப்பாவையோ அல்லது ஆபிரிக்காவையோ அமெரிக்காவையோ உதாரணப்படுத்தி கிட்லர், முசோலினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கூறிக்கொள்ளமுடியாது.

---

**தேசியவாதம் முற்போக்காய் நகருவதாயின் அது தன்னகத்தே முற்போக்கு நோக்குகளைக் கொண்டிருக்க வேண்டும். இயல்பாக பிற்போக்காகிவிடும் தேசியவாதம் சினேகபூர்வமாக இனங்களுக்கிடையில் நிலவும் முரண்பட்டை எங்ஙனம் தீர்க்கும் ?**

---

இனி விஷயத்திற்கு வருகிறேன்.
இன்றைய ஈழ அவலநிலையில் –சிங்கள, பௌத்த, சியோனிச, பேரினவாத இனஒடுக்கலின் உச்சக்கட்டம் ஈழத்தில் நிலவும்போது– அதை எதிர்த்து 'புலிகள்' என அழைக்கப்படும் தமிழ் இளைஞர்கள் போராடும்போது, அவ் இளைஞர்களிடம் தமிழீழ மக்களின் தேசியத்தன்மைகள் கோஷங்களாகவும் உணர்வுபூர்வமாகவும் நிலவவே செய்கின்றன.

ஆனால் 'புலிகள்' என்ற அமைப்பின் மேல்நிலை அரசியல்வாதிகள் ஒவ்வொரு வர்க்கத்தின் நலன்களை பிரதிபலிக்கையில் (பாலசிங்கம் – திலகர் அமெரிக்க – ஆங்கிலேய ஏகாதிபத்திய தரகர்களாகவும், பிரபாகரன் – யோகி புலிகளின் மேல்நிலை தளபதிகளையும் தம்மையும் தேசிய – தரகுமுதலாளிய வர்க்கமாகவும், அதையே பின்பு 'புலிகள் அரசு' முதலாளியமாக ஈழத்தில் நிலைநாட்டவும், மாத்தையாவும் அவர் சகபாடிகளும் வன்னிய பெருங்குடிகளின் விவசாய, மற்றும் குட்டிமுதலாளிய வர்க்கக் கட்டுமானத்தை மேல்நிலைக்கு நகர்த்துவதற்கும் பாடுபடல்) அவ் இளைஞர்களின் இனஒடுக்கலுக்கெதிரான போராட்டம் 'குழுநலன்' என்ற பொருள்படலுக்குள் தலைபுதைக்கிறது.

புலிகளின் மேல்மட்டத்திற்குள்ளேயே (புலிகள் அமைப்புக்குள்) வர்க்கப் போராட்டச் சூழல் நிலவுகிறதென்பது ஒருபக்கம் இருக்க. புலிகளை பாசிசசக்தியாக இனங்காண்பதற்கும், அவர்கள் (புலிகள்) பாசிசத்தளம் நோக்கி முன்னேறுகிறார்கள் என்று நாம் கூறுவதற்கும் சில தரவுகளை கீழே தருகிறோம்.

1. புலிகளின் தமிழ்க் குறுந்தேசியவாதச் செயற்பாடுகள்
2. பேரினவாதத்திற்கெதிரான போராட்டத்தில் முழுச் சிங்கள மக்களையும், தமிழர்களுக்கு எதிரானவர்கள் எனக் காட்டல்.

3. இஸ்லாமிய மக்கள் சமூகத்தை இழிவாகவும், அற்பமாகவும் மதித்து அழித்தொழித்தல்.
4. இராணுவ தந்திரோபாயம் என்று கூறிக்கொண்டு சிங்கள கிராமங்களுக்குள் ஊடுருவி, சிங்கள மக்களை –இலங்கை பாசிச இராணுவம் தமிழர்களை அழிப்பது போல்– அழித்தல்.
5. சுயபொருளாதார கட்டமைப்பிற்கான 'முன்நிபந்தனை' செயற்பாடுகள் (வரி அறவிடல், தமிழ்ப் பகுதிகளில் உற்பத்திச் சாதனங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சி.)
6. தம் சொந்த மக்களையே –தமது கருத்துக்கு, கொள்கைகளுக்கு எதிராக செயற்பட்டால்– கொன்றொழித்தல்.
7. பிற இனங்கள் பற்றிய இழிவான கருத்தியல் கட்டுமானங்களை குறுந்தேசிய வாதத்துடன் இணைத்தல்.
8. புலம்பெயர்ந்து ஐரோப்பாவிலும் வேறு கண்டங்களிலும் வாழும் தமிழர்களை தமது அமைப்புக்கு பணம் திரட்டும் ஊடகமாகப் பாவித்து. போலிப் பிரச்சாரங்கள், போதைசினிமாக்கள், போதைவஸ்துக்கள் மூலம் நிதி திரட்டப் பயன்படுத்தல்.
9. குழுநலன் கொண்ட அதிகாரத்துவத்தையும், அடக்குமுறையையும் ஈழத்திலும், ஐரோப்பிய நாடுகளிலும் பயன்படுத்தல்.
10. அமைப்புக்குள் சர்வாதிகார கட்டுக்கோப்பும், கருத்துச் சுதந்திரமற்ற தன்மையும், உட்கட்சி ஜனநாயக சூழலை முற்றாக ஒழித்தலும்.
11. ஈழத்திலுள்ள அனைத்து ஜனநாயக சக்திகளையும் முற்போக்கு புரட்சிகர சக்திகளையும் அழித்தொழித்தலும், ஒரு கட்சி சர்வாதிகாரமும்.

மேற்காட்டிய தரவுகள் பொதுவில் நிகழக்கூடியதென்ற பார்வைக்கப்பால் பாசிசத்தின் முகிழ்ப்புக்கான "அரும்பு நிலைக்கு" உரம் சேர்ப்பதே.

" பாசிசம் என்பது தேசியவாதத்தின் மிகவும் கொடூரமான வடிவமாக இருக்கையில் தேசிய சக்தியில்லாத ஒரு இயக்கம் பாசிச சக்தியாக எவ்வாறு விருத்தியடைய முடியும்? "
என்று வினாவுகிறார் சிவசேகரம் அவர்கள்.

இங்கு கவனிக்கவேண்டியது என்னவெனில், பாசிசம் என்பது தேசியவாதத்தின் எல்லைக்குள் மட்டுமா உற்பத்தியாகும் என்பதாகும்! மரபுரீதியான பாசிசம் பற்றிய விளக்கம் ஒரு கட்ட நிகழ்வு மட்டுமே. அதுவே, பாசிசம் பற்றிய முழுமையான புரிதலைத் தந்துவிடாது.

பாசிசத்தின் பண்புகளை தேசிய வாதத்தின் முகாமுக்குள்ளும், வலதுசாரி அரசியலுக்குள்ளும் அடக்குவதும், மற்றைய அரசியல் சமூக சக்திகளின் மக்கள்விரோத செயற்பாடுகளுக்கு (இங்கு வர்க்க மனிதர்களுக்கப்பால் மனிதம் பார்க்கப்படுகிறது.) உடந்தையாகப் போவதாகவே அர்த்தம்பெறும். "இனமேன்மை, பிற இனங்கள் பற்றிய இழிவான கருத்து என்பன தவிர்க்கமுடியாது அதன் நிந்தனையில்

www.tamilarangam.net

ஒருபகுதியாகின்றன." என்ற கருத்துக்கும், தமிழ்ச் சமூகத்தில் நிலவும் 'மோட்டுச் சிங்களவன், தொப்பி பிரட்டியள், வயிற்றுக்குத்தை நம்பினாலும் வடக்கத்தானை நம்பக்கூடாது' போன்ற கருத்துக்கும் என்ன வித்தியாசமுண்டு?
எம்மால் இவற்றை தள்ளிவைத்து பார்ப்பதற்கு முடியவில்லை.

#########################################

**பாசிசத்தின் பண்புகளை தேசியவாதத்தின் முகாமுக்குள்ளும், வலதுசாரி அரசியலுக்குள்ளும் அடக்குவது மற்றைய அரசியல், சமூக சக்திகளின் மக்கள்விரோத செயற்பாடுகளுக்கு உடந்தையாகப் போவதாகவே அர்த்தம் பெறும்.**

#########################################

ஈழ விடுதலைப் போராட்டத்தில் புலிகளின் பங்கு பாசிசத்தை நோக்கி இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை நகர்த்தியதுதாம் மிச்சம்.
இந்தக் கட்டத்தில் இன்னுமொரு உதாரணத்தையும் குறிக்க விரும்புகிறோம்.

காலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்கள் எல்லாச் சமயங்களிலும், முற்போக்காக நகர்ந்ததில்லை. இந்தியாவின் 'காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்தை' காங்கிரஸ் கைப்பற்றி போராடியபோது, அதன் வர்க்கத்தன்மை, முதலாளியத்தின் உச்சக்கட்ட ஏகாதிபத்திய முறைக்கு எதிராகக் கோஷம் போடாமல் 'வெள்ளையனே வெளியேறு' என்று போடவைத்தது.

இங்கு முழு வெள்ளையின மக்களையும் எதிர்த்தரப்பில் வைத்து, 'அவர்கள் எமக்கு எதிரிகள்' எனக் காட்டி முதலாளிய அமைப்பைக் காத்தார்கள். இதுகூட ஒருவகையில் இனமுரண்பாடாகி பாசிச ஊற்றை தோண்டவும், பின்பு இந்திய சிறுபான்மை இனங்களுக்கு அதை பிரயோகிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

இப்போது ஈழத்தை நோக்குங்கள்!
புலிகள் இனமுரண்பாட்டைப் பயன்படுத்தி முழு சிங்கள மக்களையும் தமிழர்களுக்கு எதிரிகளெனக் காட்டினார்கள். பின்பு அதையே இஸ்லாமிய மக்களுக்கெதிராக திருப்பிக்கொண்டார்கள். இதுவே ஒருகட்டத்தில் பாசிசத்தளம் நோக்கி புலிகளை நகர வழிவகுத்துள்ளது.

இன்றைய காலங்களில் தேசியத்தை கடந்த வர்க்க விடுதலைக்கான போராட்டங்கள் அற்றுப்போய் உள்ளது. இந்த நிலையில் பாசிசமென்பது வலதுசாரி அரசியல் நிகழ்வுக்கும், தேசியவாதத்திற்கும்தாம் உரித்தானது என்பது ஏற்க முடியாத ஒரு கருத்து வடிவமாகும்.

⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐

மனிதம்–19 இல் சிவசேகரம் எழுதிய 'பாசிச சக்தியும் தேசிய சக்தியும்' கட்டுரைக்குப்பின் மனிதம் 'பாசிசம்' என்ற கருத்தைத் தவிர்த்து சகல விமர்சனங்களையும் செய்வதாக குறிப்பிடும் வாசகர் ப.வி.சிறிரங்கன் அதே இதழ் (மனிதம்–19) ஊடாகவே இந்த மதிப்பீட்டுக்கும் வந்துள்ளார். இப்படி ஒரு இதழினூடாகவே சரியான மதிப்பீட்டுக்கு வர முனையும் அவசரம், சிவசேகரத்தை 'மனிதத்தின் ஆசான்' என வாசகர் மனதில் குடிகொண்டுள்ள அர்த்தமற்ற சந்தேகத்தின் அடிப்படையிலிருந்து எழும்பியதேயொன கருதுகிறோம்.
இது உண்மைக்குப் புறம்பான ஊகமாகும்.
அத்தோடு 'பாசிசத்தின் மரபு சார்ந்த புரிதலை மனிதம் ஏற்பதாலும்..........' என எப்படி வாசகர் கண்டு கொண்டார் என்பதை வாசகர் ஆதாரப்படுத்தி எழுதியிருக்கலாம். உண்மையில் பாசிசம் பற்றிய இந்த மரபு சார்ந்த பார்வையை எப்போதுமே நாம் ஏற்றதில்லை. புலிகளை நாம் 'பாசிஸ்டுகள்' என்றே கூறுகிறோம்–அதில் இப்போதும் எமக்குள் முரண்பட்ட கருத்துக்கள் கிடையாது..
அகநிலை சார்ந்த மதிப்பீடுகள் ஆரோக்கியமான விவாதங்களை, கருத்தாடல்களை நடத்த ஒருபோதும் உதவாது. மனிதம்–19 இல் யாராவது ஒரு ஆக்கதாரர் 'பாசிசம்' என்ற சொல்லைப் பாவித்திருந்தால், வாசகருக்கு இந்த சந்தேகம் இலகுவில் அடிபட்டுப் போயிருக்கும்.
ஒரு மதிப்பீடு என்பது அவ்வளவு எளிமையானதா,என்ன?

⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐ ஆ–ர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியருக்கு,

**மனிதம்** இதழ்—19 இல் வெளிவந்த சிவசேகரத்தின் கட்டுரை தொடர்பாக இக் கடிதம் எழுதுகிறேன். புலிகளை தேசிய சக்தி என்று சொல்வதற்காக மட்டும் யாரும் கோபித்ததாக எனக்குத் தெரியவில்லை. தேசியசக்தி என்ற சொல்லிற்கூடாகவும் அதன் பின்னாலும் என்ன சொல்ல வருகிறார்கள் என்பதைப் பொறுத்தே முரண்பாடுகள் எழுகின்றன.

## சிவசேகரத்தின்
# பாசிசமும் தேசியமும்

விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் இன ஒடுக்கல் யுத்தத்திற்கு முகம் கொடுக்கும் போராட்ட சக்தியாக உள்ளனர் என்று கூறும் சிவசேகரம் இதற்கூடாக எதை விளக்க வருகிறார். புலிகள் இன்று தமது இருப்புக்காகவே சிங்கள பேரினவாத அரசின் இராணுவத்துடன் யுத்தம் செய்கிறார்கள். இது தமிழ் மக்களின் நலன்கருதி அல்ல. புலிகள் தமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் தமிழ் மக்களின் நலன்களில் இருந்து அல்லாமல், தமது குழுநலன்களின் அடிப்படையிலேயே முன்னெடுக்கிறார்கள்.

இன்று அனேகர் பார்க்கத் தவறுவது, புலிகள் அரச இராணுவத்துடன் யுத்தம் செய்யும் அதே நேரம் தமிழ் மக்களை மிகவும் மோசமாக ஒடுக்கி தமிழ் மக்களை மேலும் மேலும் பலவீனமாக்கி வருகிறார்கள் என்பதையே! புறவயமான அரச ஒடுக்கு முறைக்கு முகம் கொடுப்பதிலும் பார்க்க, அகவயமான புலிகளின் ஒடுக்குமுறைக்கு முகம் கொடுப்பது மிகவும் கடினமானது. இவற்றின் பாதிப்புக்களின் விளைவுகளைக்கூட இன்றைய சிக்கலான சூழலில் புரியவைப்பது கடினமானது.

இன்று புலிகளின் வார்க்க சார்பு பற்றி கேள்வி எழுப்பும் சிவசேகரம் அது என்ன என்றாவது சொல்வாரா? இன்று புலிகளை பாசிச சக்தி இல்லை எனக் கூறும் சிவசேகரம் 1983ம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து இலங்கை அரசை பாசிச அரசு என கவிதை பாடிவிட்டு, இலங்கையில் இருக்க முடியாது எனக் கூறி, பிரித்தானியாவுக்கு ஓடிய சிவசேகரம், அன்று என்ன ஆழமான அறிவின் அடிப்படையில் இலங்கை அரசை பாசிச அரசு எனக் கூறினார்?

இவைதவிர அவர் அங்கம் வகிக்கும் புதிய ஜனநாயகக் கட்சி பற்றியும் அதன் அரசியல் நிலைப்பாடு பற்றியும் சிவசேகரம் சற்று விளக்குவாரா?

— சின்னத்தம்பி (இலங்கை)

---

## வருந்துகிறோம் ! ****************************************************

சக்திக்கு ...
இறுதியாக வெளிவந்த 'சக்தி' இதழ் 'கருக்கலைப்புச் சுதந்திரம் பெண்விடுதலையின் பிரிக்கமுடியாத ஒரு அம்சம்' என்ற கட்டுரையில், 'மனிதம்' மீது விசனப்பட்டு எழுதியுள்ளது. இது நியாயமானதே!
மனிதம்—16 இல் வெளியான,
நியூயோர்க்கில் பெண்கள் நடாத்திய ஊர்வலம் பற்றிய பெட்டிச் செய்தியே அது. பொதுவாகவே பெட்டிச் செய்திகளில் கருத்து ரீதியில் அதிக கவனம் செலுத்தாமையும், கடைசி நேரத்தில் இடம் நிரப்பப் பயன்படுத்துவதாலும் இத் தவறு நேர்ந்துவிட்டது. இத் தவறுக்கு நாம் பொறுப்பேற்கிறோம்.
அந்தப் பெட்டிச் செய்திக்குக் கொடுக்கப்பட்டிருந்த 'மனிதாபிமானம்' என்ற தலைப்பும், வசன அமைப்புப் பாணியும் 'கருக்கலைப்புச் சுதந்திரம்' பற்றிய எமது நிலைப்பாட்டுக்கு மாறானதாக அமைந்துவிட்டது.
அதேநேரம், இந்தப் பெட்டிச் செய்தியில் வராத வசனமொன்றை ('உயிர்களைக் கொல்லும் உரிமை வேண்டுமாம் அவர்களுக்கு' என்ற வசனம்) மனிதம் எழுதியதாக சக்தி குறிப்பிட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானது. இந்த வசனம் அதில் வரவே இல்லை. இவ் வசனம் கருக்கலைப்பை கருத்துரீதியில் எதிர்ப்பவர்களைக்கூட கொச்சைப்படுத்தக்கூடிய விகாரமான சொற்றொடராகும்.
கருவைச் சுமப்பதுடன் உடல், உள ரீதியில் அனுபவிப்பதும் பெண்கள்தான் என்பதால் கருக்கலைப்புச் சுதந்திரம் பெண்களின் உரிமை என்பதே எமது நிலைப்பாடு.!

********************************** ஆ-ர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சம(ர்)ருக்கு மறுப்பு !

மனிதம்–14,15 இல் 'புலிகள் முதலாளியத் தேசிய வாதிகளோ அன்றி ஏகாதிபத்தியம், தரகு முதலாளியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளோ அல்ல' என்ற கரிகாலனின் கட்டுரை சார்பாக, கட்டுரையாளரையும், மனிதத்தையும் 'திரிபுவாதிகள்' என்று முத்திரை குத்திய 'விமர்சனம்' ஒன்றை சமர்–5.6 பிரசுரித்திருந்தது. இதுசார்பாக விமர்சனமா? தாக்குதலா? என்ற தலைப்பில் மனிதம்–18 இல் நாம் பிரசுரித்திருந்த எமது பதில் சார்பாக சமர்–7 மீண்டும் எமது கவனத்தைத் தனது பக்கம் ஈர்த்துள்ளது..

'திரிபு வாதம்', 'முதலாளித்துவ மீட்சி', 'சமூக ஏகாதிபத்தியம்' போன்ற பதப்பிரயோகங்கள் எல்லாம் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை ஒருவித தார்மீக பலத்தைக் கொண்டிருந்தன என்பது உண்மைதான். ஆனால் இன்றைய சர்வதேச சூழல் இப் பதப்பிரயோகங்களை ஒருவித கேலிக்குரியதாகவே நோக்குகிறது.

1964 க்குப்பின் சோவியத் யூனியன் உட்பட –அல்பேனியா நீங்கலாக– ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், 1976 க்குப் பின் சீனா,அல்பேனியா என்று உலகின் அனைத்துப் புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களும் சோசலிச நிர்மாணத்திலிருந்து விடுபட்டுள்ளன, அல்லது இச் சமுதாயங்களிலும் முதலாளித்துவ மீட்சி ஏற்பட்டுள்ளது. இது 70 ஆண்டுகளில் (ரசியப் புரட்சிக்குப் பின்) மாக்சியத்தில் ஏற்பட்ட பின்னடைவு என்பதை மனங்கொண்டேயாக வேண்டும். ஆனால் இப் பின்னடைவுகளுக்கான காரணம் என்ன? சோவியத் யூனியனின் பின்னடைவின்போது மாவோவினால் முன்வைக்கப்பட்ட 'திரிபுவாதம்', 'சோலிச சமுதாயத்திலும் முதலாளித்துவ சக்திகள் மீட்சி பெறும் நோக்குடன் மறைந்திருப்பர்'. 'முதலாளித்துவ மீட்சி' போன்ற காரணங்கள் இன்றைய சூழலில் முழுமையானவை அல்ல என்பதே மாக்சிய ஆய்வாளரின் முடிவாகும்.

"மாக்சியத்தில் ஏற்பட்ட இப் பின்னடைவுக்கான காரணத்தை பின்னோக்கிச் சென்று ஆய்வுசெய்ய வேண்டும். அது மாஓ, லெனின் என்று மூலவர்களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ் வரையிலான நடைமுறைத் தத்துவங்கள்வரை நீண்டு செல்லும். கட்சி அமைப்புமுறை, கட்சி நடைமுறை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், இன்னும் சோசலிசக் கட்டுமானம் என்று அனைத்து நடைமுறைத் தத்துவங்களும் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதும், அதன்மீதான ஆய்வுகளும் விவாதங்களும் ஒளிவு மறைவின்றி, எவ்வித அச்சமுமின்றி மேற்க்கொள்ளப்படவேண்டிய சூழலிது.

அதையும்,
மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாஓ என்றில்லாமல், அந்தோனியோ கிராம்சி, அல்தூசர், ரோசா லக்சம்பேர்க், மற்றும் பெத்லகீம், பால் எம்.ஸ்வீசி போன்ற இன்னும் பல மாக்சிய ஆய்வாளர்களின் சிந்தனைச் சிதறல்களும், விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே இன்றைய ஆய்வாளர்களின்ஆழ்ந்த கருத்தாகும்.

சர்வதேச ரீதியான மாக்சியப் பின்னடைவையும்– அதன் மீட்சியைப் பொறுத்த வரையிலும்,
நமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவும்,
நிலைமைகள் மேற்குறிப்பிட்டவாறு ஆய்வுக்கும் விவாதத்திற்கும் உரியதே!. சுருங்கக் கூறின் "நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்" என்பதற்கான சூழலிது. இதில் கருத்துக்களை கருத்துக்களால் வெல்ல வேண்டும். பதிலாக முத்திரை குத்துகின்ற 'விமர்சனங்கள்' மூலம் கருத்துக்களைத் தடைசெய்யக் கூடாது. அது விரும்பாத கருத்துக்களை அமுக்கிவிடுமே ஒழிய, சரியான கருத்துக்கள் மேலாண்மை பெறுவதற்கும், ஆரோக்கியமான விவாதத்திற்கும் வழி கோலாது.

இந்தவகையில்தான் (இன்றைய மேற்படி சூழ்நிலையில்) நாம் கரிகாலனின் கட்டுரை மீதானது மட்டுமன்றி பொதுவாகவும் 'திரிபுவாதம்' போன்ற பதப்பிரயோகங்களை வன்மையாக மறுக்கின்றோம்.

இக் கருத்துக்களைப் (இன்றைய இச் சர்வதேசச் சூழல்) புரிந்துகொள்வதற்கு, முதலில் மாக்சிய இயக்கவியல் விதியினை ஓரளவேனும் விளங்கிக்கொண்டு, மாக்சியத்தை ஒரு மரபாகக் காணுகின்ற குறைப்பார்வையிலிருந்து சமர் தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளுடன், சமரின் (மனிதம் பற்றிய) ஏனைய கருத்துக்கள்மீதான விவாதத்திற்கு வருவோம். மனிதம் குழு பற்றி ஏற்கனவே –சமரின் விவாதத்திற்குரிய பதிலின் தேவையுடன்– மனிதம் 18 இல் கூறியிருந்தோம்.

"இக் கருத்துத் தொடர்பாக மனிதம் குறித்த எமது விமர்சனத்தின் பின் கூட கருத்துக் கூற மறுப்பதை என்னவென்பது. இதை வேண்டுமானால் சந்தர்ப்ப வாதம் என்றே சொல்ல வேண்டும்." என்றும் ,

"ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு என்பதை மனிதம் ஏற்காததால் ('ஏற்பதால்' என்றுதான் சமர்

www.tamilarangam.net

குறிப்பிட்டிருக்கிறது. இது பிரசுரிப்பில் ஏற்பட்ட எழுத்துப் பிழை என்றே கருதுகிறோம் – மனிதம் குழு ஒரு ஆக்கதாரரின் கட்டுரையைப் பிரசுரிக்கும் அதேநேரம் அதனுடன் உடன்பாடில்லாதிருப்பின் தமது விமர்சனத்தையும் முன்வைப்பதனூ ாக விவாதத்தைத் தூண்டுவதுடன் மனிதம் சஞ்சிகை மக்களுக்கு தமது அரசியல் நிலையை தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்" என்றும்,

சமர் எழுதியிருக்கிறது.

மனிதத்தில் வெளிவரும் கட்டுரைகள் பற்றி 'மனிதம் குழு' தனது கருத்தை வெளியிட வேண்டும் என்று சமர் வலிந்து நிற்பதால் மீண்டும் ஒரு முறை 'மனிதம் குழு' பற்றி சுருக்கமாகக்கூறி, மேற்படி சமரின் கருத்தை நோக்குவோம்.

சமுகநலனில் அக்கறை கொண்டு, சமுக விஞ்ஞானங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, குறைந்த பட்ச உடன்பாடு கொண்ட கருத்துகளுடனும், எமது சமூக அரசியல் நிலைமைகள் பற்றி வேறுபட்ட கருத்துகள் உடையவர்களாகவும் இருந்து ஒரு படிப்பு வட்டமாக இணைந்து கொண்ட வெகுஜனத் தன்மை வாய்ந்த ஒரு சிறு அமைப்புத்தான் 'மனிதம் குழு'. காலத்தின் தேவையையும், எமது சமூக அரசியல் நிலைமைகள் மீதான சரியான கருத்துக்களின் தேடல்களையும் அதன் அவசியத்தையும் மையப்படுத்தி 'மனிதம்' சஞ்சிகையை வெளியிட முனைந்தோம்.

மேற்படி சமரின் கருத்துக்கான எமது பதிலில் எவ்வித சிக்கலும் இல்லை. குறிப்பிட்ட ஒரு கட்டுரை சார்பாக வேறுபட்ட கருத்துக்களை உடையவர்களாக நாம் இருக்கும் பட்சத்தில் அக் கட்டுரை சார்பான மனிதத்தின் பொதுக்கருத்தை வெளியிடுவது எவ்வண்ணம்? அதிலும் மனிதத்தில் பிரசுரிக்கப்படும் (விவாதத்திற்குரிய) அரசியல் கட்டுரைகள் :
புலிகள் தேசிய சக்தியா, இல்லையா?
புலிகள் அமைப்பு எந்த வர்க்கத்துக்குச் சார்பானது? அல்லது வர்க்கச் சார்பற்றதா?
போன்ற மையக் கேள்விகளை அடிப்படையாகக் கொண்டிருப்பது வாசகர்கள் அறிந்ததே! மேற்படி கேள்விகள் சார்பாகவும், இன்னும்,
ஐக்கிய இலங்கைப் புரட்சியா? தமிழீழப் புரட்சியா?
போன்ற கருத்துக்கள் சார்பாகவும்
முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் பற்றிய நிலைப்பாடுகள் சார்பாகவும்
வேறுபட்ட கருத்துக்களை உடையவர்களாகவே நாம் இருந்து வருகின்றோம். ஆனால் இவைகள் சார்பாகவும், சர்வதேச நிலைமைகள் சார்பாகவும் கருத்துத் தேடல்களையும் அதன்மீதான விவாதங்களையும் படிப்படியாகத் தொடர்ந்து வருகின்றோம்.

மேலும்,
ஐக்கிய இலங்கைப் பரட்சியா? தமிழீழப் புரட்சியா? என்பதில் வேறுபட்ட கருத்துக்களை உடையவர்களாகவே இருந்த போதும், பாரம்பரிய பிரதேசத்துக்கான பாதுகாப்பு என்ற அடிப்படையில் ஒரே கருத்துடையவர்களாகவே உள்ளோம். இன்னும் முஸ்லீம் மக்கள்மீதான புலிகளின் தாக்குதல்கள், அவர்களை தமது சொந்தப் பிரதேசங்களிலிருந்து விரட்டியமை சார்பாகவும், புலிகளின் 'பாசிசப் போக்கு' பற்றியும் மனிதம் குழு தமது ஒன்றிணைந்த கருத்துக்களை அவ்வப்போது கூறி வந்துள்ளமை வாசகர்கள் அறிந்ததே!

இவ்விதமான எமது அமைப்பு வடிவம், சமரைப் பொறுத்தவரை 'ஆச்சரியப்படக்கூடிய' ஒன்றாகவோ, அல்லது சிலவேளை ஜீரணிக்க முடியாததாகக் கூட இருக்கலாம்.

எமது மேற்படி நிலைமைகளில் எம்மை ஒரு கட்சி போலவும், மனிதத்தை ஒரு கட்சிப் பத்திரிகையாகவும், நினைத்து மனிதத்தில் வரும் ஒவ்வொரு கட்டுரை சார்பாகவும் மனிதம் தனது கருத்தைக் கூறவேண்டும் என்று சமர் கோருவது ஒருவகை அடம்பிடிக்கின்ற போக்கே!

ஒருசிலர் மட்டும் சேர்ந்து பத்திரிகை வெளியிடும்போது, அல்லது ஒரு குழுவில் ஒரு சிலரின் கருத்துக்கள் மட்டும் மேலாண்மை செலுத்தும் பட்சத்தில் "ஒவ்வொரு கட்டுரை சார்பாகவும் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்ற சமரின் நிலைப்பாடு சாத்தியமானதாக இருக்கலாம். அந்த வகையில் 'சமர் குழு' வுக்கும் பொருந்தலாம். ஆனால் எமது நிலை அப்படியல்ல.

மேற்படி 'மனிதம் குழு' பற்றி நாம் கூறும்போது, மனிதம்–19 இல் "விடுதலைப் புலிகள் தேசிய சக்தியும் பாசிச சக்தியும்" என்ற சிவசேகரத்தின் கட்டுரை சார்பாக "புலிகள் பாசிச சக்திகள் என்ற தமது ஒருங்கிணைந்த கருத்தை மனிதம் குழு ஏன் வெளிப்படுத்தவில்லை?" என்ற நியாயமான கேள்வியை சமர் எழுப்பலாம். இதற்கான எமது பதில் "புலிகளின் பாசிசத் தன்மை" பற்றிய மனிதத்தின் கருத்து ஏற்கனவே வாசகர்கள் அறிந்தது என்பதே!

மேலும் விவாதத்திற்குரிய கட்டுரைகள் சார்பான எமது சிறு பக்கத் தவறொன்றையும் இங்கு ஏற்றுக்கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும். இக் கட்டுரைகளுக்கு மேல் 'விவாதம்' அல்லது 'கருத்தாடல்' என்று குறிப்பிடத் தவறியதே அத் தவறாகும். இத் தவறும் கரிகாலனின் கட்டுரையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதத்தின் கட்டுரையாகப் பார்ப்பதற்குரிய சந்தர்ப்பத்தை உண்டுபண்ணியுள்ளது. எதுஎப்படி இருப்பினும் கட்டுரையாளரின் பெயர் குறிப்பிடப்படும் பட்சத்தில், அக் கட்டுரை சார்பான விமர்சனமும் அக் கட்டுரையாளரின் பெயருடன் இணைந்தே வரவேண்டும். மாறாக பத்திரிகையின் பெயரைச் சேர்த்துக் கொள்வதல்ல. இது பத்திரிகைத் தர்மமும் ஆகாது.

"ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு"
இக் கூற்றைப் பத்திரிகைகள் பிரசுரிப்பதன் மூலம் ஆக்கங்களுக்குரிய பொறுப்பை ஆக்கதாரர்களிடம் மட்டுமே முழுதாக விட்டுவிட்டு தமது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக அர்த்தப்படுகிறது என்ற மனிதம்–13 இல் உள்ள 'முழுதாக விட்டுவிட்டு .......' என்பதற்குரிய அர்த்தத்தை சமர் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்றே நம்புகிறோம். 'முழுதாக விட்டுவிட்டு.......' என்ற தொடர் குறிப்பிட்டளவு பொறுப்பு பத்திரிகைகளுக்கு உண்டு என்றுதான் அர்த்தப்படுகிறதே ஒழிய முழுப் பொறுப்பும் பத்திரிகைகளுக்குரியது என்று அர்த்தமாகாது. அர்த்தமாகவும் முடியாது.

இலகுவாக விளங்கிக்கொள்ளும் பொருட்டு எமக்கு நேர்ந்த ஒரு சம்பவத்தை உதாரணமாக்கலாம்.

மனிதம் வெளிவந்த ஆரம்பத்தில் "புதிய குழம்பல்கள்" என்ற தலைப்பில் இந் நாடுகளில் எம்மவரிடையே வந்து செல்லும் மதவாதிகள் பற்றிய ஒரு கட்டுரையை வி.லோகதாஸ் எழுதியிருந்தார். அப்போது சுவிஸில் இருக்கும் சில மதவாதிகள் வி.லோகதாசை கண்டறிய முயற்சித்தனர். அப்போது மனிதம் குழு லோகதாஸ் பற்றிய எத் தகவல்களையும் தெரியப்படுத்தவில்லை. இச் சந்தர்ப்பத்தில் இம் மதவாதிகள் வழக்குத்தொடர எண்ணியிருப்பின், மனிதத்தின்மீதே வழக்குத் தொடரும் அளவுக்கு, மனிதம் குழு பொறுப்பேற்றது.

இவ்வகையில் குறிப்பிட்ட கரிகாலனின் கட்டுரையில் எமக்கு இருக்கும் குறிப்பிட்டளவு பொறுப்புணர்வு காரணமாகத்தான் 'திரிபுவாதம்' என்ற முத்திரை குத்தல் பதப்பிரயோகத்தை வன்மையாக மறுக்கிறோம்.

ஆனால் கரிகாலனின் கட்டுரையின் கருத்துக்கள் சார்பாக கரிகாலன்தான் பதில் கூறவேண்டும். அது கரிகாலனின் தவிர்க்கவியலாப் பொறுப்பும் கூட.

அடுத்து, "வசனத்தைப் பிரித்தெடுத்து விமர்சனத்தை முன்வைத்த போக்கு விமர்சனத்தைத் தடைசெய்வதுடன் கருத்தைச் சிதைத்துள்ளமை...." என்பது சார்பாக, வசனங்களையோ, சொற்களையோ உதாரணம் காட்டுவதல்ல இங்கு பிரச்சினை. இப் பிரச்சினை என்னவெனில் கருத்தைச் சிதைக்கும் வகையில் வசனத்தைப் பிரித்தெடுப்பதுதான், இதை யார் மேற்கொண்டாலும் இவ் விமர்சனப் போக்கு தவறானதே!

'எதிரணிக்குத் தள்ளுதல்' என்ற எமது கருத்துச் சார்பான சமரின் விமர்சனத்துக்கு வருவோம், இதில் "எதிர் நிலைக்குத் தள்ளுதல்" என்பதுதான் சரியான சொற்பிரயோகம் ஆகும். இதில் எமது கவனயீனப் பிழையினை ஏற்கிறோம். ஆனால் "எதிரணிக்குத் தள்ளுதல்" யார் எதிரி? புலிகளா? என்ற கேள்வியை எழுப்பி ஏதோ 'கட்டுரையாளர் புலிகளுடன் சேர்ந்து விடுவார்' என்றே நாம் குறிப்பிட்டதாக சமர் அர்த்தங்கொள்வது விசனத்துக்குரியதாகவே இருக்கிறது.

அத்துடன் இது சமூக உளவியலுடன் சம்பந்தப்பட்டது என்பதை உணர்ந்துகொண்டால்தான் இதன் தாற்பரியத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். வெறுப்பூட்டும் விமர்சனங்களினூடாக அவரைச் செயலிழக்கச் செய்வதுகூட எதிர்நிலைக்குத் தள்ளுவதுதான். இந்த அர்த்தத்தைத்தான் நாம் குறிப்பிட்டோம். தொடர்ந்து கரிகாலன் இவ் விவாதத்தில் பங்குகொள்ளாமல் இருப்பதுகூட எதிர்நிலைக்குத் தள்ளவைத்த சமரின் விமர்சனப்பாங்கோ என்று சந்தேகிக்கக்கூட இடமுண்டு.

கரிகாலனின் கட்டுரைமீது சமர் மேற்கொண்டது விமர்சனமா? தாக்குதலா? என்பதற்கு நாம் மீண்டும் ஒரு முறை பதில் கூற வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகின்றோம். விமர்சனம், விமர்சனம் வைக்கவேண்டிய பக்குவம் சார்பாக......
"நோயாளியைக் குணப்படுத்துவதற்காகக் கொடுக்கப்படும் மாத்திரைக்குச் சமமானது விமர்சனம். அம் மாத்திரை நோயாளியைக் குணப்படுத்த வேண்டுமே ஒழிய நோயாளியை சாகடித்துவிடக்கூடாது".
என்ற மாஓவின் மேற்கோளை மீண்டுமொருமுறை கவனித்து நோக்கின் சமர் மேற்கொண்டது தாக்குதலா? விமர்சனமா? என்பது சமருக்குப் புரியவருகிறதோ இல்லையோ வாசகர்களுக்கு (சமர்+மனிதம்) நிச்சயம் புரியவரும் என்பது எமது நம்பிக்கை!

ஃஃ ஆ–ர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையிலிருந்து சில செய்திகள்

## முஸ்லீம்கள் வெளியேற்றமும் பிரபாகரனின் பேட்டியும்

அண்மையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் B.B.C க்கு அளித்த பேட்டி எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதாவது முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் கருதியே முஸ்லிம் மக்களை வடபகுதியிலிருந்து வெளியேற்றியதாக குறிப்பிட்டுள்ளார். முழுப் பூசினிக் காயை ஒரு பிடி சோற்றில் மறைக்க முற்படுகிறார் பிரபாகரன்.

குறிப்பாக வடபகுதியில் மன்னாரில் கணிசமான அளவு முஸ்லிம்களும், யாழ்ப்பாணத்தில் நகரை அண்டிய பிரதேசத்தில் சிறிய அளவிலான முஸ்லிம்களும், இதைவிட முல்லைத்தீவு, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் ஒரு சில குடும்பங்களும் மட்டுமே வாழ்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் தமிழ் மக்கள்மீது நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் எதிரொலியாக வடபகுதி முஸ்லிம் மக்கள்மீது தாக்குதல்கள் (கலகங்கள்) நடைபெறலாம் என்று அஞ்சியே முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டார்களாம்!

அப்படி ஏற்பட்டாலும், ஆயுதம் தாங்கிய மாற்று இயக்கங்களையே அடக்கி ஒடுக்கி அழித்த புலிகளுக்கு இது ஒரு பெரிய பிரச்சனையாக இருந்திருக்க மாட்டாது. உண்மையில் இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இப்படி ஒரு கலகம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறேயில்லை. இன்று பாதுகாப்புக் கருதி முஸ்லிம்களை வெளியேற்றிய புலிகள் நாளை தமிழ் மக்களின் பாதுகாப்புக் கருதி தமிழ் மக்களையும் வெளியேற்றிவிடுவார்களோ??

மற்றைய இனத்தின் தனித்துவமான பண்புகளை சகிக்க மறுத்தமையின் விளைவே இவ்வெளியேற்றம். இவ் வெளியேற்றத்தினால் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட மாசுக்களை சரி செய்யவே இவ் அறிக்கை. இது ஒருபோதும் உண்மை நிலையை மறைக்கப் போவதில்லை. அதுவும் மன்னாரில் இவ் வெளியேற்றத்தை நிறுத்துமாறு தமிழ் மக்களே புலிகளைக் கெஞ்சிக் கேட்டார்கள். அது முடியாதுபோகவே வெளியேற்றத்தைக் கண்டித்து ஊர்வலமும் நடாத்தினார்கள். இவை எல்லாவற்றையும் புலிகளால் ஒருபோதும் மறைக்கமுடியாது. **மனிதாபிமானமற்ற இவ் வெளியேற்றம் முழுத் தேசிய இனத்திற்குமான ஒரு தலைகுனிவு.**

புலிகள் இது தொடர்பில் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும். வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லீம் மக்களும் மீண்டும் குடியேறுவதற்கான வசதிகளை செய்து கொடுக்கவேண்டும். அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட சொத்துக்கள், வசிப்பிடங்கள், வணக்கஸ்தலங்கள். என்பவற்றை மீண்டும் கையளித்தல் வேண்டும்.

## படுவான்கரையில் வயலுக்கு தீ!

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்களுக்கு அண்மையில் இராணுவத்தினரால் தீவைக்கப்பட்டது. இவ் வயல்களுக்கு தீவைப்பதில் உதவியாக 'புலி எதிர்ப்பு' தமிழ்க் குழு ஒன்று சென்றிருந்தது. இத் தீவைப்புக்குக் காரணமாக படுவான்கரைப் பிரதேசத்தில் வயல்கள் சாகுபடி செய்யவேண்டுமானால் இராணுவத்தினரின் அனுமதி பெறப்பட வேண்டுமென்றும், எரிக்கப்பட்ட வயல்கள் இராணுவத்தினரது அனுமதியைப் பெறாததினால் எரிக்கப்பட்டது என்றும் இராணுவ தரப்பினரால் கூறப்பட்டது. இராணுவத்தினருக்கு உதவியாக சென்ற தமிழ்க் குழுவினாலோ அவ்வயல்கள் புலிகளினால் விதைக்கப்பட்டது, அதனால்தான் எரிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.

www.tamilarangam.net

**எரிக்கப்பட்ட வயல்களை யார் செய்கைக்கு உட்படுத்தினாலும் அது தமிழர்களின் சொத்து என்பதே மட்டகளப்பு மக்களினது கருத்தாக உள்ளது.** இந்தவகையில் இத் தீவைப்பு, வியட்நாம் மக்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக அமெரிக்க இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தீவைப்புக்கு சமனானது. இத் தீவைப்புக்கு உடந்தையாக இருந்த தமிழ்க் குழு –புலிகளின் வயல்களுக்கல்ல– இதன்மூலம் தமிழ்த் தேசிய இனத்திற்கே தீவைக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளாததும் கவலைக்குரியது.

என்ன செய்வது!

**யாழ்ப்பாணத்தில் அரிசி ஆனைவிலை,**
**மட்டக்களப்பில் வயல்களுக்கு தீவைப்பு !**

## சோமாலியா ஆகிவரும் வடபகுதி

இராணுவ குண்டு வீச்சு அச்சுறுத்தல்களுக்கும் பொருளாதார தடைக்கும் முகங்கொடுத்த வடபகுதி மக்கள், இன்று தொற்று நோய் அபாயத்திற்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. வடபகுதி மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தில் தோன்றிய 'கொலரா' தொற்று நோய் யாழ்ப்பாண மாவட்டம் பாசையூர்வரை இன்று பரவியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம், வர்ணபுரம் என்பன முழுமையாக கொலராவுக்கு இலக்காகிவிட்டது. அப்பகுதியை சுகாதாரத் திணைக்களம் தடைசெய்யப்பட்ட பகுதியாக பிரகடனப்படுத்தியுள்ளது. பொதுமக்கள் அப் பகுதிக்கு செல்லவோ, வெளியேறவோ தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் யாழ்ப்பாணம் செல்வதற்காக கிளிநொச்சி சென்றவர்களில் பலர் கொழும்புக்கு திரும்பிக் கொண்டு இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் செல்பவர்கள் யாழ் ஏரியைத் தாண்டுவதற்கு படகுக்கு ஆயிரக்கணக்கில் கிளிநொச்சியில் தங்கியிருப்பதும், போதுமான சுகாதார வசதிகளின்மையும் இத் தொற்று நோய் பரவுவதற்கு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. நோய் பரவிய பின்பும்கூட குறைந்த அளவிலான மருந்துகள்கூட கிளிநொச்சிக்கு செல்லவில்லை. செஞ்சிலுவைச் சங்கம் மட்டும் சிறிய உதவிகளைச் செய்து வருகிறது. இதற்கிடையில் யாழ்ப்பாணம் மாவட்ட கரையோரப் பிரதேசமான பாசையூரிலும் கொலரா பரவியுள்ளமை மேலும் அபாயநிலைமையை சுட்டிக்காட்டுகிறது.

பொருளாதாரத்தடை, யுத்த அபாய சூழல் என்பவற்றிற்கு மத்தியில் தொற்றுநோய் பரவுகையும் நீடித்தால்........
**வடபகுதி சோமாலியாவிலும் மோசமானதோர் நிலையை அடைந்துவிட வாய்ப்புக்கள் உண்டு.**

## கட்சிக்குள் இருந்து கிளம்பிய எதிர்ப்பையும் பேரமாக்கி வெற்றி பெற்ற தொண்டமான்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு 16 வருடமாக U.N.P அரசாங்கத்தில் அங்கம் வகித்தும் மலையக மக்களின் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள முடியவில்லை. எனவே அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும், மாகாணசபை தேர்தலில் துணிந்து போட்டியிட வேண்டும் என்றும் காங்கிரசுக்குள் ஒரு சாரார் எதிர்ப்புக்குரல் எழுப்பினர். இ.தொ.கா தலைமை இவ்வெதிர்ப்பையும் தமக்கு சாதகமாக்கி U.N.P யுடன் பேரம் பேசுவதில் ஈடுபட்டது. இவ்வெதிர்ப்பினை காரணம் காட்டி மலையக மாகாணங்களில் தாம் தனித்து போட்டியிட எண்ணி இருப்பதாகவும் U.N.P இற்கு பயமுறுத்தியது. ஏற்கனவே S.L.F.P தலைமையிலான பொதுமக்கள் முன்னணியினாலும் D.U.N.F இனாலும் கதிகலங்கி போயிருக்கும் U.N.P தலைமை மலையக மாகாணங்களில் வெற்றிக்கு இ.தொ.கா வையே நம்பியிருந்தது. இ.தொ.கா தனித்து போட்டியிட்டால் வெற்றி வாய்ப்பு அறவே இல்லாமல் போய்விடும் எனப்பயந்த நிலையில் இ.தொ.கா கேட்கின்ற வேட்பாளர்களை ஒதுக்குவதற்கு முன்வந்தது. இ.தொ.கா இதனை நன்றாக பயன்படுத்தி சென்ற தடவை 11 இடங்களை மாத்திரம் பெற்ற நிலை மாறி இந்தத்தடவை 22

www.tamilarangam.net

இடங்களை பெற்றுக் கொண்டது. மத்திய மாகாணத்தில் 11 இடங்களையும், ஊவா மாகாணத்தில் 4 இடங்களையும், சப்ரகமுவ மாகாணத்தில் 2 இடங்களையும், மேல் மாகாணத்தில் 5 இடங்களையும் இவ்வாறு பெற்றுக்கொண்டது. சென்ற தடவை மத்திய மாகாணத்தில் 6 இடங்களையும், ஊவா மாகாணத்தில் 2 இடங்களையும், சப்ரகமுவ மாகாணத்தில் 1 இடத்தையும் மேல் மாகாணத்தில் 2 இடங்களையுமே பெற்றிருந்தது.

மேல் மாகாண தமிழர் மத்தியில் இ.தொ.கா செல்வாக்கு செலுத்துவதை U.N.P நீண்ட காலமாகவே விரும்பவில்லை. மேல் மாகாணம் தலைநகரையும் உள்ளடக்கி இருப்பதால் இங்கு செல்வாக்கு பெறுகின்ற சக்திகள் தலைநகரின் சகல விடயங்களிலும் செல்வாக்கு செலுத்தக் கூடியதாக இருக்கும் என்பதாலேயே தன்னோடு பேரம் பேசுகின்ற சக்தியான இ.தொ.கா செல்வாக்கு பெறுவதை விரும்பவில்லை. இதற்குப் பதிலாக தன்னால் நேடியாக கட்டுப்படுத்தக்கூடிய தமிழர் தலைமை வளர்வதையே விரும்பியிருந்தது. இதன் காரணமாகவே பாராளுமன்றத் தேர்தலில் இராஜதுரையையும், மாநகரசபைத் தேர்தலில் கணேசலிங்கத்தையும் போட்டிக்கு நிறுத்தி இருந்தது. மேல் மாகாண தமிழர்தலைமை கணேசலிங்கத்தை மையமாக வைத்து வளர வேண்டும் என்பதற்காக மாநகரசபைத் தேர்தலில் கணேசலிங்கத்திற்கான வாக்கு வேட்டையில் ஜனாதிபதி நேரடியாக ஈடுபட்டிருந்தார். தன்னுடைய நேரடி ஆதரவாளர்களை பிரச்சாரத்தில் ஈடுபட வைத்தார். உண்மையில் கணேசலிங்கத்திற்கான பிரச்சார வேலைகளில் ஈடுபட்டவர்களில் தமிழ் இளைஞர்களிலும் பார்க்க சிங்கள இளைஞர்களின் தொகை அத்தேர்தலில் அதிகமாக இருந்தது. இந்தத் தேர்தலில் அவரது கையை மேலும் பலப்படுத்தும் வகையில் கணேசலிங்கத்தின் பாரியாரான ஜமுனா கணேசலிங்கத்தை போட்டியிட வைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. ஆனால் அதற்கிடையில் இ.தொ.கா மலையக மாகாணத்தில் தனக்கு இருக்கும் வாக்குப் பலத்தைக் காட்டி மேல் மாகாணத்தில் 5 இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

## தொடரும் பட்டினிக்கொலைகள்......

இன்னமும் வடக்குப்பகுதி தன்னுடைய நாட்டின் ஒரு பகுதி எனக் கூறிக்கொள்கின்ற இலங்கை அரசு திட்டமிட்டு பொருளாதாரத் தடைகளை கொண்டு வந்ததன் மூலம் அங்கு பட்டினிச் சாவுகளை உருவாக்கி வருகின்றது. தலையிடிக்கு போடுகின்ற பனடோலுக்குக்கூட ஆலாய் பறக்க வேண்டிய நிலையில் வடபகுதி மக்கள் உள்ளனர். குழந்தைகளுக்கான பால்மா தட்டுப்பாடு மிகவும் மோசம். ஒரு கரண்டி மாவில் ஒரு போத்தல் தண்ணியைக் கலந்து கொடுக்கும் நிலையில் தாய்மார்கள் உள்ளனர். போசாக்கின்மையால் குழந்தை மரணம் அதிகரித்தே வருகின்றது. அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் கொழும்பு விலையுடன் ஒப்பிடும்போது எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு உச்சநிலையை அடைந்துள்ளன. இதோ மாதிரிக்கு சில பொருட்களின் விலைகள்.

(யாழ்ப்பாணத்திற்கு வருபவர் 3 அப்பியாசக் கொப்பிகள் மட்டும் கொண்டு வருவதற்கு அனுமதி உண்டு.)

இலங்கை அரசு போதிய உணவுப் பொருட்களை அனுப்பாதது ஒருபுறமிருக்க அனுப்பிய கொஞ்சப் பொருட்களிலும் புலிகள் ஒரு பகுதியை சுருட்டிக் கொள்வதனாலும் விலை அதிகரிக்கின்றது. அண்மையில் கொழும்பில் இருந்து தனிப்பட்ட வியாபாரியினால் கொண்டு செல்லப்பட்ட 45 பரல் மண்ணெண்ணையில் 30 பரல்களை புலிகள் கொழும்பு கொள்விலையில் பறித்துவிட்டு மீதி 15 பரல்களையும் நீங்கள் நினைத்த விலைக்கு விற்கலாம் என அனுமதி கொடுத்துள்ளனர். அதேபோல் அரசாங்கம் அனுப்பிய மண்ணெண்ணையில் ஒரு பகுதியையும் தங்களின் தேவைகளுக்கு என பறித்து

| பொருட்கள் | அளவு | கொழும்பில் விலை | யாழ்பாணத்தில் விலை |
|---|---|---|---|
| மண்ணெண்ணை | 1 போத்தல் | 33 ரூபா | 250 ரூபா |
| பெற்றோல் | 1 போத்தல் | 33 ரூபா | 3000 ரூபா |
| அரிசி | 1 கிலோ | 22 ரூபா | 50 ரூபா |
| சீனி | 1 கிலோ | 26 ரூபா | 70 ரூபா |
| சண்லைட் | 1 கட்டி | 7 ரூபா | 22 ரூபா |
| தீப்பெட்டி | 1 | 1 ரூபா | 14 ரூபா |
| 40 பக்க கொப்பி | 1 | 5 ரூபா | 20 ரூபா |
| பஸ் கூலி | 4 கிமீ | 3 ரூபா | 20 ரூபா |

www.tamilarangam.net

வைத்துள்ளனர். புலிகள் இவ்வாறு பறித்திருக்காவிட்டால் மண்ணெண்ணையின் மோசமான விலையேற்றத்தை தடுத்திருக்கலாம் என தனியார் வியாபாரிகளும், பொதுமக்களும் தெரிவிக்கின்றனர். உணவுப் பொருட்கள் தொடர்பிலும் இந்நிலையே தொடர்கின்றது. மாணவர்களுக்கு கொடுக்கின்ற கூப்பன் முத்திரை மாதப் பணத்திலும் 3 மாதப் பணத்தினை மட்டும் மாணவர்களுக்கு கொடுத்துவிட்டு மீதி 6 மாதப் பணத்தினையும் தமக்கென அபகரித்துக் கொள்கின்றனர். அண்மையில் மாணவர்களுக்கு என கொடுக்கப்பட்ட இலவச சீருடையைக்கூட கிளிநொச்சி மாவட்டத்தில் 40 ரூபாவிற்கு விற்றார்களென கிளிநொச்சியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான அரசின் பொருளாதாரத் தடையையும், புலிகளின் அடாவடித்தனங்களையும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் கண்டிப்பதற்கு முன்வர வேண்டும்.

## உலக சாதனை படைத்து வரும் இலங்கை அரசு

*இலங்கை அரசு வேறு ஏதாவது விடயங்களில் உலக சாதனை படைத்து வருகிறதோ இல்லையோ ஒரு விடயத்தில் மட்டும் உலக சாதனை படைத்து வருகின்றது. அவசரகாலச் சட்டத்தை நீண்டகாலம் அமுலில் வைத்திருத்தலே அச் சாதனையாகும்.*

*இலங்கை 'சுதந்திரம்' அடைந்த 1948ம் ஆண்டிலிருந்து இன்று வரையான 45 ஆண்டுகளில் மூன்றில் ஒரு பங்கினை — அதாவது 15 வருடத்தினை — அவசரகாலச் சட்டத்தின் கீழ் மாறிமாறி ஆட்சி செய்துள்ளனர். நாட்களில் அதனைக் கூறுவதாயின், 5320 நாட்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியினர் 29 ஆண்டுகளும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் 16 ஆண்டுகளும் ஆட்சி செய்துள்ளனர். பாராளுமன்றத்தில் 175 தடவைகள் அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளனர். இச் சாதனையை கின்னஸ் புத்தகத்திலும் பதிந்து கொள்ளலாம்.*

*இந்த வகையில் உலகில் உள்ள நாடுகளில் புதுமையான **'அவசரகாலச்சட்ட ஜனநாயகத்தை'** பின்பற்றும் நாடு என இலங்கையை குறிப்பிடலாம்.*

## பதவிக்காக ஒரு பனிப்போர் UNP க்குள் பிரதமர்

*ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எந்தவித முரண்பாடுகளோ, பிரச்சினைகளோ இல்லை என கட்சித் தலைமை தம்பட்டம் அடித்தபோதும் பிரதமர் பதவிக்காக கூட்டுறவு உணவுத்துறை அமைச்சர் **வீரசிங்க மல்லிமாராச்சியும்** வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் **சிறிசேன கூரேயும்** தங்களுக்குள் ஒரு பனிப்போரினை நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.*

*அடுத்த வருடம் நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து பிரேமதாசா அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்ய முடிவு எடுத்துள்ளார். அம் மாற்றத்தின்போது தற்போது பிரதமராக இருக்கும் டி.பி.விஜயதுங்காவுக்கு அப் பதவியை கொடுப்பதில்லை என்றும் தமக்கு நெருக்கமாகவுள்ளவர்களுக்கே அப்பதவியை கொடுப்பது என்றும் முடிவு செய்துள்ளார். இதனால் மல்லிமாராச்சியும், சிறிசேன கூரேயும் ஜனாதிபதிக்கு நெருக்கமாக வருவதற்கு முண்டியடித்துக் கொண்டு போட்டி போடுகின்றனர். இருவரும் ஜனாதிபதியின் மனத்தை வெல்வதற்காக போட்டி போட்டுக் கொண்டு அவரது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர். பிரேமதாசா கலந்து கொண்டிருக்கின்ற ஒரு கூட்டத்திற்காவது மல்லிமாராச்சி தவறுவது கிடையாது. இத்தோடு மட்டும் நின்றுவிடாது UNP க்குள் கூரேக்கு எதிராக உள்ளவர்களையும் தம் பக்கம் சேர்ப்பதற்கு முயற்சி செய்து வருகின்றார். இவரது இவ்வாறான நடவடிக்கைக்கு கூரேயின் விரோதிகளில் ஒருவரான கட்சன் சமரசிங்கா மிக உதவியாக உள்ளார். கூரேயின் இன்னொரு விரோதியான ஜனாதிபதியின் பாரியாரான கேமா பிரேமதாசாவையும் கொழும்பு மேயர் ரட்னசிறி ராஜபக்சவையும், தன்னுடைய வலைக்குள் போட மல்லிமாராச்சி முயற்சி செய்து வருகிறார்.*

*இவருடைய முயற்சி ஒருபுறமிருக்க கூரேயும் செய்தி,தொடர்பு அமைச்சர் A.J. ரணசிங்காவின் உதவியுடன் U.N.P க்குள் தமக்கு சார்பானவர்களைத் திரட்டிவருகிறார். **இந்த A.J.ரணசிங்கா தலைவர்களின் காலில் விழுந்து வணங்குகின்ற 'தமிழ் நாட்டு திராவிட பாரம்பரியத்தை' இலங்கையில் அறிமுகப் படுத்தியவர். அடிக்கடி ஜனாதிபதியின் காலில் விழுபவர்.** இவருடைய உதவி கூரேக்கு பெரும் உதவியாக உள்ளது. எனினும் UNP க்குள் கூரேக்கு*

www.tamilarangam.net

விரோதிகள் அதிகம். இவ் விரோதிகளைப் பயன்படுத்தி, ஜனாதிபதியை கூடரே நெருங்கவிடாது மல்லிமாராச்சி தடுத்துவருகிறார்.

கட்சிக்குள் ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் உள்ளவரும், ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை காலத்தில் ஜனாதிபதிக்கு கூடுதலாக உதவியாக இருந்தவரும், மந்திரி சபை பேச்சாளருமான ரணில் விக்கிரமசிங்காவிற்கு பிரதமர் பதவியைக் கொடுப்பதற்கு ஜனாதிபதி பின்நிற்கிறார். இரண்டாவது நிலையில் உள்ள ஒருவருக்கு ஜனாதிபதிக்கு அடுத்தபடியாக உள்ள பிரதமர் பதவியை கொடுப்பது தமக்கே ஆபத்தாக அமையலாம் என அவர் கருதுகிறார். இதனால் பிரதமர் பதவியை அவருக்கு கொடுக்க முன் வராததோடு அவர் இரண்டாவது தலைவராக வளர்வதற்கு ஏதுவாக உள்ள வழிகளையும் அடைத்து வருகிறார்.

நன்றி – **யுக்திய** (07.03.93)

# U.N.P க்கு புதிய தலையிடி

மாகாணசபை தேர்தலில் எதிர்க்கட்சிகள் பொது முன்னணி அமைத்து வரிந்து கட்டிக் கொண்டு நிற்கும்போது முகம் கொடுக்கின்ற வேளை, இன்னோர் தலையிடியையும் U.N.P தற்போது சந்திக்க நேரிட்டுள்ளது. முன்னாள் U.N.P மாகாணசபை உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் லலித்–காமினி கட்சியான D.U.N.F இல் சேர்ந்தமையே அத்தலையிடியாகும். மாகாணசபை தேர்தல் நடைபெறும் 7 மாகாணசபைகளிலும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இவ்விலகலானது நடைபெற்றுள்ளது. அதுவும் குருநாகல் மாவட்டத்தில் 13 முன்னாள் U.N.P மாகாணசபை உறுப்பினர்கள். D.U.N.F சார்பில் தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

U.N.P யின் வெற்றிக்கு உலை வைக்கும் வகையில் தோற்றமெடுத்த D.U.N.F எல்லா மாகாணங்களிலும் U.N.P யின் வெற்றிவாய்ப்பை குறைக்கும் வகையில் செயல்படுகின்றது. U.N.P யின் முன்னாள் புள்ளிகள் பலர் D.U.N.F யின் முதன்மை வேட்பாளராக இருந்துள்ளனர். மேல் மாகாணத்தில் லலித்தும், மத்திய மாகாணத்தில் காமினியும், வடமேல் மாகாணத்தில் G.M. பிரேமசந்திராவும், ஊவா மாகாணத்தில் சமரவீரவன்னியும், சப்பிரகமுவ மாகாணத்தில் P.B.G. கலுகல்லயும், வடமத்திய மாகாணத்தில் Dr .ஜோன்பிள்ளயும், தென் மாகாணத்தில் Dr. P.M.B. சிறிலும் இவ்வாறு போட்டியிடுகின்றனர். இவர்களில் லலித், காமினி, G.M. பிரேமசந்திரா, P.B.G கலுகல்ல சமரவீரவன்னி ஆகியோர் U.N.P யின் முன்னாள் அமைச்சர்களாவர். இதைவிட முன்னாள் ஜனாதிபதி J.R. ஜயவர்த்தனாவின் மறைமுக ஆசிர்வாதமும், ஆதரவும் இவர்களுக்கு உண்டு. எந்த மாகாணசபையிலும் அதிகாரத்திற்கு வரும் பலம் இவர்களுக்கு இல்லையாயினும் எல்லா மாகாணத்திலும் U.N.P யின் வாக்குப் பலத்தை குறைக்கும் ஆற்றல் இவர்களுக்குண்டு. இவ்வாறு U.N.P யின் வாக்குப்பலத்தில் 20 வீதத்தினையாவது குறைக்கக்கூடிய நிலை இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர். இது U.N.Pயின் வெற்றி வாய்ப்பினை குறைத்து S.L.F.P தலைமையிலான பொதுமக்கள் முன்னணியின் வெற்றி வாய்ப்பினை அதிகரிக்கச் செய்யும். மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் போன்றவற்றில் பொதுமக்கள் முன்னணி வெற்றியடையக்கூடிய சாத்தியக்கூறுகளே தற்போதுள்ளன. அதுவும் மேல் மாகாணத்தில் பொதுமக்கள் முன்னணி சந்திரிகா விஜயகுமாரணதுங்கா தலைமையில் போட்டியிடுவதால் விஜயகுமாரணதுங்காவின் அனுதாப வாக்குகளையும் பெறக்கூடிய நிலை இருப்பதாலும் D.U.N.Fசார்பில் லலித் போட்டியிடுவதால் U.N.P வாக்குகள் உடையக் கூடிய நிலை இருப்பதனாலும் பொதுமக்கள் முன்னணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது.

# தாயும் மகளும் ஓரம் கட்ட முனைந்தும் வெற்றி பெறும் அனுரா

S.L.F.P இற்குள் அடுத்த தலைமைப் போட்டியில் அனுராவை வரவிடாமல் தடுப்பதற்கு தாயும்,மகளும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்ற போதும் அனுரா வெற்றியடைந்தே வருகின்றார். அண்மையில் தாய் சிறிமா மலேசியாவிற்கு சென்றபோது பதில் எதிர்க்கட்சி தலைவராக அனுராவை நியமிக்காமல் அனுராதபுர மாவட்ட பாராளுமனற உறுப்பினரான K. P .இரத்தினநாயக்காவை நியமித்துவிட்டு சென்றிருந்தார். ஆனால் அனுரா S.L.F.P யின் பெரும்பான்மை உறுப்பினர்களிடம் கையொப்பம் வாங்கி சபாநாயகரிடம் பதில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை தான் பெற்றுக் கொண்டார். S.L.F.P யின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பகுதியினரின் ஆதரவு இருக்கும் மட்டும் S.L.F.P யின் சக்தி வாய்ந்த அமைப்பான "கெல் உருமய" இருக்கும் மட்டும் அனுராவை தாயும்,மகளும் தாம் நினைத்த மாதிரி ஓரம் கட்டிவிட முடியாது.

S.L.F.P தலைமையில் அமைக்கப்பட்ட பொதுமக்கள் முன்னணிக்கும் தனக்குப் பின்னர் தலைமை அளிப்பதற்கு மகள் சந்திரிக்காவையே தாய் உருவாக்கி வருகின்றார். அதற்காகவே மேல் மாகாணசபைக்கான முதன்மை வேட்பாளராக சந்திரிகாவை நியமித்துள்ளார். இந்திய மயமாக்கத்தினை நிறுத்தும்முகமாக D.U.N.F ஐ பொதுமக்கள் முன்னணியில் சேருமாறு அனுரா வற்புறுத்தியும் அவர்கள் உடன்படவில்லை. D.U.N.F உடன்பட்டிருந்தால் சந்திரிகாவின் நியமனத்தை நிறுத்தி லலித்தை முதன்மை வேட்பாளராக நியமித்து இருக்கலாமென அனுரா கருதியிருந்தார்.

அனுராவின் இம்முயற்சி தோல்வியில் முடிந்தாலும் பொதுமக்கள் முன்னணியில் 50 வீதத்திற்கு மேற்பட்ட ஒதுக்கிடங்கள் S.L.F.P இற்கு வழங்க வேண்டுமென நிபந்தனை விதித்ததன் மூலம் தன்னைக் காப்பாற்றி வருகின்றார். பொதுமக்கள் முன்னணியில் இணைந்துள்ள ஏனைய கட்சிகள் சந்திரிகாவின் தலைமையை விரும்பிய போதும் S.L.F.P இற்குள் செல்வாக்குள்ளவரே முன்னணியினதும் தலைவராக வரக்கூடிய நிலை இருப்பதால் அனுராவே இதில் வெற்றி பெறக்கூடியநிலை உள்ளது. இதைவிட D.U.N.F இனரும் U.N.P யின் ஒரு பிரிவினரும் அனுரா தலைவராவதையே விரும்புவதால் அவர்களின் மறைமுக ஆதரவையும் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை அவருக்குள்ளது. மறுபக்கத்தில் சந்திரிகாவிற்கு வெறும் பெயர்ப்பலகைகளோடு இருக்கும் இடதுசாரிக்கட்சிகளே தமது ஆதரவை செலுத்தி வருகின்றன.

## உடுகம்பொல பற்றிய தகவல் தருபவர்களிற்கு 10 இலட்சம் சன்மானம்!

U.N.P அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியை தருபவராக விளங்குகின்ற முன்னாள் பிரதி பொலிசு மா அதிபர் உடுகம்பொல பற்றிய தகவல்களைத் தருபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் கொடுப்பதற்கு பொலிசு மா அதிபர் தீர்மானித்துள்ளார். அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக தலையிடி கொடுத்து வரும் அவர் பத்திரிகைகளுக்கு மறைமுக பேட்டி கொடுத்த நிலையை மாற்றி தற்போது தனக்கு எதிராக நடைபெறும் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்திற்கு மறைமுக கடிதம் கொடுத்து வருகின்றார். அரசின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தமையும் தனது சகோதரனின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு பத்திரிகைகளுக்கு போஸ் கொடுத்தமையும் அரசிற்கு விசனத்தை ஏற்கனவே ஊட்டியிருந்தது. படையினர் மத்தியில் இருக்கும் செல்வாக்கினைப் பயன்படுத்தியே அவர்களின் உதவியுடன் இவர் இவ்வாறெல்லாம் நடந்து கொள்கின்றார் என்று சந்தேகமும் கொண்டிருந்தது.

இதனால் தற்போது அரசு எப்படியாவது அவரைக் கைது செய்யும்படி பொலிசு மா அதிபருக்கு கடுமையான பணிப்புரையை வழங்கி உள்ளது. இப்பணிப்புரையின் பேரிலேயே 10 இலட்சம் வழங்கும் முடிவினை எடுத்ததாக இரகசிய பொலிசு வட்டாரங்களில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பொலிசு மா அதிபர் உடுகம்பொலவை தேடும் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவுள்ள இரகசிய பொலிசு அதிகாரி திரு.பந்துலவிக்கிரமசிங்காவை அழைத்து உடுகம்பொலவைக் கைது செய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு பணித்துள்ளதாகவும் எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் உடுகம்பொல தனக்கு எதிரான வழக்கில் தனக்காக ஆஜராகும் வழக்கறிஞர் திரு. S.L. குணசேகராவிற்கு தனிப்பட்ட அனுமதி வழங்கும் கடிதத்தை கொடுத்திருந்தார்.

தற்போது இலங்கை அரசின் மனித உரிமை மீறல் தொடர்பாக ஒரு நூல் ஒன்றை திரு.உடுகம்பொல எழுதிக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கிடைக்கின்றன.

www.tamilarangam.net

# வாசுதேவாவுடன் ஓர் நேர்காணல் !

*?? தேசிய இனப் பிரச்சினை இந் நாட்டின் பிரதான பிரச்சினையாக உள்ளது. அப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படாத பட்சத்தில் பிற பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பது சாத்தியமற்றது என்ற கருத்து நிலவுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

**OO** தேசிய இனப்பிரச்சினை என்பது இலங்கையில் மட்டுமல்ல, மூன்றாம் உலக நாடுகள் முழுவதிலுமே எரிந்து கொண்டிருக்கின்ற முக்கியமான பிரச்சினையாகும். இது ஒருசில முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியுடன் தீர்க்கப்பட்டதைக் காணமுடியும். இலங்கையில் தேசிய ஒருமைப்பாடு என்பதிலிருந்துதான் பார்க்கமுடியும். சிங்களத் தலைவர்களின் சிங்கள ஒருமைப்பாடு தமிழ் மக்களுக்கு ஒரு பாதகமான நிலையைத் தோற்றுவித்தது. தொடர்ந்து ஏற்பட்ட முரண்பாடுகள் இன்றைய நிலைக்கு காரணமாயிற்று.

NSSP யைப் பொறுத்தவரை தேசிய ஒருமைப்பாட்டைக் கொண்டுவர வேண்டுமானால் தேசிய இனங்களுக்கான உரிமைகளை வழங்குதல் வேண்டும் எனக் கருதுகின்றது. இந் நிலையில் பெரும்பான்மையான சிங்கள மக்களை இந்த நிலைக்கு கொண்டுவரமுடியுமா? என்ற கேள்வி எழலாம். எல்லாச் சிங்கள மக்களையும் கொண்டுவர முடியுமென்று நாம் நினைக்கவில்லை. ஆனால் உள்ள சக்திகளை இணைத்து ஓரளவுக்கு கொண்டுவர முடியும். இச் சக்திகளுக்குள் சிங்கள முற்போக்குச் சக்திகள், இடதுசாரிகள், மாணவர்கள், விவசாயிகள், மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள், வடக்கு கிழக்கிலுள்ள தமிழ்-முஸ்லீம் மக்கள் மத்தியில் இருக்கும் முற்போக்காளர்கள், சூழலியலாளர்கள், சுதந்திரப் பத்திரிகை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்போர்கள் இதற்குள் உள்ளடக்கப்பட வேண்டும். இவ்வாறான சக்திகளைத் திரட்டி வேலைசெய்யும்போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகூட ஏற்கப்படக்கூடும். NSSP தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருப்பது உங்களுக்குத் தெரியும்.

*?? தேசிய இனப் பிரச்சினையில் பிற இடதுசாரிக் கட்சிகளின் நிலைப்பாடுகள் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் அவநம்பிக்கை நிலவுகிறது. ஆனால் நவசமசமாஜக் கட்சியின் இது தொடர்பான கருத்துக்கள் நம்பிக்கை ஊட்டுகின்றன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை விடுதலைப் போராட்ட உரிமை என்பவற்றிற்காக சிங்கள மக்களும் குரலெழுப்புவதும் போராடுவதும் அவசியம். அப்போதுதான் மொத்த இலங்கை மக்களின் பிரதான பிரச்சினை தீர்க்கப்பட்ட முடியும் என்று கருதப்படுவதுபற்றி ஜே.வி.பி யின் நிலை என்ன?*

**OO** முதல் வினாவிலேயே இதற்கான பதிலைக் கூறியுள்ளேன். அதைவிட 'யுத்திய' போன்ற சிங்களப் பத்திரிகைகள் ஆயிரக்கணக்கான பிரதிகளை வெளியிடுகின்றன. அவை தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளுக்கு குரல் கொடுத்து வருகின்றன.

*?? சிங்கள பேரினவாத அடிப்படையைக் கொண்ட அரசு, அதன் ஆதிக்கத்திலுள்ள மக்கள் என்ற நிலை இருக்கும்வரை உங்கள் பாதை எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியம் என்று கருதுகிறீர்கள்? உங்கள் கருத்துக்கள் சரியாயிருப்பினும் அதற்கான உங்கள் பாதை -உதாரணமாக பாராளுமன்றம்- எவ்வளவு தூரம் வெற்றி தர வல்லது?*

**OO** நான் மேலே குறிப்பிட்ட சக்திகளை ஒன்றிணைத்து விட்டால் மட்டும் போதுமானதல்ல, அவை நடைமுறைப்படுத்தக் கூடியளவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இச் சக்திகள் ஒன்றிணைந்தால் பாராளுமன்றத்தில் குறைந்தது 40 ஆசனங்களைக் கைப்பற்றலாம். 40 ஆசனங்களைக் கொண்ட சக்தி பாராளுமன்றத்தில் இருக்குமானால் நம்மால் யுத்தத்தைக்கூட நிறுத்தக்கூடியதாக இருக்கும். இந்த பேரினவாத அரசின்மீது

அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியும். இவை சில சீர்திருத்தங்களே! முற்று முழுதான தீர்வு வரவேண்டுமானால் ஓர் புரட்சிகர இடதுசாரி இயக்கம் உருவாக வேண்டும்.
தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பாக இன்னொன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். இதுவரை காலமும் தமிழ் மக்களின் விடுதலையைக் கோரிய கட்சிகள் மாறிமாறி ஆட்சிக்கு வந்த இரு பேரினவாதக் கட்சிகளுடனும் பேரம் பேசுவதிலேயே ஈடுபட்டனர். தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதை விட்டு தமிழ் மக்களை முட்டாள்களாக்கிய செயல் இது! இனப் பிரச்சினையில் இடதுசாரிக் கட்சிகள்கூட SLFP யுடன் சேர்ந்து நிற்பது துரதிஸ்டமானது. அவர்கள் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் போராட்டம் நாடு முழுவதற்குமான ஜனநாயக வர்க்கப் போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இதனால் அது ஒரு தனிமைப்படுத்தப்பட்ட போராட்டமாகியது. இந்தியா உதவும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருந்ததும் தமிழ் மக்கள் விட்ட இன்னொரு தவறாகும். இந்தியா தனது நாட்டு மக்களையே அடக்கியொடுக்குகின்றது. பின்பு எப்படி தமிழ் மக்களின் விடுதலைக்கு உதவ முடியும். இதற்கு தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களை வென்றெடுப்பதே ஒரேயொரு வழிமுறையாகும்.

*?? தமிழ் மக்கள் பிரிந்து போகலாம் எனக் கூறுகின்றீர்கள். இது தொடர்பாக உங்கள் கட்சியின் நடைமுறை வேலைகள் எவை?*

**OO** முதலாவது செய்யவேண்டிய வேலை, தமிழ் மக்களுக்கு பிரிந்து போகும் உரிமை உண்டு என்பதை சிங்கள மக்கள் மத்தியில் அங்கீகரிக்கச் செய்தலாகும். தமிழ் மக்கள் பிரிந்து போகலாம், ஆனால் ஒன்றாக இருக்க முடியுமா? எனச் சிந்தியுங்கள் என்றுதான் நாம் கேட்க விரும்புகிறோம். ஏனெனில் தேசிய இனப் பிரச்சினையானது தெற்காசியா முழுவதிலுமே எரியும் பிரச்சினையாக உள்ளது. எனவே தெற்காசியா என்ற பிராந்திய மட்டத்தில் செயற்படுவதன்மூலம் மட்டுமே ஏகாதிபத்தியத்தை முறியடிக்க முடியும், ஆக, இதுபற்றிய தெற்காசியக் கண்ணோட்டம் ஒன்றைத்தான் நாம் பெறவேண்டும்.

*?? தமிழ் மக்களின் ஆயுதமேந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடு பற்றி தங்கள் கருத்துக்களைக் கேட்கும்போது, சிங்கள மக்கள் மத்தியிலும் இத்தகைய ஒரு போராட்டத்தின் தேவை நிலவுவது குறித்து நீங்கள் கருதுவது என்ன என்ற கேள்வி எழுகிறது. என்ன கூறவிரும்புகிறீர்கள்?*

**OO** போராட்டத்தின் நிலைமை, சூழல் ஆகியவற்றைப் பொறுத்தே அது ஆயுதப் போராட்டமாகவோ, மக்கள் போராட்டமாகவோ வெளிப்படும். ஆயுதப் போராட்டம் ஒரு இலட்சியம் என்று பார்க்காமல் தந்திரோபாய ரீதியில் அது அவசியம் என்று பார்த்தல் வேண்டும். இன்று தெற்கிலும் வடக்கிலும் அரசைத் தூக்கியெறியக்கூடிய மக்கள் போராட்டம்தான் அவசியம். அது படையினரால் ஒடுக்கப்படும் பட்சத்தில் ஆயுதக் கிளர்ச்சியாக எழும்.

மிக தியாகம் நிறைந்த திடசங்கற்பம் கொண்ட தமிழ் மக்களின் போராட்டம் நீண்ட காலமாக நடைபெறுகின்றது. அதனால் இறுதி வெற்றியை எட்ட முடியாமல் இருக்கின்றது. ஏனெனில் பெரும்பாலான மக்கள் இதில் ஈடுபடவில்லை. நாடு பூராவும் உள்ள மக்கள் அரசியல் போராட்டத்தில் ஈடுபடவேண்டும் வெடித்துக் கிளம்பவேண்டும். பெரும்பான்மையான மக்கள், போராட்டத்தில் ஈடுபட்டு உணர்வைப் பெறவேண்டும். அவர்கள் பெறுகின்ற உணர்வுதான் முக்கியமானது. போராட்டம் எந்தக் கட்டத்தில் ஆயுதப் போராட்டமாக மாறும் என்பது சூழலைப் பொறுத்தது. ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். நாம் இன்னமும் ஆயுதம் ஏந்திப் போராடாமல் இருப்பதன் காரணம் இன்னமும் பெருந்திரளான மக்களை அணிதிரட்டாததால்தான். இதைக் கவனத்தில் கொள்ளாது, ஆயுதம் தூக்கினால் நாம் விரைவில் அழிந்து விடுவோம்.

*?? தனியார் மயமாக்கல், திறந்த பொருளாதாரம், . . . . போன்ற பிரேமதாசாவின் திட்டங்கள் குறித்த உங்கள் அபிப்பிராயங்கள் என்ன?*

**OO** ஏகாதிபத்தியம் திணிக்கின்ற திட்டத்தின் ஓர் அங்கமே இது. இது எதிர்க்கப்பட வேண்டும், தோற்கடிக்கப்பட வேண்டும். ஏகாதிபத்தியத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்ட வேண்டும். எங்களுடைய

www.tamilarangam.net

# எதிர்பார்ப்பு

மலரின் மதிப்பு
மாலையோடு போச்சு
பொருளின் மதிப்பு
பொழுதோடு போச்சு
மனிதன் மதிப்பு
வெடியோடு போச்சு

பூமிப் பந்தை
புடம் போட்டு
புடம் போட்டு
வெடிகுண்டாக
மாறிப் போச்சு

இன்றைய
பூமியின்
மலிவுச் சரக்கு
வெடிகுண்டு
என்றாகிப் போச்சு

பிரிக்கப்பட்ட
பூமிப் பகுதியில்
எவ்வளவு
வெடிகுண்டு
எவர்க்கும் தெரியாது

குறைந்த மதிப்பீடு
ஆயினும்
பூமியைக் கொளுத்த
போதுமானதே

மனிதன் முன்னே
மற்றோர் மனிதன்
எப்போ வெடிப்பான்
என்பது கேள்வியே

மானிடம் நிறைந்த
மனிதர்கள் வாருங்கள்
எல்லோர்க்கும் எல்லாம்
பொது
என்றோர்
உலகைப் படைப்போம்

இல்லாது போனால்
குண்டுகள் இன்றி
காடேதும் இருப்பின்
அதனைத் தேடி ஓடி
மரம் மேல் ஏறி
தரைக்கு இறங்கி
பூமி தன்னை
புதிதாய்ப் புனைவோம்

**யதார்த்தினி**

---

பிராந்தியம் முக்கியமானது என்று கருதும் அதேவேளை யப்பான், அமெரிக்கா, ஐரோப்பாவில் நடக்கும் போராட்டங்களுடன் நாம் இணையவேண்டும். மோசமான பொருளாதார நிலைமைகள் அங்கு நிலவுகின்றன. பாசிச சக்திகள் மேலோங்கி வருகின்றன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் எதிர்த்துப் போராடிவருகின்றனர்

*?? சிறுபான்மையினர்க்கான அதிகாரப்பகிர்வில் முஸ்லிம் மக்கள், மலையக மக்களுக்கான பகிர்வு குறித்து தங்களது கட்சியின் நிலைப்பாடு என்ன?*

**OO** அவர்களுக்கு வேறான அபிலாசைகள் உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அவர்களுக்கான சுயாட்சி அடிப்படை அவசியம். உண்மையான ஜனநாயகம் அதுதான்!

⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐

வாசுதேவ நாணயக்காரவுடனான இந் நேர்காணல் கொழும்பிலுள்ள நவ சமசமாஜக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் வைத்து மனிதம் வாசகர் ஆசிரனால் மேற்கொள்ளப்பட்டது. இந் நேர்காணலில் மொழிபெயர்ப்பு உதவிபுரிந்த திருநாவுக்கரசுவுக்கு மனிதம் தனது நன்றிகளைத் தெரிவிக்கின்றது.

⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐⇐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ் தொடர்ச்சி ........

# தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல் !

***(கலாநிதி க. கைலாசபதியின் ஆய்வு :***

*ஈழத்துத் தேசிய இலக்கியத்திற்கான ஊற்று மூலம் ஆறுமுக நாவலரிடத்தில் இருந்தே பிறப்பெடுத்துள்ளது என்கின்ற போதிலும், அதற்கான (ஈழத்துத் தேசிய இலக்கியம்) தவம், அல்லது மரபு கைலாசபதியினாலேயே நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை சென்ற இதழில் பார்த்தோம். )*

TMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTM

*இவ்விதழில் கைலாசபதியின் சமூகவியல், கலை இலக்கியக் கோட்பாடு பற்றிய சுருக்கமான விமர்சனத்தை நோக்குவோம். கலாநிதி கைலாசபதியை விமர்சிக்கும் ஆற்றல் போதாமையை மனங்கொண்டு பிற ஆய்வாளர் முன் வைத்திருக்கும் விமர்சனங்கள் மீதான தாற்பரியத்தைக் கூறுவதற்கு மட்டுமே நான் இக் கட்டுரையில் முனைந்துள்ளேன்.*

TMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTMTM

***வி.லோகதாஸ்***

சமூகவியற் பார்வையினூடே தமிழ் இலக்கியத்தை ஆய்வதற்கு முன்னோடியாக விளங்கியவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை ஆவார். 'திறனாய்வுத் தந்தை' என்று போற்றப்படுபவரும் இவரே! இவரை அடுத்து தமிழ் இலக்கியத்தில் சமூகவியல் நோக்கத்திற்கு ஊக்கமளித்து உரமேற்றியவர்கள் தமிழகத்தில் நா.வானமாலை, எஸ்.இராமகிருஸ்ணன், சிதம்பர ரகுநாதன், போன்றோரும், ஈழத்தில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரும் ஆவர். இவர்களிலும் சமூகவியல், கலை இலக்கிய கோட்பாடுகளுக்கு வலிமை சேர்ப்பதில் கைலாசபதி முதன்மையானவராகத் திகழ்கிறார்.

சமூகவியல் நோக்கில் ஆழ்ந்த அறிவும், அனுபவமும் மிக்கவரான கைலாசபதி ஆறுமுகநாவலரது விசயத்தில் ஒருபக்கப் பார்வையுடையவராக மட்டும் இருந்தமைதான் ஏன் என்று புரியவில்லை. நாவலரின் தமிழ்த் தொண்டினையும் இலக்கியப் பணிகளையும் வியந்து போற்றிய கைலாசபதி அவர்கள், சாதிய ஒடுக்கு முறைகளையும் பெண்ணடிமைத்தனத்தையும் வலியுறுத்திய நாவலரின் பிற்போக்கு கருத்துக்களை பரிசீலிக்கத் தவறியமையை – இனிமேலும் மூடி மறைத்துவிட முடியாத வகையில் (தாயகம் 22 இல்) – அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள் எழுப்பியுள்ள கேள்வி நுனித்து நோக்கற்பாலதே.!

*சாதியம் சம்பந்தமான நாவலர் கருத்துப் பற்றியும், பெண்கள் நிலைபற்றிய நாவலர் கருத்துப் பற்றியும் கைலாசபதி எந்தக் கட்டுரையிலும் குறிப்பிடவில்லை. எனினும் தீண்டாமை ஒழிப்பியக்கப் போராட்டத்தில் கைலாசபதி பங்குபற்றியுள்ளார். மேலும் பெண்கள் பற்றிய கருத்துக்களை 'அடியும் முடியும்' என்னும் நூலில் அகலிகை கதையின் தமிழ் இலக்கிய நிலைப்பட்ட வளர்ச்சியை ஆராயும் பொழுது ஓரளவு விளக்கமாக எழுதியுள்ளார். ஆயினும் இந்த இரு விடயங்கள் பற்றியும் நாவலர் கொண்டிருந்த எண்ணங்கள் பற்றிக் கைலாசபதி எதுவும் குறிப்பிடாமல் விட்டதேன் என்பது ஆராயத்தக்கது.*

***– தாயகம் 22, பக்கம் 21***

சமூகவியல் (மாக்சிய வரலாற்றுப் பொருள்முதல்வாத, இயங்கியல்) பார்வையுடன் கூடவே சங்க இலக்கியங்களிலும் இருந்த கைலாசபதியின் ஆழ்ந்த அறிவு ஒப்பியல் ஆய்விலும் சிறப்பாக வெளிப்பட்டது. தமது கலாநிதிப் பட்டத்திற்காக தமிழ் இலக்கியத்தை கிரேக்க இலக்கியத்துடன் ஒப்பீடு செய்ததின் விளைவுதான் 'தமிழ் வீரகப் பாடல்' (Tamil Heroic Poetry) எனும் அவரது ஆங்கில நூலாகும். இவ்வாறே பாரதியையும் தாகூரையும் ஒப்பீடுசெய்து 'இரு மகாகவிகள்' என்ற ஒப்பியல் நூலைப் பிரசவித்தார். **இயற்பண்புவாதம்** (Naturalism) **யதார்த்தவாதம்** (Realism) போன்ற கலை இலக்கியக் கோட்பாடுகளினூடே தமிழ் இலக்கியங்களை நோக்கிய கைலாசபதி, 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த டி.குயின்ஸியின் ***ஆற்றல் இலக்கியம், அறிவிலக்கியம்*** கோட்பாடுகளுடனும் உடன்பாடு கொண்டவராகவே கூறத் தோன்றுகிறது. இதனாலேயே கலை இலக்கியங்களில் சமூகவியலுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியத்துவம் அளித்ததுடன் 'யாதார்த்தவாத இலக்கியங்கள்' தீர்வினை கூறுவதாக அமைய வேண்டும் என்ற கருத்தினையும் கொண்டிருந்தார்.

இத்தகைய சில இலக்கியக் கோட்பாடுகள் இன்று மிகவும் சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. கலை இலக்கியத்தில் சமூகவியலுக்கு முக்கியத்துவம் அளித்த கைலாசபதி அவர்கள் அழகியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தவறியது பற்றி எம்.ஏ.நு:ஃமானின் கருத்துக்களினூடாகப் பார்ப்போம்.

கைலாசபதிமீது எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. இலக்கியத்தின் சமூகவியல் அம்சங்கள் பற்றியே பெரிதும் அக்கறை செலுத்தியவர் அவர். அதன் அழகியல் பற்றிய அரவது எழுத்துக்கள் மிகவும் குறைவு. இலக்கிய அழகியல் சார்ந்த அவரது சில மதிப்பீடுகளோடும் கருத்துக்களோடும் எனக்கு ஆரம்பம் முதலே கருத்துவேறுபாடுகளும் உண்டு. 1968ம் ஆண்டிலேயே கவிதை பற்றிய அவரது சில கருத்துக்களை விமர்சித்து நான் கட்டுரை எழுதியிருக்கிறேன். துரதிஷ்டவசமாக அது பிரசுரமாவில்லை.

கேசவன் போன்ற இயந்திரப் பாங்கான மார்க்சிய விமர்சகர்கள் தோன்றுவதற்கு கைலாசபதியும் ஒருவகையில் காரணமாக அமைந்திருக்கிறார் என்பது என் அபிப்பிராயம். கேசவன் ஆதர்சமாகக் கொள்ளும் சண்முகரத்தினத்தின் 'ஆக்க இலக்கியமும் அழகியலும்' கைலாசபதியின் 'முற்போக்கு இலக்கியத்தின் அழகியல் பிரச்சினைகள்' ஆகிய இரு கட்டுரைகளும் இத்துறை பற்றிய மோசமான கட்டுரைகள் என்பது என் அபிப்பிராயம்.

கலை இலக்கியத்தில் அழகியலை வலியுறுத்துவது முற்போக்கு விரோதம் என்ற மனோபாவத்தையே கைலாசபதி தன் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார். முற்போக்கு இலக்கியத்துக்கு அழகியல் பிரச்சினைகள் உண்டு என்றும் அதுபற்றி தனியாக ஆராயவேண்டும் என்றும் அக் கட்டுரையில் அவர் கூறுகின்றார். ஆனால் அதற்காகவே எழுதப்பட்ட அந்தக் கட்டுரையில் அவர் அதை ஆராயாமல் அழகியலை வலியுறுத்துபவர்களுக்கு எதிரான பழைய வாதங்களை மட்டுமே முன்வைத்தார். முற்போக்கு இலக்கியத்தின் தொடக்க காலத்தில் (அதாவது 1960 களில்) அழகியல் பூச்சாண்டி காட்டி அதனை எதிர்த்த சுத்தக் கலைவாதிகளைப் பொறுத்தவரை கைலாசபதியின் கருத்துக்கள் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் 70, 80 களில் மார்க்சிய வட்டாரத்தில் இருந்தே அழகியல் பிரச்சனைகள் பற்றிப் பேசத்தொடங்கிய புதிய சூழலில் அவரது குற்றச்சாட்டுக்கள் பயனற்றவை. 80 களின் தொடக்கத்தில் இலக்கிய அழகியல் பிரச்சினைகள் பற்றி ஈழத்தில் காத்திரமான வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. அதன் ஒரு வெளிப்பாடே கைலாசபதியின் கட்டுரை.
**(மாக்சியமும் இலக்கியத் திறனாய்வும், பக். 82 – 83)**

மேலும் தமிழ் நாவல் இலக்கியத்தில் யதார்த்த இலக்கியத்திற்கு கைலாசபதியினால் எழுதப்பட்ட நாவல்கள் பற்றி நு:ஃமான் கூறுகையில்.........

கைலாசபதியின் தமிழ் நாவல் இலக்கியம் குறைபாடுகள் இல்லாத அபிப்பிராய பேதத்தக்கு இடமில்லாத முழுநிறைவான ஒரு நூல் அல்ல. அத்தகைய ஒரு நூல் எழுதப்படுவது சாத்தியமும் அல்ல. எனக்கு உடன்பாடு இல்லாத கருத்துக்கள் சில இந் நூலில் உண்டு. உதாரணமாக ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்', இளங்கீரனின் 'நீதியே நீ கேள்', கணேசலிங்கனின் 'செவ்வானம்' முதலிய நாவல்களை கைலாசபதி யதார்த்த வாதத்துக்கு உதாரணமாகத் தருவதைக் குறிப்பிடலாம். இந் நாவல்கள் யதார்த்த வாதத்துக்குத் தகுந்த உதாரணங்கள் அல்ல என்பது என் கருத்து. 'பஞ்சும் பசியும்' தமிழ்ச் சினிமாக் கதைப்பின்னல் அமைப்பில் அமைந்த ஒன்றே. பஞ்சாலைத் தொழிலாளர்களின் வாழ்க்கையை அது நன்கு சித்தரிக்கவில்லை. இளங்கீரனின் நாவல் மிகை உணர்வும் கற்பனைப் பண்பும் மிக்கது. கணேசலிங்கனின் செவ்வானம் வர்க்கப் போராட்டம் பற்றிய ஆய்வை அடிப்படையாகக் கொண்டு அதை விளக்கும் முறையில் பாத்திரங்களை உருவாக்கி உலவ விட்டுள்ள ஒரு செயற்கைப் புனைவாகவே எனக்குத் தோன்றுகிறது.
**(அதே நூல் பக். 222 – 223)**

கலை இலக்கியத்தில் தீர்வு கூறல் பற்றிய பிரச்சனையை நு:ஃமான் பின்வருமாறு விளக்குகிறார்.

சுரண்டலால் பாதிக்கப்பட்ட பாத்திரம் கடைசியில் விழிப்படைந்து ஒரு கட்சியில் அல்லது இயக்கத்தில் அல்லது ஒரு தொழிற்சங்கத்தில் சேர்வதாக முடிவடையும். அல்லது பிற்போக்குச் சுரண்டல் வன்முறைக்கு எதிராக மக்கள் புரட்சிகர வன்முறையில் இறங்குவதாக முடிவடையும். எப்போதும் இத்தகைய நாவல்களில் போதனை புரிந்து விழிப்பூட்டும் ஒரு பாத்திரமாவது இடம்பெற்றிருக்கும். பெரும்பாலும் இந்தப் பாத்திரம் வெளியில் இருந்து வருவதாக இருக்கும். இவற்றில் ஒரு போதனைப் பண்பு எப்போதும் வெளிப்படையாக இருக்கும். இத்தகைய முடிவுகள் அந்தக் குறிப்பிட்ட பாத்திரங்களின், அவர்களின் வாழ்க்கைச் சூழலின் தன்மைகளோடு எந்தளவு பொருந்துகின்றது என்பதைப்பற்றி இவர்கள் கவனிப்பதில்லை. இப்படி ஒரு தீர்வு இல்லாவிட்டால் அந்தப் படைப்பு பூரணமாவதில்லை என்ற உணர்வு இவர்களிடம் ஊறிப் போயுள்ளது. இவ்வாறு படைப்பதைத்தான் இவர்கள் இலக்கியத்தில் தீர்வு அல்லது வழிகாட்டல் என்று கருதுகிறார்கள் போலும்.

ஆனால் மாபெரும் புரட்சிக்கர எழுத்தாளர்கள் என்று கருதப்படும் கார்க்கி, லூசுன் ஆகியோரின் படைப்புக்களை

www.tamilarangam.net

எடுத்து ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் இவர்கள் கருதும் வாய்ப்பாட்டு ரீதியான தீர்வுகள் சொல்லப்பட்டிருப்பதை நாம் காணமுடியாது. கார்க்கியின் 'தாய்' இந்த வகையில் வழிகாட்டும் இலக்கியம் என்றும் கூறப்படுவதுண்டு. ஆனால் ஒரு புரட்சிகர சூழலில் எழுதப்பட்ட அந்த நாவல் அந்த புரட்சிகர நடைமுறை அனுபவத்தை உண்மை பூர்வமாகச் சித்திரிக்கின்றதே தவிர வாய்ப்பாட்டு ரீதியான தீர்வு எதனையும் தருவதில்லை. அந் நாவலைப் படிக்கும்போது ஒரு புரட்சிகர நடைமுறை பற்றிய அனுபவத்தைத்தான் நாம் பெறுகின்றோம். சூழ்நிலைகள் மனிதர்களை எவ்வாறு வார்த்தெடுக்கின்றன என்பதைத்தான் பார்க்கின்றோம். அதில் வரும் பாத்திரங்கள் நமது ஆளுமையை மீள்வார்ப்புச் செய்வதை உணர்கின்றோம். கடந்த ஆண்டு இந்த நாவலை மீண்டும் படித்தபோது இன்றைய ஈழத்துச் சூழ்நிலையில் அது ஒரு புதிய பரிமாணத்தில் என்னை இவ்வாறு பாதித்ததை உணர்ந்தேன்

**(அதே நூல் பக். 59-60)**

சத்தியஜித்ரேயின் 'பதர் பாஞ்சாலி' யை ஒரு இயற்பண்புவாதப் படைப்பு என்பர். ஆயினும் நமது சமூக யதார்த்தை அது நமது முகத்தில் அறைந்து காட்டுவதை மறுக்கமுடியாது. புதுமைப்பித்தனின் 'மகாமசானம்' ஒரு சமூகப் பிரக்ஞை உள்ள வாசகனின் உணர்வை உலுப்பாமல் போகாது.

**(பக்கம் 64-65)**

கலை தனக்குரிய ஒரு பாஷையில் பேசுகின்றது. அது எப்பொழுதும் ஒரு கருத்து (Idea) என்ற அடிப்படையில் கிரகித்துக் கொள்ளப்படுவதில்லை. நான் ஏற்கனவே சொன்னதுபோல நமது உணர்வோடு, அனுபவத்தோடு பேசுகின்றது. நமக்குள் கலைத்துவப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நமது உணர்வையும் அனுபவத்தையும் கூர்மைப்படுத்துகின்றது. வாழ்க்கை பற்றிய ஒரு விழிப்புணர்வை, பிரக்ஞையை ஏற்படுத்துகின்றது. இதுதான் கலையின் பணியும், பயனுமாகும். டேவிட் கிறெய்க் இதை இவ்வாறு சொல்கிறார்: "தொடர்ச்சியான கலை அனுபவங்களினாலும் அதனோடு இணைந்து செயற்படும் வேறு அம்சங்களினாலும் ஏதாவது செய்ய வேண்டும். என்ற உணர்வினை நாம் பெறுகின்றோம். அல்லது குறைந்த பட்சம் 'இனிச் செய்ய வேண்டியது என்ன' ? என்ற கேள்வியையாவது நமக்குள் எழுப்புகின்றோம். ஒரேயொரு காரணி மட்டும் நம்மைச் செயலுக்குத் தூண்டுவதில்லை. நாம் செயற்படும்போது நமது முழு ஆளுமையும் அதில் சம்பந்தப்படுகின்றது. இலக்கியம் நமது அனுபவத்தை விலாசப்படுத்துவதன் மூலமும், ஒழுங்கு செய்தலின் மூலமும் நமது ஆளுமையை உருவாக்க, அல்லது மீள்ஒழுங்கு அமைக்க உதவுகின்றது. (Marxists on Literatur, P.22 )"

ஆகவே கலை இலக்கியம் ஒரு அரசியல் அல்லது சமூகவியல் பகுப்பாய்வுபோல சமூகப் பிரச்சனைகளை விளக்கி அதற்குத் தீர்வு கூறும் ஒன்று அல்ல. அது வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**(அதே நூல் பக். 65-66)**

இன்று கலை இலக்கியத்தில் பெர்டோல்ட் ப்ரெஃட் (Bertolt Brecht) இன் (1898-1956) கலைக் கோட்பாடுகள் மிகவும் கவனத்திற்குரியவை.

ப்ரெஃட்! கிழக்கு ஜேர்மனியர். பவேரியாவில் போருக்குப் பிந்திய சோசலிசப் புரட்சியில் பங்கெடுத்தவர். சிறந்த கவிஞர். நாடகப் படைப்பாளி. பிற்காலத்தில் கிழக்கு ஜேர்மன் அரசுடன்- ஸ்டாலினின் செயற்பாடுகளுடன் முரண்பாடு கொண்டவர். அந்நியமாதல், தூரப்படுத்தல், இயல்புணர்வு நீக்கல் போன்ற இவரது பிரதான கலைக் கோட்பாடுகளில் 'இயல்புணர்வு நீக்கம்' (De Familaisation) கலைக் கோட்பாடு எமது சூழலில் மிகவும் அவசியமான ஒன்றாகும். இக் கோட்பாடு பற்றி ப்ரெஃட் அவர்கள் கூறுவதை நோக்குவோம்.-

இன்றைய கலை பல்வேறு விதமான போராட்டப் பாரம்பரியங்களிருந்து தனது தொடர்ச்சியைப் பேணவேண்டியதாயிருக்கும். வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தூக்கிப் பிடிப்பதாக இருக்கும். மேலோட்டமாய்ப் பார்க்கும்போது முரண்பாடுகள் மூடி மறைக்கப்பட்டதுதானே எதார்த்தம். எதார்த்த உலகை அப்படியே பிரதிபலித்தால் முரண்பாடுகளே இல்லை என்கிற மாய உலகிலிருந்து பார்வையாளனை உலுக்கி எழுப்புவது எவ்வாறு?

ஏன், உள்ளே இருக்கும் முரண்பாடுகள் இன்னதென்றும், அவற்றிலிருந்து விடுபடுவது இப்படித்தானென்றும் படைப்பிலேயே காட்டிவிட்டால் பிச்சினை தீர்ந்துவிடும்தானே?

தீராது என்றார் ப்ரெக்ட். இந்த உலகின் துன்ப துயரங்களோடும், அவற்றைத் தீர்க்கிற வழிமுறைகளோடும் பார்வையாளனை உணர்வு ஒன்ற வைத்து வீட்டிற்கு அனுப்பிவிடுவதால் அவன் இந்த நிலையை மாற்றுகிற மனிதனாக மாறிவிடமாட்டான். மாறாக இந்தத் துன்பங்கள், இவற்றை எதிர்ப்பதற்காகச் சிலர் என இவ்வுலகம் இப்படியேதான் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கும். துன்பப்படுபவர்களுக்காக அனுதாபப்படுவோம், போராடுபவர்களின் வீரத்தைப் போற்றுவோம், அவர்கள் சிந்தும் இரத்திற்காக நாம் இரு சொட்டுக் கண்ணீர் வடிப்போம் என்று எழுந்து செல்வதாக இல்லாமல் அவனை அதிர்ச்சிக்குள்ளாக்க வேண்டும்! இந்த உலகம் இப்படியே

www.tamilarangam.net

இயங்கிக் கொண்டிருப்பது இயல்பு இல்லை என்கிற இயல்புணர்வு நீக்கம் (De Familiaisation) செய்ய வேண்டும். மரத்திலிருந்து ஆப்பிள் கீழே விழுவது இயல்புதானே என நினைத்திருந்தால்...... இயக்க விதிகளைக் கண்டுபிடித்திருப்பானா நியூட்டன்?

**(அ.மாக்ஸின் 'ப்ரெஃட்டின் இன்னொரு பரிமாணம்' கட்டுரையிலிருந்து – மன ஓசை, 89 ஏப்ரல்)**

ஒப்பியல் ஆய்வில் சிறந்து விளங்கிய கலாநிதி கைலாசபதி இத்தகைய மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரெஃட் இன் கலைக் கோட்பாடுகளை தமிழ் (கலை, இலக்கிய) உலகுக்கு அறிமுகம் செய்யத் தவறியமையை வியந்து வினாவும் அ.மாக்ஸின் கருத்துக்களை கீழே நோக்குவோம்.

நவீனத்துவத்தின் தோற்றத்தோடு கலை இலக்கிய அணுகல் முறையில் மாக்சியர்களிடையே இரு போக்குகள் உருவாயின. நவீனத்துவத்தின் உரிய மாற்றங்களோடு, சமூக மாற்றத்தில் அக்கறை கொண்ட பொதுவுடமையாளரும் எனக் கருதிச் சாதனைகள் புரிந்த மேயர்கோல்ட், ஐசன்ஸ்டைன், ப்ரெஃட், பிக்காசோ போன்றோர் ஒருபுறம்! – முதலாளியத்தின் சிதைவைக் கூவிய நவீனத்துவம் சோசலிச மனிதனை உருவாக்கப் பயன்படவே பயன்படாது என்கிற நோக்கோடு, பதினெட்டாம் நூற்றாண்டின் – அதாவது முதலாளியத்தின் தோற்ற காலத்திய – இலக்கிய வடிவமாகிய எதார்த்தவாத்தின் தொடர்ச்சியே முற்போக்கு கலையாக முடியும் என்று வாதிட்ட –இன்றளவும் வாதிட்டுக் கொண்டு இருக்கக்கூடிய – வர்கள் இன்னொருபுறம்!

இவர்களின் தந்தை என ஜார்ஜ் லூகாக்சை குறிப்பிடமுடியும். ப்ரெக்ட்டும் லூகாக்சும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடத்திய இவ் விவாதம் இந்த நூற்றாண்டின் இறுதியிலும் தமிழ்ச் சூழலில் பொருத்தமுடையதாக இருப்பதாலேயே இன்று இதுகுறித்துப் பேசவேண்டியவர்களாக இருக்கிறோம். மார்க்சிய நோக்கிலான விமர்சனத் தளத்தில் தமிழ்ச் சூழலில் இயங்கிக் கொண்டிருப்போரை மதிப்பிடவும் ப்ரெக்டின் அழகியல் கோட்பாடுகள் குறித்த அறிமுகம் உதவும் என நம்பலாம்.

புதிய முற்போக்கு அழகியலைப் படைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய அறிஞர் கைலாசபதியும், அதனை மேற்கோள் காட்டி விதந்தோதும் தோழர் கேசவனுங்கூட ப்ரெக்டின் அழகியற் கோட்பாடுகளை அறிமுகப்படுத்த முனையாததும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாததும் வியப்பிற்குரியதே.

**(அதே கட்டுரை)**

கலாநிதி கைலாசபதியின் கலை, இலக்கியக் கோட்பாடுகள் இன்று விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டமை வியற்பிக்குரிய ஒன்றல்ல என்பதை கீழே தொடரும் கைலாசபதியின் வரிகளே எமக்கு உணர்த்துகின்றன.

காலத்துக்குக் கட்டுப்பட்டும் காலத்தைக் கடந்தும் இயங்கும் இரு பண்புகள் கலை இலக்கியத்திற்கு இருப்பதனாலேயே அவைபற்றிக் காலந்தோறும் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்கின்றன.

இலக்கியத்தின் நித்தியத்துவம்பற்றி ஒவ்வொரு தலைமுறையிலும் முடிவற்ற சர்ச்சைகள் நிகழக்கூடுமாயினும் அதன் அடிப்படைப் பண்பு ஒன்று உண்டு. அதுதான் இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்குமுள்ள பிரிக்கவியலாத பிணைப்பு ஆகும்.

**('ஈழத்து இலக்கிய முன்னோடிகள்' –பக்கம் 47)**

60ம் ஆண்டுக் காலப்பகுதியில் 'கலை கலைக்காக' என்ற கோட்பாடு உரத்தொலித்தபோது (தமிழகத்தில் மக்கள் இலக்கிய –மாக்சிய– விரோதிகளாக விளங்கியவர்கள் க.நா.சுப்பிரமணியம், வெங்கட்சாமி நாதன் குழுவினர்) பலவித எதிர்ப்புக்களின் மத்தியில் சமூகவியற் பார்வையினூடே தமிழ் இலக்கியத்தில் நவீனத்துவம் குறித்தும், கலை இலக்கியத்தின் சமூகப் பயன்பாடு பற்றியும் வலியுறுத்திய முன்னோடிகள் பலரில் கைலாசபதி முதன்மைப் பாத்திரம் வகித்து.....
இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாக திகழ்கிறார்!

**⇐⇐⇐ முற்றும் ⇐⇐⇐**

www.tamilarangam.net




நூல் விமர்சனம் என்ற பகுதி என்னைப் போன்ற இலக்கியத் தாகமுடையவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். அங்கே இலக்கியப் படைப்புக்கள் பற்றிய ஒரு கருத்துகோளை என்னால் கண்டுகொள்ள முடிகிறது.

'மனிதம்' மனிதம் போன்றே இனியும் பூ ரணமாக வர வாழ்த்து!

**எம். என் முகமட் பாரிஸ்**
கலாவெவ, இலங்கை

மனிதம் அமைப்பாகயிருந்த தன்மை, சிறப்பு ஒருவித ஒழுங்கு மின்னுகிறத. நான் நினைக்கிறேன், அதி சிரமங்களோடுதான் இந்த வெளியீட்டுப் பணி தொடர்கிறது என்று!

பிறமொழி நெருக்கத்திற்கிடையில் 'மனிதம்' விற்பனையாவது இன்னொரு கஷ்டம்.

கட்டுரைகள் விசாலமான தகவல்களைத் தந்தன. புகலிட தமிழ்ச் சஞ்சிகைகளால் கிடைக்கின்ற நல்லவைகளில், இப்படியான சர்வதேச விவகாரங்கள் தொடர்பான கட்டுரைகள் முதலிடம் பெறுகின்ற அந்தந்த நாட்டின் சில நடைமுறைகளை பாதியாகவேனும் புரிந்துகொள்ளக் கிடைக்கின்றது.

காகம் கலைத்த கனவு பற்றிய நூல் விமர்சனம், முழுமை பெறாததாக 'சப்' என்று இருக்கிறது. சோலைக்கிளியின் கவிதைபற்றி இன்னும் சொல்லியிருக்க வேண்டும். அது ஒரு முழுமையான விமர்சனம் அல்ல. கவிதைகள் திருப்தி தரவில்லை. சிறந்த மொழிபெயர்ப்புக் கவிதைகள் ஒன்று என்றாலும், உள்ளடக்கம் பார்த்து ஒவ்வொரு இதழிலும் பிரசுரித்தால் என்ன ?

மனிதத்தின் அமைப்பு வேகம் கொள்ளவும், குரல் உரத்து ஒலிக்கவும் எனது வேண்டுதல்கள்!

**எம். எல். எம். அன்சார்**
இலங்கை

மனிதம்-19 இல் வெளிவந்த 'தேசிய சக்தியும்-பாசிச சக்தியும் (புலியின்) பற்றிய சிவசேகரத்தின் கட்டுரைக்கு எனது வாழ்த்துக்கள்!

'இங்கேயும் சில. . . ' என்ற தலைப்பில் மனிதம்-19 இல் வெளிவந்தவை யாவும் வாசித்தேன். (Luzern) புகையிரத நிலையத்தில் மனிதத்திற்கு ஏற்பட்ட நிலையறிந்து மிகவும் ஆத்திரமும் ஆவேசமும் கொண்டேன்.

**சி. பிரதீப்**
ஜேர்மனி.

மனிதம் சஞ்சிகையை ஒரு நண்பனிடம் பார்த்தேன்.

அதிலே எத்தகைய மொழி, இன, மத சார்பின்றி நடுநிலைமை வகித்து எழுதியது எம்மை மிகவும் கவர்ந்த ஒரு விடயமாகும். பாபரி மசூதி பிரச்சினையில் உங்கள் கண்ணோட்டமே எங்கள் உள்ளங்களில் எரிகின்ற நெருப்பினை அணைத்துவிடக் கூடுமோ என்று எமக்குத் தோன்றுகிறது.

**எம். வை. எம். நிஷ்தார்,**
இலங்கை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களுக்கு கிடைக்கும் புலம் பெயர்ந்தோர் வெளியீடுகளில் மனிதமும் ஒன்று. எங்களால், எங்கள் ரசனைக்குத் தகுந்த பத்திரிகையெனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் மனிதத்தில் வெளிவரும் அனைத்து விடயங்களுடனும் எங்களுக்கு உடன்பாடென்றில்லை.

ஆனால் மனிதம் தொடர்ந்து வரவேண்டுமெனும் ஆர்வம் ஏராளம் உண்டு. .

அயோத்திக் கரசேவையும், தீபனின் இரத்தப் புயலுமாய் அட்டைப்படம். இந்திய அரசியலின், அரசியல் வாதிகளின் திருவிளையாடல்தான் அது. ஆங்கிலப் பழமொழியொன்று உண்டு. Prevention is better than cure என. குணப்படுத்துவதைவிட வராமல் தடுப்பதே மேல் என. அப் பிரச்சினையை (அயோத்தி) நரசிம்மராவ் அவர்கள் வராமல் தடுக்கவுமில்லை. குணப்படுத்தப் போவதுமில்லை. ஏனெனில் பாபர் மசூதி இடிப்பிற்கு அவரின் மறைமுக ஆதரவும் உண்டு என்பது உண்மை. நினைத்திருந்தால் இதனைத் தடுத்திருக்கலாம்.

வசந்தனின் 'அயோத்தி – வரலாற்றில் ஏற்படுத்திய காயம்' பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தது.

'காகம் கலைத்த கனவு' விமர்சனம் வ. ஐ. ச. ஜெயபாலனால் எழுதப்பட்டு சுவடுகளில் வெளியாகியிருந்தது. மனிதத்தில் வி. லோகநாதனால் எழுதப்பட்டிருந்தது.

இரண்டும் இரண்டு கோணங்களில் இருந்து எழுதப்பட்டமையால் எமக்கு பல தகவல்கள் கிடைத்தன.

'ஜேர்மனியில் இனவாத சிந்தனைகள்' உலகம் முழுவதுமான பொதுப் பிரச்சினை இதுதான் என எண்ணவைத்தது.

'இங்கேயும் சில. . . . . '. மனதில் குமிழியிட்ட வேதனை இன்னும் அடங்க மாட்டேன் என்கிறது. புலிகளின் ஈனத்தனமான பகுதியின் எடுத்துக்காட்டு.

குடாநாட்டில்தான் என்றால் வெளிநாட்டிலும் அதுதான் தங்கள் குணமென . . . . . . . நிரூபித்துள்ளன.

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு 45 வருடப் பூர்த்தியில் எல்லோருக்கும் வந்ததுபோல் உங்களுக்கும் மலையக மக்கள் பற்றிய சிந்தனை வந்துள்ளதுபோல் தெரிகிறது.

தொடர்ந்தும் மலையகத்திற்கு ஓர் இடம் பத்திரிகையில் ஒதுக்கினால் சிறப்பாக இருக்குமென எண்ணுகிறேன்.

'பசி தீர்ந்தது'. வித்தியாசமான கோணத்தில் படைக்கப்பட்டிருந்தது, கவலையைத் தோற்றுவித்தது.

மலினத்தன அரசியலைப் பற்றிய 'முதல் குரல்' படவிமர்சனம் தேவையானதொன்றுதானா ?

**பா. மணிவண்ணன்**

இலங்கை

♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣

மனிதம். ஆழமான விசயங்களை ஜனநாயக பூர்வமாக ஆழ்ந்த புரிதலுடன் வந்து கொண்டிருப்பதற்கு வாழ்த்துக்கள்!

புலிகள் பொலனறுவையில் நான்கு கிராமங்களில் புகுந்து கொலை வெறியாட்டம் போட்டு மனித உரிமைகளை மறுத்ததாயினும் சரி. . . . . .

Luzern இல் மனிதத்தை போலீசிடம் காட்டிக் கொடுத்ததாயினும் சரி. . . . . .

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள 9 வது அறிக்கையும் சரி. . . . . புலிகளின் பருமோசமான பாசிச முகத்தினைக் கண்டுகொள்ள, அவர்களைப் பற்றி எமது அரசியல் சக்திகளிடையே விவாதிக்க, கூடுதலான ஆயுதமாகும். மேற்படி விசயங்கள் ஏற்கனவே மனிதத்தில் வந்துள்ள 'புலிகள் ஒரு அரசியல் இயக்கமல்ல, நவீன இராணுவம் வைத்துள்ள ஒரு கும்பல்' எனும் கட்டுரையினை மெய்ப்படுத்துகிறது என்பது என் கருத்து!

'பச்சைப்படகு பயணம்' என்னை மிகவும் மெய்சிலிர்க்க வைத்துவிட்டது.

'அயோத்தி – வரலாற்றில் ஏற்படுத்திய காயம்' மனித நாகரிகத்திற்கு பிற்போக்குவாதிகள் விடுத்துள்ள மிகப்பெரிய சவால்! மனிதம் விசயத்தை தெளிவுபடுத்தியிருக்கிறது. எனினும் இந்த மதவாதிகள் பற்றி சாதிய, சமூக அமைப்புப் பற்றி இன்னும் விரிவாக ஆழமாக தொடர்ந்து எழுதவேண்டும் என்பது என் கோரிக்கை.

**என். எம். ராசு**

♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣♣ திருப்பூர், தமிழ்நாடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயுமானவனும் தேசமும் நானும்

பாரில்
கலாவேல இலங்கை

சின்னச் சின்னதாய்
கறுப்புப் படிந்த வெண்மேகம்,
காராகி ...
'குளிர்மை' குழைத்துவிட ...
காற்று
சில் சில் எனக் குத்தி வீசுகிறது.

000

நேற்றுத்தான்
வயல்காட்டுத் தெருவின்
புழுதிப் படலமெலாம்
என் விழிமருளச் செய்ய ...
வெள்ளைச் சாரமெலாம்
மங்கலாய் மாற ....... பயணப்பட்டிருந்தேன்.

000

என்
பேனா நகர்த்திய
தாயுமானவனின்
கிழக்குத் தேசமது

000

இந்து சமுத்திரப் பேரலைகளின்
விவாதச் சத்தம்
அலைகரை மோதும் ....
மரணச் சத்தம்
இதயத்துள் சலசலக்கும்

000

முந்திரிகை மரங்களிலெல்லாம்
கிண்ணஞ் சுமக்கும் பழங்கள்
தொங்கிக் கிடந்தது

000

இன்று ...!
நீண்ட சாலைகளில்
'ஷெல்' ஈ மொய்த்து ...
மேடு பள்ளங்கள்

000

கலகலத்த இல்லமெலாம் ...
சுவர்களின்
துப்பாக்கிச் சன்னங்கள் தொற்றி
சின்னம்மை போட்ட தேகமாய்.

000

அந்த சின்ன வீட்டின்முன்
குடைவிரித்த மாமரம்
இலையுதிர்த்திருக்கிறது
சமாதானம் வரும் என்ற
என்
நம்பிக்கையைப்போல்

000

அன்றைய பௌர்ணமி
மணல் தேசத்தில் ஓவியமாக ...
விசாரிப்புகளில்
இதயந்திறந்தேன்.

000

அந்த மணல்
என் பாதங்களைத் தடவியது
இப்போ
கரித்துண்டுகள், சட்டிபானை, ஓட்டுச் சில்லுகள்
கலந்துபோய் ...
எரிந்த வீட்டின் நினைவுக்காய்.

000

மேகம் கார் கழுவிவிட
இதயத்தின் ஓர் மூலையில்
"இனி இளவேனில் கோலமிட
வசந்தம் வரும்.
விழிகளுக்குள் .... பச்சை உட்கார்ந்து
மனசுக்குள்
மழை பொழியும்

ஆனால் சமாதானந்தான் ....?"

000

⊥ooooooooooooooooooooooooooooooooooooooooooooooo⊥

*அண்மையில் அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகம் ஒன்றினால் புத்தமதம் பற்றிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதை அவுஸ்திரேலிய தொலைக்காட்சி நிறுவனமொன்று ஒளிபரப்புச் செய்தது.. புத்தமதம் தர்மத்தையும் யோகாசனத்தையும் கூறுகின்றபோது ஏன் புத்தமதப் பிக்குகளும் புத்தமதத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தை விரும்புகிறார்கள்? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பிக்குகள் சரியான பதிலைக் கொடுக்காமல் 'சளாப்பிவிட்டார்கள்'.*

*முடிவில், ஒரு ஆராய்ச்சியாளர் சொன்னார்.....*

*"புத்தமதம் சொல்லும் சில வாதங்கள்கூட விதண்டாவாதங்களும் உண்மையற்ற கருத்தியலும்தான். பிக்குகள்கூட உழைப்பை மறுத்து தங்களின் உணவுக்குப் பிச்சை எடுப்பதுதான் உண்மை" என்றார்.*

அவுஸ்திரேலியாவில் இருந்து — **மனிதம் வாசகி.**

⊥oooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooooo

www.tamilarangam.net

# புத்தாண்டைக் கொன்ற எனது நாள் (அட்டைப்படக்கவிதை)

இரத்த வாடையை
சுமந்து
களைத்த காற்று
தவழ்ந்து திரிந்து

காலமோ
இன்னொரு புத்தாண்டை
வீசிவிட்டுப் போனது

ஏப்ரல் என்றதும்
புத்தாண்டை மீறி
எழுபத்தொன்றின் ஏப்ரல் தழும்புகள்
என்னைச் சுமந்து சென்றது

● பாலமோகன்

ஆண்டுகள் போயும்
ஜேவிபி வேட்டை
தொடர்ந்தே நடந்தது
இளமையை காத்த உடல்களை எல்லாம்
காவு கொடுத்த
தென்திசை கிராமமொன்றில்
தொப்பென விழுந்தேன்

குழந்தைகளும் முதியவர்களும்
சூழ்ந்து நின்றனர்

அம்மா அப்பா இருவரையும் இழந்த
சிறுமியொருத்தியின் கண்ணீர் துளிகள்
என்னை சிறையிட்டது

மெய்சிலிர்த்து
உடல் நடுங்கியது

அவளின் வெறித்த பார்வை
இரும்புக் கம்பிகளாய்
என்னை மூடி
கூண்டாய் இறுக்கியது

துவண்டு போனேன்
மனிதன் என்பதால்
எனக்கிது வேண்டும்
இன்னமும் வேண்டும்